தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

புதன்கிழமை, 1979 ஏப்ரல் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவைகூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாவட்ட துணை ஆட்சியர் பதவி.

குறுகிய கால வினா எண் 55— திரு ரா. கிருஷ்ணன், திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தேர்வாணைக்குழுவால், 1978-ல் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த திரு சந்திரசேகரன், பழங்குடியினர் என்று டிப்டி கலெக்டராகத் தேர்வு செய்யப்பட்டாரா ?

(ஆ) அத்தேர்வு ரத்து செய்யப்பட்ட பிறகு அப்பதவி என்ன ஆயிற்று ?

(இ) அவருக்கு அடுத்து கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) திரு. கே. சந்திரசேகர் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான தகவல் இல்லை. ஆனால் அவர் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த 'காட்டு நாயக்கன்' வகுப்பைச் சேர்ந்தவர் என்று விண்ணப்ப மனுவில் குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் அவர் துணை மாவட்ட ஆட்சியராக 1978ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ஆ) 1978ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு இடம் நிரப்பப்படாமல் உள்ளது. அவ்விடத்தை 1979ஆம் ஆண்டிற்கு நிரப்ப எடுத்துக் கொள்ளலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது. அவ்வாறே 1979ஆம் ஆண்டிற்கு தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்த ஒருவரை கூடுதலாகத் தேர்ந்தெடுக்குமாறு தமிழ்நாடு அரசு பணி தேர்வாணைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 1978ஆம் ஆண்டில் திரு சந்திரசேகருக்கு அடுத்து கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்தவருக்கு பதவியளிக்க விதிகள் இடம் தரவில்லை.

[1979 ஏப்ரல் 25

திரு ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த திரு சந்திர சேகர் என்பவர் போலியாக சான்றிதழ் பெற்றிருக்கிறார் என்று இரண்டு மாதங்களுக்கு முன்னால் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருந்தது. அதனால் அவர் தேர்வு செய்யப்பட்டது ரத்து செய்யப்பட்டதாகவும் அறிகிறேன். ஆனால் ஏற்கெனவே இப்படிப்பட்ட இந்த ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பலர் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட சான்றிதழ் பெற்று. எஸ்.சி., எஸ்.டி. கோட்டாக்களில் அவர்கள் தேர்வு செய்யப்பட்டிருப் பதாக அறிகிறேன். அப்படி போலியாக சான்றிதழ் பெற்றவர் கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திரு கே. சந்திரசேகர் எனபவர் குரூப் ஒன் சர்வீசுக்கு மனுப் போடுகிறபோது தான் 'காட்டு நாயக்கன்' சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சான்றிதழ் தாசில்தாரிடமிருந்து பெற்றுத் தந்து, தேர்வுக்கு வந்தார். ஆனால் அவருடைய பள்ளி இறுதியாண்டுத் தேர்வு—எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டைப் பார்த்த போது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரா என்று கேள்விக்கு எதிராக 'இல்லை' என்று அதில் இருந்தது. ஆகவே தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு சந்தேகப்பட்டு. அது சம்பந்தமாக ஆராய்ந்தபோது அத்தகைய காட்டு நாயக் கன் சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல என்பது தெளிவாகியது. அதனால் அவருடைய தேர்வு ரத்து செய்யப்பட்டு, மேலும் 3 ஆண்டுகளுக்கு தேர்வாணைக் குழு மூலம் நடைபெறும் தேர்வு களில் திரு சந்திரசேகர் கலந்துகொள்வதும் தடை செய்யப் பட்டுள்ளது. வேறு ஏதாவது இப்படி இருந்தால், அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு வி. கே. கோதண்டராமன்: சார். இப்படி வசதி படைத்த பலர் போலி சான்றிதழ்களைப் பெற்று. தேர்ந் தெடுக்கப்பட்ட பிறகு போலீசாரோ மற்றவர்களோ கண்டு பிடித்து சொன்னதற்கு பிறகு நடவடிக்கை எடுக்கக்கூடிய அள வுக்கு நிலைமை இருந்து வருகிறது. கண்டுபிடித்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கக்கூடிய இதைப்போன்ற பலர் டாக்டர்களாக இருக்கிறார்கள் ; பலர் வெளிநாடுகளுக்கு சென்று விட்டார்கள்; என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இல்லை என்று சொன்னால் இதற்குப் பிறகா வது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே. அத்தகைய சான்றிதழ் தந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளது.

(திரு ரா. கிருஷ்ணன் எழுந்தார்.)

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை கொடுத்தவர் ஒருமுறை துணைக் கேள்வி கேட்ட பிறகு மீண்டும் கேள்வி கேட்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை. இந்தக் கேள்வி ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியது. எல்லாவற்றுக்கும் விளக்கமாகப் பதிலும் வந்துவிட்டது. இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு தேர்வு செய்யப்பட்டதை 'வேக்கண்டாக' வைக்க வேண்டிய அவசியம் என்ன? திரு. சந்திரசேகர் தேர்வு ரத்து செய்யப் பட்டுவிட்டதால் அவருக்கு அடுத்தபடியாக அதிக மார்க் வாங்கிய வரை அந்த இடத்தில் நியமிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அந்த ஏற்பாட்டைச் செய்ய இப்போது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த நிலையில் அத்தகைய ஒரு காலியிடம் ஏற்பட்டால் அது அப்படியே ரத்தாகிவிடும். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் 1977-ம் ஆண்டு அதைப் பரிசீலனை செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய விகிதங்கள் இதில் கிடைப்பதில்லை என்கின்ற காரணத்தால் ஓராண்டு அல்லது ஒருமுறை இத்தகைய தேர்வுகள் நடைபெறுகின்ற போது போதுமான தாழ்த்தப்பட்ட மக்கள் வரவில்லை என்றால் அந்த இடங்களை அடுத்த முறை தேர்வு நடைபெறுகிறபோது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விதிகளைத் திருத்தி இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள், அந்த ஆண்டே அதிகமான மார்க் வாங்கிய இன்னொரு தாழ்த்தப்பட்ட மாணவர் இருந்திருப் பாரேயானால் அவருக்குக் கொடுக்கலாமே என்று கேட்கிறார், அதற்கு விதிகளிலே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு,

வினா எண் 733—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் மூன்று சதவீத இடங்களை ஒதுக்கியுள்ளது போல் மாநில அரசும் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக் கீடு செய்யும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1979 ஏப்ரல் 25

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கென்று வாரியம் ஏதேனும் இருக்கின்றதா ? ஆமெனில் அதன் உறுப்பினர்கள் யார் யார்? அந்த வாரியத்தால் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை விவரிக்க இயலுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோருக்கென்று ஒரு வாரியம் இருக்கின்றது. அதனுடைய முக்கியப் பணிகள் கீழ்வருமாறு :

(1) உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை ஆராய்வது ;

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களை வகுத்தல் ;

(3) உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்தல் ;

(4) உடல் ஊனமுற்றவர்களை ஆதரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சமூக நல நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் நிதி உதவியளித்தலைக் குறித்து ஆராய்தல் ;

(5) உடல் ஊனமுற்றவர்களுக்காக கல்வி, பயிற்சி மறுவாழ்வு துறைகளில் மறுவாழ்வுக்காக செயல்படும் நிறுவனங்களை ஒன்று திரட்டுதல்.

இந்த வாரியத்தின் தலைவர் சமூக நல அமைச்சர். அதனுடைய உப தலைவர் சமூகநலத்துறையின் செயலாளர். அதனுடைய உறுப்பினர்கள் தொழிலாளர் நலச் செயலாளர். நிதித்துறைச் செயலாளர், கல்வித்துறைச் செயலாளர், சமூக நலத்துறை இயக்குநர், வேலை வாய்ப்பு—பயிற்சித்துறை இயக்குநர். மருத்துவப்பணி, குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக்கல்வி இயக்குநர், மறுவாழ்வு பயிற்சி நிலையத்தின் கண்காணிப்பாளர், மாநில சமூக நலக் குழுவின் தலைவர் ஆகியோரும் மற்றும் அரசு சார்பற்றவர்கள் என்ற முறையில் திரு. என். இ. எஸ். ராகவாச்சாரி, தலைவர், உடல் ஊனமுற்றோருக்கான சங்கம், திரு. அந்தோணிசுவாமி, ஸ்வீடன் செஞ்சிலுவை மறுவாழ்வு தொழில், காட்பாடி, மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளாக பொதுச் செயலாளர், இந்து குஷ்ட நிவாரணச் சங்கம், கௌரவச் செயலாளர், மனநிலை குறைவுள்ளோருக்கான பால விஹார் பள்ளி, இயக்குநர், காது கேளாதவர் சங்கம், சென்னை மற்றும் சென்னை வர்த்தகசபை, இந்துஸ்தான் வர்த்தக சபை, தென்னிந்திய வேலை கொடுப்பவர் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றார்கள். அடுத்து மருத்துவத்துறையின் சார்பாக டாக்டர் டி. கே. சண்முகசுந்தரம், மற்றும் டாக்டர் ஈ. டி. செல்வம், டாக்டர் எஸ். காமேஸ்வரன் ஆகியோரும் உறுப்பினர்களாகவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் உதவி இயக்குநர், சென்னை அவர்கள் செயலாளராகவும் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு தமிழக அரசு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றது. அதன்மூலம் உடல் ஊனமுற்றோர் நல கூட்டுறவுச் சங்கம், சென்னை, வேலூர் ரௌன்ட் டேபிள் 23 டிரஸ்ட், மித்ரா, சென்னை பத்திலே இருக்கின்ற பாலவிஹார், தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு அசோசியேஷன் ஆகிய 5 நிறுவனங்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர 71 உடல் ஊன முற்றோருக்குச் செயற்கை உறுப்புக்களை வாங்கித்தருவதற்கும் இந்த வாரியம் பணஉதவி அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Training to physically handicapped persons.

*Q. No. 734—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) whether the Government have proposed to provide grants/loans to the private sector industries who impart training to physically handicapped persons; and

(*b*) if so the details of the firms who have availed of the benefits under the scheme?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கான தொழில் பயிற்சி நிலையங்களை நடத்துகின்ற தனியார்களுக்கு மானியங்கள் அளிக்கவில்லை என மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்றார்கள், ஆனால் உடல் ஊனமுற்றவர்களுக்கு மாவட்ட வாரியாக ஊன்றுகோல்களும், 3 சக்கர வண்டிகளும் வழங்கப்படுவது குறைவாக இருக்கின்றதே. இன்னும் பல பேர் அப்படிப்பட்டவர்கள் எழுந்து நடக்க முடியாத நிலையில் இருக்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் அப்படிப்பட்ட 3 சக்கர வண்டிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் 3 சக்கர சைக்கிள் வண்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தனிப்பட்ட சேவை நல இல்லங்களைச் சார்ந்தவர்களும் சில இடங்களில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு மேல் அரசின் நிதிநிலை இடம் தராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 25

திரு. செ. சிவசாமி : தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்றோர் மொத்தம் எத்தனை பேர் என்ற குறிப்பு இருக்கிறதா? அதிலே ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர்? பெண்களுக்குக் குறிப்பாக தையல் இயந்திரங்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, இது குறித்துத் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல்ஊனம் உற்றவர்கள் தங்களுடைய பெயரில் வைத்திருக்கிற சொந்தமாக உபயோகப்படுத்தக்கூடிய ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், சிறிய கார்கள் ஆகியவைகளுக்கு மோட்டார் வாகன சட்டத்தில் இருந்து விதி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இது குறித்து அரசின் பரிசீலனையில் எந்தக் குறிப்பும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாக இருந்தால், குறைந்த படிப்பு படித்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு தொழிற்சாலைகளில் வேலை கொடுத்தால், அவர்களுக்கு வருமானம் கிடைக்கும். அப்போது பெண்கள் அவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள முன்வருவார்கள். அப்படி உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த அரசு ஏதாவது தொழிற்சாலையை நடத்த உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் உடல் ஊனமுற்றவர்களுக்காக முட்டுக்காட்டில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு, அப்படி 71 பேர்கள் இருக்கிறார்கள். இது மேலும் இரட்டிப்பாக்கப்பட இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னும் 2 மாவட்டங்களில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவப்பட இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, இரண்டு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பீர்களா?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி முடிவு செய்யவில்லை.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக தனியார் நிறுவனங்களிட மிருந்து நாங்கள் அவர்களுக்கு வேலை அளிக்கிறோம், மான்யம் தாருங்கள் என்று அரசை யாராவது கேட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனத்திற்குப் பண உதவி செய்வதில்லை என்று என் பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு தனியாரும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று அரசு ஏதாவது அவர்களுக்கு உத்தர விட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட முயற்சியை அரசு மேற் கொள்ளுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர்.

வினா எண். 804—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருச்செந்தூர் தாலூகா, புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும்?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு?

திரு. மீ. வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) & (இ) ஆதலால் இக்கேள்விகள் எழ இடமில்லை.

[1979 ஏப்ரல் 25

திருச்செந்தூர் நிலவளவங்கி

வினா எண். 805—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் நிலவள வங்கியில் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் முறைகேடுகள் நடந்ததாகவும், அதற்காக அந்த வங்கியின் தலைவர் மற்றும் இயக்குநர் மேல் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், யார் யார் மீது எந்தவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 71-ன் கீழ், அவ்வங்கியின் முன்னாள் தலைவர், துணைத்தலைவர், பதினாறு இயக்குநர்கள், செயலர், தனி அதிகாரிகள் இருவர் ஆகியோர் மீது அவர்களால் செய்யப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மூ. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே என்னுடைய மாவட்டத்தைப் பற்றி கேள்வி கேட்க அனுமதி அளிக்கவில்லை. இப்போது அனுமதி அளித்ததற்கு நன்றி. எற்கெனவே அந்த நிலவள வங்கியில் இருக்கக் கூடிய பல தலைவர்கள் தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்க என்ன திட்டம் அரசு வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கிற நேரத்தில் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தவறு செய்தவர்களிடம் இருந்து ரூ. 25,061 வசூல் செய்ய இன்றையதினம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே அந்த நிலவள வங்கியின் தலைவர் மட்டுமல்ல. அதில் சம்பந்தப் பட்ட அதிகாரியும் தவறு செய்திருப்பதாக அங்குள்ள மக்கள் பேசுகிறார்கள். யார் யார் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்செந்தூர் நிலவள வங்கியின் பொறுப்பில் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் தலைவராக இருந்தார். இதனைப் போலவே அங்கு இருந்தவர்களின் பேரில் நடவடிக்கை எடுத்ததில் அங்குள்ள 18 பேர்களில் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பொறுப்பில் இருந்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு இந்த முறைகேடுகளுக்கு உறு துணையாக இருந்த இரண்டு அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள தனி அதிகாரி உடன்குடியில் கான்கிரீட் போடுவதற்கு 14,206 ரூபாய் பொதுக் குழுவில் ஒப்புதல் பெறாமலேயே, முன்கூட்டியே ஒப்பளிப்பு பெறாமலேயே செலவு செய்ததற்காக சர்சார்ஜ் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த வழக்கு இப்போது விசாரணையில் உள்ளது. இந்த கான்கிரீட் திட்டத்திற்கு அரசு எந்த நிதி உதவியும் அளிக்கவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்; இந்தக் கூட்டுறவு மோசடி வழக்குகளை எல்லாம் விசாரிப்பதற்கு மிக மிக காலதாமதம் ஏற்படுகிறது. கடைய நல்லூரில் சுமார் 3 கோடி மோசடி சம்பந்தப்பட்ட வழக்கு தயார் செய்வதற்கே நான்கைந்து வருடங்கள் ஆகி விட்டது. இதற்கு மட்டுமே கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இன்னும் கேஸ் ட்ரெயிலுக்கு வரவில்லை. இந்த அளவுக்கு காலதாமதம் இருக்கிறது. இதை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக விசேஷ கோர்ட்டுகள் அமைத்து துரிதமான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் சொல்வதுபோல், கூட்டுறவு மோசடி வழக்குகளை விரைவாக நடத்த வேண்டும் என்பதற்காகவும், இதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இதற்குப் போதுமான இயந்திரங்கள் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் மதுரையிலும் சென்னையிலும் இரண்டு நீதிமன்றங்கள் நிறுவி வழக்குகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் கவனத்தில் கொண்டு நிச்சயமாக இதை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[1979 ஏப்ரல் 25

*** ஏ. நத்தம்பட்டியில் உள்ள விவசாய நாணய சங்கம்.**

வினா எண். 806—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, ஏ. நத்தம்பட்டியில் உள்ள விவசாய நாணயச் சங்கத்தில் கையாடல் ஏதும் நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; (அ) ஆம்.

(ஆ) நத்தம்பட்டி விவசாய சேவை கூட்டுறவுச் சங்கச் செயலாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார், வணிகக்குற்றப் புலானய்வுப் பிரிவில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படவுள்ளன. கையாடல் செய்யப்பட்டுள்ள தொகையை மீளப் பெறுவதற்காக கூட்டுறவுத் துணை பதிவாளர், கூட்டுறவுச் சட்டம் 71 வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விவசாய நாணய சங்கத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சார்ந்த எல்லா நிர்வாகிகளுக்கும் எல்லா வகையிலும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அங்கே விவசாய நாணய சங்கத்தின் கட்டிடத்திற்கு வாங்கப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு போய் அவர் வீட்டிலேயே கட்டிடம் கட்டி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. எவ்வளவு ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளது? அவர்மீது இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்னும் பெண்டிங்காக ஆண்டு ஆண்டாக இருந்து கொண்டிருக்கிறது. இதன்மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்படி கூட்டுறவு சங்கத்தினுடைய தலைவர் எம். அய்யனாத்தேவர், சங்கத்தின் செயலாளர் எ. செல்லையா ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த முறைகேட்டில் ஏறத்தாழ 15,382 ரூபாய் இதில் தொடர்புள்ளதாக இருக்கிறது. அதுவகையில் இன்றையதினம் கடந்த 20—4—1978ஆம் நாள் ஒரு வழக்கு பதிவு செய்து அதை விரைவுபடுத்துவதற்கும் துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

[1979 ஏப்ரல் 25]

வறட்சி நிவாரணப் பணிகளுக்கான செலவு.

*வினா எண். 807— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு வறட்சி நிவாரண வேலைக்காக தமிழ்நாட்டில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

(ஆ) அதில் தொழிலாளர்களுக்கு எத்தனை சதவீதம் ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 54.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்ட சதவீதம் (சராசரி) பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டு உள்ளது :—

வரிசை எண்ணும் திட்டமும்.	சதவீதம் (சராசரி)
(1) துளைக் கிணறுகள்	5.8
(2) சிறுபாசன சிறப்புத் திட்டங்கள் மற்றும் சிறுபாசன விரைவுத் திட்டங்கள் ..	60
(3) வெயில் காலத்தில் பயன்படுத்தப்படும் சாலைகள்	56
(4) மண்வளப் பாதுகாப்பு	80
(5) காடு வளர்ப்பு	66

குடிநீர்த் திட்டம் நீங்கலாக ஏனைய வறட்சி நிவாரணப் பணிகளான காடு வளர்ப்பு, சிறு பாசனத் திட்டங்கள், வெயில் காலத்தில் பயன்படுத்தும் சாலைகள், மண்வளப் பாதுகாப்பு அனைத்தும், வறட்சிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகள் தரும் வகையில் செலவிடப்படுகின்றது.

[முற்பகல் 9-20]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வியின் நோக்கம், இந்த வறட்சி நிவாரணப் பணியினால், அந்தப் பகுதியிலே சாதாரண ஏழைத் தொழிலாளர்களுக்கு அதிகமாக சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான. ஆனால், நடைமுறையில் எப்படி இருக்கின்றது என்றால், கான்ட்ராக்டர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இதிலே பல்வேறு ஊழல்களும், மோசடிகளும் செய்திருப்பதாகவும்

குறிப்பாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் மோசடி செய்திருப்பதாகவும் தகவல் இருக்கிறது. அப்படிப்பட்ட முறைகேடுகளின்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது 1970-லிருந்து கணக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் புயல், வறட்சி வருகின்றபோது, அங்கேயிருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அங்கேயுள்ள தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள அரசு திட்டம் வைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் அங்கேயிருக்கின்ற வேலையற்ற தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்படுகின்றார்கள். ஆனால், எங்கே ஊராட்சி மன்றத் தலைவர்கள், பெருந் தலைவர்கள் யாராவது தவறு செய்கிறார்கள் என்று குறிப்பாகச் சொன்னால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கிழ் நிவாரணத் தொகையாக குடிசை வாழ் மக்கள் எவ்வளவு பெற்றிருக்கிறார்கள் ? இந்தத் திட்டத்தின்கீழ் அரசு எவ்வளவு தொகையை வழங்கியிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 70-லிருந்து 77 வரைக்கும் என்னிடத்திலே கணக்கு இல்லை. ஆனால், 78-லே மட்டும் கணக்குச் சொல்ல வேண்டுமானால், பாதிக்கப்பட்ட குடிசைகள் 1,40,231. அப்படி பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு கொடுக்கப்பட்ட பணம் ரூ. 89,43,146. ஆனால், இந்த நிவாரணமாக 5 கிலோ, 50 கிலோவாக கொடுக்கப்பட்ட அரிசி மட்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கொடுத்தது 1,97,77,470 கிலோ அரிசி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே கிராமப்புறங்களிலே ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட திட்டம் என்றால், உணவுக்கு வேலை என்ற திட்டம். அதற்காக இந்த அரசு இப்போது எந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது ? எப்போது இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

1979 ஏப்ரல் 25]

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978 மார்ச்சு மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் 60 கோடி ரூபாய் தமிழகத்தில் ரோடு பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொகை இங்கே செலவழிக்கப்பட்டதா ? அல்லது செலவழிக்கப்படாமல், மத்திய அரசுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78க்கு வெள்ளம், புயலுக்காக மத்திய அரசால் முன்பணமாகக் கொடுக்கப்பட்டது ரூ.20.52 கோடிதான். மானியமாகக் கொடுத்தது ரூ. 8.79 கோடி. இவைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன.

திண்டிவனம் தொகுதியில் விவசாயக் கடன்களுக்கு அபராத வட்டி.

*வினா எண். 808 :—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கிய உரக்கடன் போன்ற விவசாயக் கடன்கள், தாசில்தார் கொடுத்த டிமாண்ட்படி தொகை செலுத்தப்பட்ட பின்பும் அக் கடன்களுக்கு அபராத வட்டி என மீண்டும் கிராம அதிகாரிக்கு நெ. 1 டிமாண்டுகள் கொடுத்து வசூலிக்கும்படி தாசில்தார் உத்திரவிட்டுள்ளாரா ?

(ஆ) இந்த அபராத வட்டி எந்த கடனுக்காக எந்த ஆண்டில் எவ்வளவு தொகைக்கு டிமாண்டு கொடுத்து வசூலிக்கப்பட்டது ?

(இ) தற்போது எத்தனை நபர்கள் மீது அபராத வட்டிக்காக எவ்வளவு தொகை வசூலிக்கும்படி டிமாண்டு தரப்பட்டு உள்ளது, தாலூகா வாரியாக ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இந்த அபராத வட்டி 1377-ம் பசலி முதல் அதாவது 1—7—1967 முதல் காலம் கடந்து திருப்பிச் செலுத்தப்பட்ட பல்வேறு கடன்களுக்காக 1—7—77-ல் ரூ. 10,48,228.25-க்கு நெ. 1 டிமாண்டு கொடுக்கப்பட்டு 1—7—77 முதல் 30—6—78 வரை ரூ. 38,691.53 வசூலிக்கப்பட்டது.

(இ) திண்டிவனம் வட்டத்தில் மட்டும்தான் (1—7—77—30—6—78) 1387-ம் பசலியில் 9,967 நபர்களுக்கு அபராத வட்டிக்காக ரூ. 10,48,228-25-க்கு நெ. 1 டிமாண்டு தரப்பட்டது.

[1979 ஏப்ரல் 25

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : தலைவர் அவர்களே, இந்த அபராத வட்டியாக வசூலித்த பணத்தைத் திருப்பிப்பெற அரசு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அபராதமாக வசூலித்த பணத்தைத் திருப்பித்தர வேண்டும் என்று உறுப்பினர் ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும், அதற்கும் காரணம் இருக்கிறது. அரசு ஆணையைத் தவறாகப் புரிந்துகொண்டு, அந்த திண்டிவனம் வட்டாட்சியர் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து, ரூ. 38,000 வசூல் செய்திருக்கிறார்கள். ஏன் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது என்று அவர் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்ட பணம் திருப்பித் தரப்படும் அல்லது அவர்கள் பணம் கொடுக்க வேண்டியிருந்தால், அதிலே சரி செய்து கொள்ளப்படும்.

முதுகலை வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்க்கான இடங்கள்.

*வினா எண். 809 : திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பல்கலைக் கழகத்தில் முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை விழுக்காடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆணை சென்னைப் பல்கலைக் கழகத்தால் மீறப் பெற்றுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணைப்படி, 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் (Scheduled caste and Scheduled tribes) சென்னைப் பல்கலைக் கழக முதுகலை வகுப்புகளில் கல்வி பயில 1978-79-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு ஆணையினை சென்னை பல்கலைக்கழகம் மீறவில்லை என்பது தெளிவு.

திரு. ரா. கிருஷ்ணன்: சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகளில் இப்படிப்பட்ட 18 சதவிகித விழுக்காடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி நிரப்பப்படாமல் இருந்தால் அதை மீறுகிற நிர்வாகத்தின் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது? இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு ஆணை எண் 695, சமூக நலத் துறை, 7—6—1971-ல் 1971-72 கல்வியாண்டு முதற்கொண்டு அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 விழுக்காடு இடங்களும் பின் தங்கிய மாணவர்களுக்கு 31 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படுதல் வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையைத் தொடர்ந்து பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தல் பின்பற்றப்படுவது கல்வி நிலையங்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து அளிக்கப்படும் மானியங்களுக்கு ஒரு நிபந்தனையாக அமையும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. சௌந்திரராசன்: அமைச்சர் அவர்கள் 18 சதவிகிதம் விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் இடம் ஒதுக்கப்படுகிறது என்று அறிவித்தார்கள். மற்ற பல்கலைக் கழகங்களில் அந்த உத்தரவு கடைபிடிக்கப்படுகிறதா? அதை மீறிய பல்கலைக்கழகம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லையென்றாலும் மற்ற பல்கலைக் கழகங்களும் இதைப் பின்தொடர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கருத்து. அப்படிப் பின்பற்றாத பல்கலைக் கழகங்கள் மீது மானியங்களைத் தரும்போது அதன் அடிப்படையில் அதைப் பயன்படுத்தி தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

நெல்லை மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம்.

வினா எண் 810 : திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

(இ) விளையாட்டுப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியை இத் திட்டத்திற்குச் செலவிட அரசு முன் வந்துள்ளதா?

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்தினைக் கலந்து மாவட்ட விளையாட்டு மன்றம் மூலம் அரசின் முழு நிதி உதவியுடன் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட வேண்டும் எனும் கொள்கைக்கேற்ப பாளையங்கோட்டையில் 11—2—1978-ல் திறக்கப்பட்ட அண்ணா விளையாட்டு அரங்கத்தைத் தவிர வேறு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் திட்டமேதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. யா.சை.மு. யூசப்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அண்ணா விளையாட்டரங்கத்தில் ஒரு பக்கத்தில் மட்டுந்தான் பார்வையாளர் அமர்ந்து பார்க்கும் வகையில் மாடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடமும் ஒதுக்குப்புறமாக இருக்கும் காரணத்தால் நெல்லை நகரில் வயல் வெளியை அரசு கையகப்படுத்தியாவது நல்ல முறையில், நவீன முறையில் அந்த மாவட்ட மக்கள் நலனைக் கருதி விளையாட்டரங்கம் ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அண்ணா விளையாட்டரங்கைச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு அரங்கத்தைச் சிறப்பாகச் செய்வதற்காக நிதி கோரி நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அன்னாரின் விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

* வினா எண் 811 ; திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. கோ. ரகோத்தமன்: தென்னாற்காடு மாவட்டம், முகையூர் பஞ்சாயத்து யூனியன் 65 பஞ்சாயத்துக்களையுடையது. அதிகமான மக்கள் தொகையுடையது, நிலப் பரப்பு அதிகமாக உள்ளது. ஆகவே, உடனடியாக அதைப் பிரிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1974-ல் இப்படி ஒரு கருத்துரு இருந்தது. ஆனால் சாலை வசதிகள் அந்த வட்டாரத்தில் செய்துள்ளதன் விளைவாக அந்தக் கருத்துருவின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு பொது மக்கள் கருத்தையறிந்து முடிவு செய்யப்படும்.

திரு. துரை முத்துசாமி: பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் சமீபத்தில் வர இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பெரிய பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்று கேட்கும்போது மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருபதில் கூறுகிறார். டி.ஆர்.டி. யிடமிருந்து ஒரு பதில் வருகிறது. அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லுகிறார்கள். பெரிய பஞ்சாயத்து யூனியன்கள் பிரிக்கப்படுவதற்குக் காலவரையறை ஏதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முடிவு செய்வது மாவட்ட ஆட்சித் தலைவரல்ல. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரும் அல்ல. அரசாங்கம் தான். அரசாங்கம் சிலவற்றை இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

*வினா எண் 812 : திரு டி.ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் தொகுதியில் உள்ள ஒலக்கூர், மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊராட்சிகள் 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் இணைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவைகளைப் பிரித்தமைக்கு உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. டி.ஆர். இராஜாராம் ரெட்டி: இந்த மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோமீட்டர் தூரம் வரையில் உள்ள கிராமங்கள் கிட்டத்தட்ட 60 கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அதைப் பிரித்தால் அங்கே உள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அவசியமாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது உண்மைதான். ஆனால் 1—3—1978-லிருந்து ஊராட்சி ஒன்றிய நிர்வாக முறையில் மாற்றம் செய்வதற்கு அரசு தடை விதித்திருக்கிறது. ஆகவே, தேர்தலுக்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யலாம்.

திரு. டி.ஆர். இராஜாராம் ரெட்டி: தேர்தல் எப்போது வரும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எத்தனை வருஷம் தள்ளும்? இது ரொம்ப முக்கியமானது. சுமார் 10, 20 ஆயிரம் மக்களுக்கு இது அவசியமாகும். இதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொடுத்து ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. தேர்தல் வருவதற்கு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, அதற்கு முன்னாடியே இதை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தேர்தல் பற்றி ஏற்கெனவே நாம் பேசியிருக்கிறோம்.

வினா எண் 813 —திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மத்தூர் ஊராட்சி ஒன்றியம் உண்டாக்கத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஊத்தங்கரை யூனியன் 58 பஞ்சாயத்துக்கள் கொண்டதாக இருக்கிறது. தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்ற விவரமான அறிக்கை அறிவிக்கப்பட்டது, அமைச்சர் அவர்கள் ஊத்தங்கரை ஒன்றியத்தை விரித்து அதனை மத்தூர் ஊராட்சி ஒன்றியமாக ஆக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசு ஆலோசிக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே 4 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவு செய்து அது டி. ஆர். டி-க்கும் செக்ரடேரியேட்டுக்கும் அனுப்பப் பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அரசு ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே எந்த எந்த ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்று அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஊத்தங்கரை ஒன்றியத்தைப் பற்றித்தான் தகவல் இருக்கிறது.

வாசுதேவ நல்லூருக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கல்.

*வினா எண். 814 திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவ நல்லூரில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைக்க மேல்நிலை நீர்த்தேக்கம் கட்ட செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? அது எவ்வளவு ? எப்போது இந்த வேலை தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் ?

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முழு விவரத்தையும் தந்துவிடுகிறேன. வாசுதேவ நல்லூரில் ஆறு ஆழ் குழாய்கள் கைப்பம்புகளுடன் ஊரக குடிநீர்திட்டத்தின் கீழ் (குறைந்த தேவை திட்டத்தின் சீழ்) நிறுவப்பட்டு மக்களின் உபயோகத்தில் இருந்து வருகின்றன, சங்கரன் கோவில் நகராட்சி புளியங்குடி நகராட்சி மற்றும் பதினொன்று வழியோர கிராமங்களுக்கு பயன்படும் வகையில் கோடைக்கால நீர்த் தேக்கத் தொட்டி கட்டவும் மற்றும் குடிநீர் அபிவிருத்தி செய்யவும் கூட்டு ஆய்வு நடத்தி அதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதிப்பீடு ரூ 20,200 தயாரிக்கப்பட்டு தனது ஒப்புதல் அளித்துள்ளது. அம்மாதிரி வழியோர கிராமங்களில் வாசுதேவ நல்லூரும் ஒன்றாகும். இத்திட்டத்திற்கான விகிதாச்சார ஆய்வுத்

[1979 ஏப்ரல் 25

தொகையை சங்கரன்கோயில் நகராட்சி, நகரம் ஊராட்சியைத் தவிர மற்றவை (வாசுதேவநல்லூர் உட்பட) பல நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும் கட்டவில்லை. அதனால் ஆய்வுப் பணிகள் துவங்கப்படவில்லை, தற்போது பேரூராட்சிகள் ஆய்வுக் தொகையைச் செலுத்தாவிட்டாலும் ஆய்வு வேலைகளைச் செய்ய லாம் என குடிநீர்வடிகால் வாரியம் 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ம் நாளில் உத்திரவிட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வு வேலையில் இருக் கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த ஆய்வுத் திட்டத்தின் அடிப்படையிலே, இந்தக் கிராமங்களும் வாசுதேவ நல்லூரிலே எந்த நிலையிலே வருகிறது ? அரசினுடைய மானியம் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, முழு விவரங்களையும் தந்து விட்டேன், மற்றபடி எந்த எந்த கிராமங்கள் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, மலையை அடுத்தாற் போல் உள்ளது வாசுதேவநல்லூர். அங்கே, கீழே 10 மைல், 15 மைல் தள்ளி சரியான தண்ணீர் கொடுக்கும் போது, அதை ஒட்டித்தான் தண்ணீர் போகிறது. அப்படி இருக் கும் போது, அந்தக் கிராமத்திற்குக் கொடுக்கவில்லையென்று மக்கள் கவலைப்படுகிறார்கள். எனவே, தடங்கல் இருந்தாலும், அதைச் சீர்படுத்தி, திட்டம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, எங்கே தண்ணீர் இருக்கிறது, அது நல்ல தண்ணீரா, எங்கிருந்து கொண்டு வந்தால் மக்களுக்கு நல்லது என்பதை யெல்லாம் நிர்ணயிப்பது அதிலே உள்ள வல்லவர்களே தவிர, விஷயம் தெரியாதவர்கள் அல்ல. அதற்காகத் தனியாகப் பயிற்சி பெற்றவர்களே தவிர, அவர்கள் அனுப்பும் பரிந்துரையை அரசு பரிசீலித்து முடிவெடுக்கிறது.

1979 ஏப்ரல் 25]

Labour Advisory Board Meeting

*Q. No. 815—Thiru SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the Tamil Nadu Labour Advisory Board met at Tiruchirappalli about the 25th April, 1978 and

(b) if so, the details of the recommendations made at the meeting?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) திருச்சியில் நடந்த கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்பு * சபைமுன் வைக்கப்படுகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவவரவர்களே, திருச்சியில் நடைபெற்ற தொழிலாளர் நல ஆலோசனைக் குழு வானது கூடி ஓராண்டுக்கு மேலாகிறது. அந்தக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகளில் எத்தனையை அரசு நிறை வேற்றியுள்ளது? மேலும், அக்குழுவினை விரிவுபடுத்தி, அடிக்கடி தொழிலாளர் நலம் பற்றி விவாதிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, தொழிலாளர்கள் நலம் குறித்து பல்வேறு குழுக்கள் இருக்கின்றன. லேபர் அட்வைசரி போர்ட் என்பது நான்ஸ்டேச சுட்டரி பாடி, இந்தக் குழு கூடி 8 மாதங்கள் ஆகின்றன. அடுத்த கூட்டம், 1979ஆம் ஆண்டு மே திங்கள் 14-ம் நாளன்று கோவையிலே நடக்க இருக்கிறது என்பதையும், அப்படி நடத்த உத்தரவிட்டிருக்கிறேன் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் ரமணி போன்றவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அவர் கோவையிலே குழுக் கூட்டத்தை வைத்திருப்பதற்கு நன்றி. ஆனால், 8 மாதங் களாக இந்தக் குழு கூடாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஏராளமான தொழிலாளர் பிரச்சினைகள், தகராறுகள் நடந்து கொண்டிருக்கும்போதே, இந்தத் தொழில் சங்கங்களுடைய முக்கியமான மையத்தினுடைய பிரதிநிதிகளைத் கொண்ட அந்தக் குழு அடிக்கடி, கூடி தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சேர்ந்து முடிவெடுத்தால், அநேகத் தவறுகளைத் தவிர்த்திருக்க முடியுமா இல்லையா? அது ஏன் கூட்டப்படவில்லை? என்ன காரணம் என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வர் அவர்களே, லேபர் அட்வைசரி போர்ட் அவ்வப்போது, எழக் கூடிய தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட

467-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 25

குழு அல்ல, எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டக்கூடிய குழு, அவ்வப்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 'நெகோஷியேஷன் கன்சிலியேஷன்' இருக்கிறது. காலதாமதம் ஆவதற்கு உண்மையாகவே நான் வருந்துகிறேன். இனிமேல் தொடர்ச்சியாக அடிக்கடி எவ்வளவு கூட்டம் ஏற்பாடு செய்யப்படுமோ, அவ்வளவு கூட்டம் ஏற்பாடு செய்யப்படும். போதும் என்று சொல்லுகிற வரையில் கூட்டங்கள் நடத்தப்படும் என்று இங்கே உறுதி கூறுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுக் கூட்டத்தில், மக்கள் தொகைக் கல்வி, குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றில் தொழிலாளர் நிர்வாகத்தின் பங்கு என்ற தலைப்பில் இந்த இனம் குறித்து விவாதிக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதப்பட்டு கைவிடப்பட்டது என்று போடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? தொழிலாளர்களுக்கு குடும்ப நலத்தில் அக்கறை இல்லை என்பது அர்த்தமா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டம் என்பது 'பாமிலி பிளானிங்', அதற்காக, தனி இலாகா இருக்கிறது. அமைச்சர் இருக்கிறார். ஆகையால், அது விடப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ம் தேதியன்று இந்தக் குழு கூடியிருக்கிறது. இன்றைக்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ம் நாள், ஒரு வருஷம், எட்டு மாதங்கள் அல்ல, ஆகவே இதில் 12 விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. முதலில் ஊதிய வரம்பை 400லிருந்து உயர்த்தப்படுவது என்பது. அதை எந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது? இறுதியில் சி.ஐ.டி.யூ.வுடன் கலந்து பேசி ஒரு ரிப்போர்ட்டை அனுப்பும் என்று சொல்லி ஸ்பெஷல் டிபுடி கமிஷனருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்கும் கேள்விகளை வைத்துக் கொண்டு 4 துணைக் கேள்விகள் கேட்கலாம், இப்படி நீளமாக கேட்டுக் கொண்டே போனால் எப்படி. அமைச்சர் பதில் சொல்லமுடியும்?......

திரு. வி. கே. கோதண்டராமன்: கேட்க நினைத்ததை கேட்டு முடிப்பதற்குத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.......

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு தடவையும் 4 துணைக் கேள்விகள் கேட்கும் அளவிற்கு கேட்டுக் கொண்டே போகிறீர்கள். இவ்வளவு நேரம் அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் ஆழமாகப் பரிசீலனை செய்து வருகிறோம்.

வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்படும் மனைகள்.

*வினா எண் 816—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் முதலில் ஒதுக்கப்படும் வீட்டுமனைக்குப் பதிலாக வேறு வீட்டுமனை ஒதுக்கும்பொழுது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடுகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஒரு சில ஒதுக்கீடுதாரர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தங்களுக்கு முதலில் ஒதுக்கிய மனைகளுக்குப் பதிலாக வேறு மனைகள் ஒதுக்கும்போது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடு செய்துள்ளனர். இவற்றை அரசு ஆராய்ந்து அவை ஒவ்வொன்றின் நியாய அடிப்படையில் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கப் பொதுவான ஆணை பிறப்பிக்க உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வீட்டு மனைகளை ஒதுக்கும்போது அதற்கான தொகையை தவணை முறையில் செலுத்த வேண்டும் என்றிருக்கிறது. அது விதி முறை. ஆனால் அப்படி ஒதுக்கும்போது மொத்த தொகைக்கும், அந்த மனைக்கான மொத்த தொகைக்கும் வட்டியை செலுத்த வேண்டும் என்று சொல்கிறார்களே இது நியாயம்தானா, அதைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனை கொடுக்கப்பட்டு, அவர்கள் அதை வேண்டாம் என்று வேறு மனையைக் கேட்பார்களேயானால். அப்படி புதிதாகக் கொடுக்கப்படுகிற மனையின் அன்றைய

விலையை நிர்ணயித்து, அவர்களிடம் இருந்து வாங்கப்படுகிறது, ஏற்கனவே அவர்கள் கொடுத்து விட்ட வட்டித் தொகையை கழித்து விடலாம், ஆனால் பொறுப்புத் தொகையை கழித்து விடாமல் பறிமுதல் செய்துக் கொள்வது என்பதுதான் இன்றைய தினம் இருக்கிற விதிமுறை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நான் கேட்டது தவணை முறையில் வசூலிக்கப்பட வேண்டும் என்று விதிமுறையிருக்கிறதே அவர்கள் மொத்த தொகைக்கும் வட்டியை ஆரம்பத்திலேயே வசூலிப்பது நியாயம் தானா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இன்றைய தினம் இருக்கக் கூடிய சட்டத்தைத்தான் நான் சொன்னேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தில் மனைகளைக் கொடுக்கிறபோது அவர்கள் கேட்கின்ற ஒரு பாரத்தை பூர்த்தி செய்து கொடுக்கும் நேரத்தில், அதிலிருக்கும் விதிமுறைகள் 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப் பட்டது. அதில் குறிப்பாக சென்னையில் இருப்பவர்கள்தான் வீட்டு மனையை வாரியத்தின் மூலம் பெற முடியும். அவர்களுக்குத் தான் அந்த உரிமை உண்டு என்றிருக்கிறது, ஆனால் வெளியூர் களில் இருப்பவர்கள்கூட வீட்டு மனையை அப்படி வாரியத்தின் மூலம் வாங்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இது போன்ற கண்டிஷன்களையெல்லாம் நீக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, என்னென்ன மாற்றங்கள் எல்லாம் செய்தால் மக்களுக்கு பயன்படும் என்று சிந்தித்து எழுதிக் கொடுத்தால் வீட்டு வசதி வாரியத்திற்கு அனுப்பி பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலிருந்து வீடுகளைப் பெற என்னென்ன தகுதிகள் வேண்டும், முதலிலேயே அதற்கு 300 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள், இது நியாயம்தானா. இதைக் குறைப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போட்டால் விவரமான பதில்கள் தருகிறேன்.

1979 ஏப்ரல் 25]

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சேமநல நிதி.

* வினா எண் 817— திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த நிதியிலிருந்து தொழிலாளர், அதிகாரிகள் குழந்தைகளுக்கு கல்வி கற்க உதவியளிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், 1977-ம் வருடத்தில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு, எவ்வளவு அதிகாரிகளுக்கு நிதி உதவி கொடுக்கப்பட்டது? தொகை விவரம் என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ)—

	ரூ. பை.
(1) தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை.	28,347.59
(2) அதிகாரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை.	10,000.00
மொத்தம் ..	38,347.59

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு உதவி செய்வதற்காக உள்ள ஒரு திட்டத்தில் அதிகாரிகள் என்பவர்கள் இந்தக் கூட்டத்தில் எப்படிச் சேர்க்கப்படுகிறார்கள். எப்படிப்பட்ட அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. என்ஜினீயர்கள், மானேஜர்கள், உதவி மானேஜர்கள் போன்றவர்கள் எல்லாம் இந்த உதவித் தொகையை பெரும்படியாக இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படுகிறார்களா? அப்படிச் சேர்க்கப்படுகிறார்கள் என்றால் அது நியாயமா? இது தொழிலாளர்களுக்காக உண்டாக்கிய திட்டம் மட்டும் என்று சொல்வது சரியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, முந்தைய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இது 1975 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் முறையற்றது. சரியற்றது என்பதால்

இந்த அரசு அதை நீக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். போக்குவரத்துக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநருக்கு அந்த உத்தரவைத் திரும்பப் பெற இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஏற்கெனவே இப்படி ஒரு தப்பான அடிப்படையில் நடவடிக்கை நடத்துவதற்கு அரசு உத்தரவுதான காரணமா அல்லது இந்த உதவி நிதிகள் கல்விக்குக் கொடுக்கக்கூடிய உதவி என்ற வகையில் இப்படி நிதி ஒதுக் கீட்டை அங்கே இருக்கிற நிர்வாகிகள் பார்த்து செய்தார்களா, அப்படிச் செய்திருந்தால் அந்த நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த அரசினுடைய விருப்பத்திற்கிணங்க அந்த உத்தரவு இடப்பட்டு இருக்கிறது. அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசப்: தலைவரவர்களே, விபத்துக் களினால் மாளுகின்ற காவல்துறை அதிகாரிகளுக்கு 10,000 ரூபாய் வழங்குவதைப்போல அவர்களுடைய தவறு இல்லாமல் விபத்துக் களில் மாறுகின்ற போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கும் 10,000 ரூபாய் தர அரசு முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர்களுக்கு—இறக்கின்றவர் களுக்கு நஷ்டயீடு கொடுக்க அரசு வழிவகை செய்திருக்கிறது.

லாரி, பேருந்துகளின் விளக்குகள்.

*வினா எண் 818—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி மற்றும் பஸ்களில் ஒளி குறைக்கும் Auto dipper-ஐ கண்டிப்பாக பொருத்த வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): அரசின் பரிசீலனையிலுள்ளது.

1979 ஏப்ரல் 25]

திரு. யா. சை. மூ. யூசுப் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெருவாரியான விபத்துக்கள் — இரவு நேரங்களில் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதற்கு மூலக்காரணம் எதிரிலே வருகின்ற வாகனங்களின் அதிகமான ஒளியே ஆகும். ஆகவே, அந்த அதிகப்படியான ஒளியைக் குறைப்பதற்கு 'ஆட்டோ டிப்பர்' என்ற கருவி தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ தயாரிக்கப்பட்டது என்பது உண்மையா? அப்படி தயாரிக்கப்பட்ட அந்தக்கருவி ஆய்வு செய்யப்பட்டதா? அதன் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, ஆட்டோ டிப்பர் என்ற கருவி இதுவரையில் அரசுத் துறையில் தயாரிக்கப்படவில்லை. அதை தனியார் துறையில், ஜெயப்பூரில் திருவாளர்கள் ஜெயின் எலக்ட்ரானிக் இண்டஸ்டிரீஸ் நிறுவனத்தார் தயாரித்து, அதன் சோதனைகள் பூனாவில் உள்ள இந்திய மோட்டார் ஆராய்ச்சிக் கழகத்தில் செய்யப்பட்டன. தானே ஒளியைக் குறைக்கும் அத்தகைய கருவியை குறிப்பாக லாரிகள், பேருந்துகளில் கட்டாயமாகப் பொருத்தச் செய்வதற்கு மாநில மோட்டார்வண்டிச்சட்டத்தைத் திருத்துவது பற்றி கருதிப்பார்க்குமாறு மாநில அரசை இந்திய அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் போக்குவரத்து ஆணையாளர், மாநில காவல்துறைத் தலைவர், காவல் துறை ஆணையாளர் ஆகியோரை இதுபற்றி இந்த அரசு கலந்து, அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் வாகனங்கள் செல்லும்போது டிம் லைட் போடாததால் எதிரிலேவரும் வாகனங்களமீது இடித்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்படி டிம் லைட் போடாத வாகனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ டிப்பர் கருவி வந்து விட்டால் மேற்கண்ட விபத்துக்கள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மூ. யூசுப் : தலைவரவர்களே, இந்த ஆட்டோ டிப்பர் விலை என்ன ஆகும்? அது உண்மையில் பயன்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, விலை விபரம் பற்றிய குறிப்பு ஏதும் கைவசம் இல்லை.

[1979 ஏப்ரல் 25

பாசனக் குளங்களின் கீழ் உள்ள ஆயக்கட்டுகள்

*வினா எண். 819: திரு. ஒ. சோ. வேலுச்சாமி மாண்புமிகு வேளாண்மைபாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :—

(அ) நீர்ப்பாசன குளங்கள் புதிதாக அமைக்கப்படும் பொழுது அவைகளுக்குரிய ஆயக்கட்டு நிலங்களைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு தவணைக்கடன் முறையில் சீர்திருத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள புதிய குளங்களின் ஆயக்கட்டு நிலங்களை சீர்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பாசன நிலங்களில் சீரிய நீர் மேம்பாடு நுட்ப முறைகளைக் கையாள வேண்டும் என்பதும் அதற்கேற்ப நிலங்களைத் தவணைக் கடன் முறையில் சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்பதும் அரசின் கொள்கையாகும். இத் திட்டம் சில ஏரிப்பாசனப் பகுதிகளில் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது.

(ஆ) இல்லை.

பிளவக்கல் அணைக் கால்வாய்கள்

*வினா எண். 820-- திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணையில் இருந்து தாமரைக்குளம், பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகிய கண்மாய்களுக்கு (Tank) கால்வாய் போக்குவரத்து அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தாமரைக்குளம் மட்டுமே பிளவுக்கல் அணைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) பிளவுக்கல் அணையிலிருந்து தாமரைக் குளத்திற்கு நீர் வழங்கும் கால்வாய் ஒன்று ரூபாய் 17,500 செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இத் திட்ட மதிப்பீடு தற்பொழுது ஆய்வில் உள்ளது. தாமரைக்குளம் தவிர மற்ற மூன்று குளங்களும் இத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

1979 ஏப்ரல் 25]

(முற்பகல் 9.50)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நம்மைச் சரிக்கட்டுவதற்கென்று தாமரைக் குளத்திற்கு மட்டும் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். மீதி குளங்களுக்கும் எஸ்டிமேட் போட்டு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் செய்வார்களா ? அதுமட்டும் அல்லாமல் அந்தப் பகுதி யிலுள்ள வரட்சியைப் போக்குவதற்காக அழகர் அணைத்திட்டம் என்ற அந்தத திட்டத்திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும நாட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அது வெகு நாட்களாக பெண்டிங்கிலே இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து முடிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலை வரவர்களே, தாமரைக்குளத்தைத் தவிர மற்ற குளங்களான பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகியவை வில் ராயன் குளம் தொகுதியைச் சார்ந்தவை. இவைகள் எல்லாம் ஒரே குரூப்பிலே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சிற்றா றிலே இருந்து தண்ணீர் வருகின்றது. தாமரைக் குளம் சிற் றாற்றின் இடப்பக்கத்திலே அமைந்துள்ளது. கான்சாபுரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு இணங்க தாமரைக் குளம் பிள வுக்கல் அணைத் திட்டத்தில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அழகர் அணைத் திட்டத் திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும் நாட்டிவிட்டுச் சென்றதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். பழைய அரசின் காலத் திலே அடிக்கல்லை மட்டும்தான் நாட்டினார்கள் என்ற பிரச் சினை இருந்ததே ஒழிய அவர்கள் படிக்கல்லை நாட்டவில்லை.

ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துவதற்காக ஆவன செய்து பல திட்டங்கள் ஆய்விலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையாறு அணைத் திட்டம்.

*வினா எண். 821— திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாங்குநேரி வட்டத்தில் பச்சையாறு அணைத்திட்ட வேலை தற்போது எந்நிலையில் உள்ளது ?

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பச்சையாற்றின் குறுக்கே 133 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள அணைக் கட்ட முதலில் திட்டமிடப்பட்டது. இதனைப் பரிசீலித்த பிறகு, இந்நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை 350 மில்லியன் கன அடி உள்ளதாக மாற்றி அமைக்கலாம் எனக் கருதப்பட்டது. இது குறித்து விரிவான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. மு. ஜான். வின்செண்ட்: பேரவைத் தலைவர்களே, 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும் போது கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த அணை கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டி இருக்கிறார்கள். இதன் மூலமாக 173 குளங்கள் பயன்பெறுவதற்காக இந்த பாசனக் கால்வாய்கள் நிறுவப்பட இருக்கின்றன. மேலும் $4\frac{1}{4}$ கோடி ரூபாய் எஸ்டிமேட் போடப்பட்டதாக அறிகிறேன். இந்த ஆண்டிலேயே ஏற்பாடு செய்யப்படுமா? அங்கே ஏராளமான தண்ணீர் வந்து அது வீணாகக் கடலிலே கலக்கின்றது. ஆகவே, இந்த அரசு விரைவில் ஆவன செய்து அணையைக் கட்ட தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பச்சையாற்றின் குறுக்கே அணை கட்ட திட்டமிட்டு கடந்த கால அரசு 1975-76 ஆம் ஆண்டில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக 10,203 ஏக்கர் மற்றும் 3,313 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதியை உறுதிப்படுத்துகிற வகையில் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். அது அப்போது ஏற்படுத்தப்பட்ட திட்டம். 133 மில்லியன் கன அடி தண்ணீர் கொள்ளளவில் அணை கட்டும் திட்டம். ஆனால் அதை மீண்டும் பரிசீலனை செய்யும்போது நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை அதிகப்படுத்தி கூடங்குளம் அருகே அமைக்கப்பட இருக்கும் அணுமின் நிலையத்திற்கு வேண்டிய தண்ணீரையும் பச்சையாறு நீர்த்தேக்கத்தில் இருந்தே கொடுக்க வகை செய்யும்படியாக திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. அதற்குப் பிறகு இந்த ஆற்றின் குறுக்கே ஆய்வுகளை எடுத்து, நில அளவுகள் போன்றவைகளையும் ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நீரியல் சம்பந்தமாக ஆற்றின் குறுக்கே அளவு எடுத்தல், நில அளவு, மட்ட அளவு போன்ற மதிப்பீடு தயாரிக்க வேண்டிய விஷயங்களை வனத் துறையினரின் எல்லைக்குள் சென்று சேகரிக்க வேண்டியுள்ள காரணத்தால் பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள் வனத்துறை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கடந்த ஆண்டில் இதே கேள்வியைக் கேட்கும்போது அமைச்சரவர்கள் 'மிக விரைவிலே செயல்படுத்தப்படும்' என்று கூறினார்கள். ஆகவே இந்த ஆண்டிலாவது, தண்ணீர் வீணாகக் கடலிலே கலப்பதைத் தடுக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் சொல்லியதைப்போல் கடந்த 4—11—1978-லேயிருந்து பொதுப்பணித் துறை பொறியாளர்கள் வனத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே வனத்தின் ஊடே சென்று ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் வனத்துறையின் அதிகாரிகள் பொறியாளர்களுக்கு வனத்தில் பிரவேசிக்க இடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனாலும் அரசு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Small Scale Industries.

***Q. No. 822:** Thiru S. M. Vasan : Will the Hon. the Minister for Rural Industries be pleased to State :

(a) Whether a number of Small Scale Industries financed by the State Financing bodies are reported sick; and

(b) the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) மேலும் (ஆ) ஒரு * விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் நலிவு பெறுவது எதனாலென்றால் பெரும்பாலும் மூலப் பொருள்கள் பெறுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்கவும் தான் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உத்தரவாதப்படுத்தும் வகையில் அரசு அந்த மூலப் பொருள்களை விநியோகிப்பதற்கும் உற்பத்தி பொருளை விற்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை குறிப்பின் மீது மேலவையில் பதில் அளிக்கும்போது திட்டவட்டமாக இதைப்பற்றி

[* 474ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது]

அறிவித்திருக்கிறார்கள். சிறுதொழில்கள் நலிவுறாத வகையில் மூலப் பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு, அரசுக்குத் தேவையானவற்றை சிறு தொழில்களிடமிருந்து வாங்கி, அவர்கள் பயன் பெறுகிற வகையில் செய்வதற்கு, 'சிட்கோ' நிறுவனம் அந்த முறையை மேற்கொண்டிருக்கிறது. சிறுதொழில்கள் பிரச்னை பெருமளவிற்கு தீர்க்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பு.

* வினா எண். 823— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை ஏக்கரில் இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) ஆம்.

(ஆ) 1978–79-ல் 213 ஏக்கரா பரப்பில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 213 ஏக்கரா நிலப்பரப்பில் அமுல்படுத்துவதாகச் சொன்னார்கள். இப்போது அவைகள் செடியாக இருக்கின்றனவா? எந்த நிலையில் இருக்கிறது? பட்டுப் பூச்சி உற்பத்தியாகும் நிலையில் இருக்கிறதா என்பதையெல்லாம் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1978–79-ஆம் ஆண்டில் இது மேற்கொள்ளப்பட்டது. இப்போது 1979–80ஆம் ஆண்டில் இருக்கிறோம். அந்த ஆண்டில் 213 ஏக்கருக்கு மேல் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூரில் மிகச்சிறந்த முறையில் அந்தப் பட்டுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, அனைத்து இந்தியாவிலேயே மிகச் சிறந்தது என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்தப் பட்டுக் கூடுகளை கும்பகோணத்தில் உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதை அதிகரிப்பதற்கு ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா? சென்ற ஆண்டு அந்தப் பயிர் போட்டதில் அவர்கள் வருவாய் எப்படி இருந்தது?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்குசெலவுபோக,சராசரியாக, ஆண்டு. ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4,000 முதல் ரூபாய் 7,000 வரை கிடைத்து வருகிறது. அதன் காரணமாக 213 ஏக்கர் என்று 1978—79-ஆம் ஆண்டில் இருந்ததை இப்போது 1979—80-ஆம் ஆண்டில் 1,000 ஏக்கரில் தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பயிர் தயாரிக்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அந்த செரிகல்சர் இடத்தில் எவ்வளவு நாட்களுக்கு பின்னால் பட்டுப் புழுக்கள் விடப்பட்டு, அந்தச் செடி எந்த ஸ்டேஜில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—புழுக்கள் விடப்பட்டு அவைகள் கூடுகளையும் கட்டி, அதிலிருந்து நூலும் எடுக்கப்பட்டு விட்டது.

திரு. இரா. க. முனிரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்தில் பட்டுப் பயிர் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி இல்லை என்றால் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1978—79-ஆம் ஆண்டிலே செங்கல்பட்டிலே 80 ஏக்கரில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, 16,000 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்புக்காக அரசு ஆவன செய்யுமா என்பதை அறிகிறேன். அதோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் பட்டுப் பூ நூல் வாங்குவதற்கு ஈடுபட்டிருக்கிற ஒரு அதிகாரி முறைப்படி அல்லாத வாங்கி அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978—79-ல் 109 ஏக்கரிலேபட்டு வளர்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு
படுத்தக் கூடிய திட்டம் இருக்கிறது.
காஞ்சீபுரத்தில் இருக்கக்கூடிய பட்டு நூல்

கெட்டிங் பெடரேஷன் -ஐப் பற்றி என்று நினைக்கிறேன். சில புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. பட்டு நூல் யாரிடமிருந்து வாங்கப்படுகிறதோ, அவர்களுக்கு உடனடியாகப்பணம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு உத்திரவு இட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. உரிமைப் பிரச்னை மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. லத்திப் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது பேரவையின் 184-வது விதியின்கீழ் 23-4-1979 அன்று பேரவையில் ஒரு அவை உரிமை மீறல பிரச்னையை எழுப்பினார்கள். அன்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த அறிவிப்பில் ''தனிப்பட்டவர்களைப் பழி வாங்குவதற்காகவும் இந்திரா காந்தியை விசாரிப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம்'' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாகக் குறிப்பிட்டிருந்தார். திரு. லத்தீப் அவர்கள் ''Cases against a single individual'' என்று தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில் ''நான் பேசாத ஒன்றை நான் பேசியதாக உங்களுக்கு எழுதி என் மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாமா என்று நான் யோசிக்கிறேன். ஏனெனில் சட்டமன்றத்தில் நான் உபயோகிக்காத வார்த்தைகளை உபயோகித்ததாகஅவர்கள் உண்மைக்கு மாறாக எழுதி தங்களிடம் கொடுத்து நான் உரிமை மீறியதாகச் சொன்னது எப்படி பொருத்தமுடையதாக இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கூறியுள்ளார்.

பேரவைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவைத் துறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. அவற்றை பார்த்து விட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முன் அறிவிப்டைக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாதது வருந்தத்தக்கது.

பேரவையில் அவர்கள் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சா அவர்களின் சரியான பேச்சை எடுத்துக் கொண்டு அதில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்று வாதாடினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமாகப் பதில் அளித்துள்ளார்கள்.

ஸ்பெஷல் கோர்ட் சட்டம் தனிப்பட்ட சிலரைப் பழிவாங்கக் கொண்டு வரப்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட வாக்கியம் தான் திரு. ஜேம்ஸ் அவர்களாலும் திரு. லத்தீப் அவர்களாலும் ஆட்சேபிக்கப்பட்டது. இக்கூற்று உண்மைக்குப் புறம்பானது என்று அவர்கள் வாதாடினார்கள். தாம் அளித்தது சரியான விவரம்தான் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கியுள்ளார்.

ஒரு சட்டம் என்ன காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டது என்று எடுத்துக் கூற யாருக்கும் உரிமை உண்டு. எனவே அவ்வாறு கூறுவது தவறு, வேறு காரணங்களுக்காகத்தான் அச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்று கூறி, அதற்காக அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவது சரியல்ல.

தாம் கூறாத ஒன்றைக் கூறியதாக எழுதித் தம் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்ததுதான் அவை உரிமைமீறிய பிரச்னை ஆகும் என்று மாண்புமிகு முதலமைச்சா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயினும் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று நினைக்கிறேன். இம்மாதிரிப் பிரச்னைகளை எழுப்ப விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைக் குறிப்புகளைப் பார்த்து சரியான விவரம் தெரிந்து பின்னர் எழுப்புவது தான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இங்கு எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருப்பரங்குன்றம் சம்பவம் காரணமாக சில வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—"திருப்பரங்குன்றம்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யக் கோரி, 20—4—1979 முதல் திரு. கே. வி. சங்கரன், திரு. ஜோதி ஆகிய வழக்கறிஞர்கள் ஹைகோர்ட் அருகில் உண்ணாவிரதமிருப்பதால் எழுந்துள்ள பதட்டமான நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு—

திரு. ஆர். உமாநாத், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. என். வரதராஜன், திரு. சி. கோவிந்தராசன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிறசொரணம், திரு. என். பழனிவேல், திரு. மு. அம்பிகாபதி, திரு.

எஸ். சிவசாமி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். ஏ. லத்தீப், திரு. துரை முத்துசாமி, திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். உமாநாத்.

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை மீண்டும் பெரிதாகி வருவதை அரசாங்கம் அவசரமாக கவனித்து தலையிட்டு தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தக் கருத்துக்களை சொல்லவிரும்புகிறேன். இந்த மாதம் இரண்டாவது வாரத்தில் பல்வேறு வக்கீல்களின் பிரதிநிதிகள் கூடி அந்த மாநாட்டில் அவர்கள் திருப்பரங்குன்றம் சம்பவத்திலுள்ள சப்-இன்ஸ்பெக்டரை விசாரணை முடிகிற வரையில் ஹைகோர்ட் நீதிபதியின் விசாரணை முடிகிறவரையிலும் சஸ்பென்ஷனில் வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்காக 20-ம் தேதியன்று கோர்ட் பகிஷ்காரம் செய்வது என்றும், அதற்குப் பிறகு ரிலே ஹங்கர் ஸ்டிரைக் தொடர் உண்ணாவிரதம் போன்றவை இருப்பது என்றும் அவர்கள் முடிவு எடுத்திருந்தார்கள். அதன்படி 20-ம் தேதி சென்னையைத் தவிர மாநிலத்திலுள்ள எல்லா இடங்களிலும் கோர்ட் பகிஷ்காரம் நடந்திருக்கிறது. சென்னையிலும் எக்மோர் கோர்ட்டிலும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் முழுவதுமாக கோர்ட் பகிஷ்காரம் நடைபெற்றிருக்கிறது. சென்னையில் உயர்நீதி மன்றத்தில் கே. வி. சங்கரன், ஜோதி இருவரும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என்று அறிகிறேன். இப்படி படிப்படியாக பதட்ட நிலை ஏற்பட்டு வருகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவேதான் 21-ஆம் தேதி, மூன்று நாட்களுக்கு முன்பு இங்கே இருக்கின்ற அட்வகேட் அசோஷியேஷன் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அறைகூவலையும், வேண்டுகோளையும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நேற்று ஒரு பணிவான வேண்டுகோளை பார் அசோசியேஷன் சார்பிலே அனுப்பப்பட்டது. மிஸ்டர் ராமச்சந்திரன் கையெழுத்திட்டு முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

"The Members of the Bar Association and of the High Court have been watching with apprehension, the continued fast by Advocates Messrs. K. V. Sankaran and M. Jothi who are now weak and run down and the fast is clearly endangering their lives.

1979 ஏப்ரல் 25] (திரு. ரா. உமாநாத்)

May I appeal to your sense of Justice to do the proper thing namely suspend the Police official so that the Advocates K. V. Sankaran and M. Jothi can give up their fast.

அப்படி ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்கள். மாவட்டங்களிலே இருந்து பல்வேறு வக்கீல்கள் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை வெடிப்பதற்கு முன்னதாக அரசு தலையிட வேண்டுமென்று நான் கூறுகிறேன். லா காலேஜ் மாணவர்கள் இடையே மிகவும் மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடையேயும் ஒரு வெடிப்பு வெடிப்பதற்கான நிலைமை வளர்ந்து கொண்டு வருகிறது. போன மாதம் 19-ஆம் தேதி லா காலேஜ் மூடப்பட்டது. ஒரு மாதமாகி விட்டது. இன்னும் அந்தக் கல்லூரி திறக்கப்படவில்லை. திறப்பதற்கான அறிகுறியும் இல்லை. நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆல்டல்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 7 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது ; பேச்சை வளர்த்துக் கொண்டு போகாதீர்கள். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : இந்த காலேஜ் ஆஸ்டல் மூடப்பட்டு, கீழ்ப்பாக்கம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் சாவி ஒப்படைக்கப்பட்டிருப்பதுதான் எனக்குக்கிடைத்த தகவல். வார்டனே உள்ளே நுழைய வேண்டுமானால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பர்மிஷன் வாங்கவேண்டும். ஸ்டுடென்ஸ் எக்சாமினேஷனுக்காக புத்தகங்கள் எடுக்க முடியவில்லை. மதுரையில் மார்ச்சு 15-ஆம் தேதி கல்லூரி திறக்கப்படும் என்று பிரின்சிபாலால் அறிவிக்கப்பட்டது. இன்னும் திறக்கப்படாத நிலைமை இருக்கிறது. எனவே, வக்கில்களிடையேயும், மாணவர்களிடையேயும் பதட்ட நிலைமை இருக்கிறது. மாணவர்களுடைய பயணத்தை இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். ''ஹோல்டிங் எஜுகேஷன் அன்டர் ரேன்ட்சம்'' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அப்படி அரசாங்கம் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருக்கின்றது என்பதை நான் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

இப்போது வக்கில்கள் போராட்டம் சம்பந்தமாக சொல்கிற போது, இந்த சட்டமன்றத்திலே கேள்வி கேட்டபோது, அந்த சப் இன்ஸ்பெக்டர் தற்போது ஒருமாதம் லீவில் இருப்பதாகவும், மீண்டும் திரும்பும்போது இப்பிரச்னை கவனிக்கப்படும் என்றும் ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆகவே, இந்த வெடிப்பு, இந்தக் கிளர்ச்சி ஆகியவற்றை எந்த அளவில் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியும் ;

(திரு. ரா. உமாநாத்) [1979 ஏப்ரல் 25

உங்களுக்கும் தெரியும், இந்த நேரத்திலே அரசாங்கத்தினுடைய கணிப்பு தவறாக இருக்கின்றது என்பதற்கு, முதலிலே ஒன்றிரண்டு வக்கீல்கள் என்று சொல்லப்பட்டது. இப்போது இதிலே எவ்வளவு பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். இதே மாதிரி நிலைமை வரக்கூடும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்த நிலைமை வெடிக்கும் முன் அரசு இதிலே தலையிட வேண்டும். உண்ணாவிரதத்தை கைவிடக்கூடிய அளவிலே, அவர்கள் கோரிக்கை என்ன என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். எனவே, அதற்கு பேவரபிளாக ஒரு ஸ்டேட்மென்ட் அளிப்பது நலமாக இருக்கும். எனவே, இதையெல்லாம் விவாதிக்கக்கூடிய வகையில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வழக்கறிஞர்கள் ஹைகோர்டுக்குள்ளே 20—4—1979 முதல் காலவரையறை இன்றி கே.வி. சங்கரன் என்ற வழக்கறிஞரும், ஜோதி என்ற வழக்கறிஞரும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்பதை அரசு அறிந்திருக்கும் என்று நான் அறிவேன். பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அதை வளர்த்து, பின்னால், அது துப்பாக்கிச் சூடு வரை சென்றிருப்பதை நாம் பார்க்கிறோம். திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாக போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்யவேண்டுமென்று அவர்கள் கோரியிருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்த விவாதம் ஆகிவிட்டது. உண்ணாவிரதத்தைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள், பழைய நினைவுகள் எல்லோருக்கும் தெரியும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியாதது அல்ல. தாங்கள் சிறந்த அனுபவம் மிக்கவர். திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாகத் தான் இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது. அது தொடர்பாகத் தான் பேசுகிறேன். What is the cirign அது சம்பந்தமாகத் தான் பேசுகிறேன். இதிலே தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, இன்றைக்கு பதட்ட நிலை நிலவுகிறது. வழக்கறிஞர்கள் மத்தியிலே.

[முற்பகல் 10-10].

சட்டம் படித்தவர்களிடம் போய் சட்டம் அதன் கடமையைச் செய்யுமென்று சொல்லி சட்டத்தைப் பற்றி அவர்களிடத்தில் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள், மதுரையிலும்,

1979 ஏப்ரல் 25] [திரு. மு. அம்பிகாபதி]

திருச்சியிலும், மற்றும் பல்வேறு இடங்களிலும் வழக்கறிஞர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள், இந்த அரசுக்கு எதிராக வழக்கறிஞர்கள் அனைவரும் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் இது சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய நிலையைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கும் வழக்கறிஞர்கள் சங்கரன், ஜோதி ஆகியவர் களின் உடல் நிலை மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது, காலவரம்பற்ற முறையில் உண்ணாவிரதம் இருக்கும் அவர்கள் உடல் நிலை மோசமானால் தற்கொலை மேற்கொள்ள முயற்சி என்று உள்ளே தள்ளுகிறீர்கள். இது என்ன நியாயம்? பிரச்சினையைத் தீர்க்கவும் முன்வர மாட்டீர்கள். உண்ணாவிரதம் இருந்தால் தற்கொலை முயற்சி என்று சொல்லி உள்ளே தள்ளுவீர்கள். வேலை கேட்டால் இல்லை. வேலை கிடைக்க வில்லையே என்று சொன்னால், உண்ணாவிரதம் இருந்தால் தற்கொலை முயற்சிக் குற்றம் என்று சொல்லுகிற நிலை ஏற் படுகிறது. இது சரியல்ல. ஆகவே, இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும், வக்கீல்கள் மத்தியில் இருக்கும் கொந் தளிப்பான நிலையில் மதுரையில் பாண்டிய மன்னன் முன்னால் நின்று கொண்டு நீதி கோரிய கண்ணகிபோல்—

'தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க'

என்பது போல் அந்த வழக்கறிஞர்கள் நீதி கோரி உண்ணா விரதம் இருக்கிறார்கள், இதன் மீது விரிந்த அடிப்படையில் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருணை கூர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவை முன்னவரின் சாதுரிய மான பதிலைச் சொல்லி தள்ளிவிடாமல் ஒத்தி வைக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்,

<u>திரு. துரை முத்துசாமி</u>: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டது போல் வழக் கறிஞர்கள் போராட்டம் இரண்டு மாதங்களாக நடை பெற்று இடையில் அரசு சில கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு விசா ரணைக் கமிஷன் நியமித்தார்கள். கடந்த ஐந்து நாட்களாக சென்னையில் இருக்கும் முத்துசாமி அய்யர் சிலை முன்பாக சங்கரன். ஜோதி என்ற இரு வழக்கறிஞர்கள் காலவரையற்று சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருக்கி றார்கள். அதிலே ஒருவருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற் பட்டு அதனால் பாதிக்கப்பட்டு அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட வகையில் ஒரு போராட்டம் ஏற்படுகிறபோது அரசு அவர்களைக் கூப்பிட்டு

[திரு. துரை முத்துசாமி] [1979 ஏப்ரல் 25

அழைத்துப் பேச வேண்டும், அவர்களுடைய கோரிக்கை. குற்றம் செய்த போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டுமென்பது. பத்திரிகையில் பார்த்தோம்—சமீபத்தில் கேரளாவில்கூட ஒரு போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அரசு இதிலே கவுரவப் பிரச்சினையாகப் பார்க்காமல் போராட்டம் சிறிதாக இருக்கும்போதே தீயைக் கொஞ்சம் தண்ணீரை விட்டு அணைக்கிற நிலையில் அணைக்காமல் நிலைமை மோசமாகி ஃபயர் எஞ்சின் கொண்டு வந்து அணைக்கிற நிலைமையை உருவாக்கக் கூடாது. உறுப்பினர்கள் சொன்னது போல் துப்பாக்கிச் சூடு போன்றவை எல்லாம் ஏற்படக்கூடிய நிலைமைக்குப் போகக் கூடாது, இந்த அரசு எப்படி இருக்கிறது என்றால் பிரச்சினைகளை எந்த முறையில் அணுக வேண்டுமோ அப்படி அணுகாமல் விளையாட்டாகக் கருதுகிறார்கள். மற்றவர்கள் வேதனையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் போராட்டம் மேலும் வலிவுறாத வகையில் உடனடியாக அவர்களைக் கூப்பிட்டு அழைத்துப் பேசி நல்ல முடிவு காண வேண்டும். சட்டக் கல்லூரி மாணவர்கள் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. சிறு தீ பெருந்தீயாக மாறாது, இந்த அரசு அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதற்கு அனுமதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வழக்கறிஞர்கள் சாதாரணமாக சிறு பிரச்சினையின் அடிப்படையில் கடந்த ஒன்றரை மாத காலமாக போராடிக் கொண்டு வருகிறார்கள், அரசாங்கம் இந்தப் பிரச்சினையை ஒரு கவுரவப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் அரசாங்கம் தன்னுடைய அணுகு முறையில் மென்மையாக அணுகி அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்தப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய வழக்கறிஞர்கள் சங்கரன், ஜோதி ஆகியோர் கடந்த ஆறு நாட்களாக காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பதன் விளைவாக உடல் நிலை பாதிக்கப்பட்டு மோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள், இதன் விளைவாக விபரீதமான நிலை நாளை ஏற்படுமானால் அதற்கு இந்த அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். உரிய நேரத்தில் அரசு தலையிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்ற பழிச் சொல்லுக்கு அரசு ஆளாகக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் கூறுகிறேன்.

இந்த அவையில் நாங்கள் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்தும் ஒரு தீர்மானத்திற்குக்கூட அவைத் தலைவர் அனுமதியளிக்கவில்லை. ஒரு மணி நேரமாவது இந்தச் சபையை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை விவாதித்தால் என்ன பெரிய புயலா, பூகம்பமா கிளம்பிவிடும் என்று நான் அவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஒரு கட்சித் தலைவர், அவைத் தலைவரைப் பற்றி எதையும் பேசக் கூடாது, தலைவரே இப்படிப் பேசினால் தொண்டர்கள் என்ன ஆவார்கள்?

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்கள் என்னை மன்னிக்க வேணடும். அவைத் தலைவரைப் பற்றி நான் அவதூறாகப் பேச வேண்டுமென்ற எண்ணம் கொண்டவன் அல்ல, இந்த அவையினுடைய விதிகளுக்கும் மரபுகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்ற முறையிலேதான் அந்தக் கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சபைத் தலைவர் இதைப் பற்றி இன்றைக்கு இங்கே விவாதிக்க ஒரு மணி நேரமாவது ஒதுக்கி எங்களைப் போன்ற புதியவர்கள் விவாதிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தத்தீர்மானத்தின அடிப்படையில் மாண்புமிகு அங்கத்தினர்கள் விரிவாகக் கூறி விட்டார்கள். ஆகவே ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இந்த திருப்பரங்குன்றம் நிகழ்ச்சி சம்பந்தமாக அன்றைக்கு இந்த அவையில் பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களை நாங்கள் கொடுத்தோம். அதற்கு எல்லாம் ஒவ்வொரு முறையிலும் அரசுத் தரப்பில் என்ன பதில் தரப்பட்டது என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இந்தத் தீர்மானங்கள் சம்பந்தமாக அரசு எடுத்த அத்தனை முடிவுகளும் தவறுதலாகி விட்டன என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஏன் என்று சொன்னால் கடைசியாக நாங்கள் கூறியதுதான் சரியாக இருந்தது. ஓய்வு பெற்ற நீதிபதியைப் போடுவது தவறு என்று ஆரம்ப காலத்திலேயே நாங்கள் எடுத்துச் சொன்னோம். கடைசியிலே அது சரி என்பதை அரசுத் தரப்பிலே எடுத்துக் கொண்டார்கள். இது முக்கியமானஒரு பிரச்சினை. இரண்டு உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சாகும் வரையிலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வரையிலும் உண்ணாவிரதம் மேற் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சிறிய பிரச்சினை என்று தள்ளிவிடக் கூடாது. அரசுக்கு ஒரு போக்கு இருக்கிறது. நனைந்த துணியை சுமப்பார்கள் என்று கிராமங்களிலே கூறுவார்கள். உலர்ந்த துணியைச் சுமக்காமல் அதை நனைத்து விட்டு கடினப்படுத்தி சுமப்பார்கள் என்று சொல்வார்கள். அது போன்று எளிதாகப் பிரச்சினையை தீர்க்காமல் அதை காம்ப்ளிகேடட் ஆக ஆக்கி கடைசியாகத் தீர்க்கக் கூடிய முறை அரசின் கொள்கையாக இருக்கிறது. உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கிற பிரச்சனைக்கும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இரண்டு சட்டக் கல்லூரிகளையும் நீங்கள் மூடிவிட்டிருக்கிறீர்கள். மாணவர்கள் தேர்வு எழுத வேண்டிய காலம் நெருங்கி வருகிறது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 25

இருந்தாலும்கூட மாணவர்கள் தேர்வு எழுதவேண்டும். அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு எள்ளளவும் இல்லை. உண்ணாவிரதம் இருக்கின்ற அந்த வழக்கறிஞர்கள் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. கவலைக்கிடமாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டும். உண்ணாவிரதத்தை அவர்கள் கைவிட அவர்களுடைய கோரிக்கையை – போலீஸ் அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று இரண்டு சட்டக் கல்லூரிகளையும் உடனடியாகத் திறக்கவும், இது குறித்து அரசுக்கு உதவியாக விவாதிப்பதற்கு அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்கெனவே அவையில் விவாதிக்கப்பட்ட ஒரு தொடர்புடைய பொருள் என்று மிகச் சாதாரணமாக அரசு கருதி விடக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில் இதனுடைய விளைவுகள் மிகப் பயங்கரமாக உருவாகும் என்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல், இப்போது வரும் பொருளை உரைக்காமல்— அன்றைய காலத்தில் மன்னர்களுக்கு மந்திரிகள் வரும் பொருளை உரைப்பார்கள். அப்படி உரைப்பது தான் அழகு என்று சொன்னார்கள்— ஆனால் இன்றைக்கு இந்த அவைக்கும் உரைக்காமல் மக்களுக்காவது உரைக்கவேண்டும், மக்களுக்கும் உரைக்காமல் அவர்களுக்கு இதைச் சொன்னதும் உரைக்க வில்லை என்ற நிலைமையில் மந்திரிகள் இருப்பார்களானால் அது பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தும். பென்டிங் என்குயரி கெப்ட் அன்டர் சஸ்பென்ஷன் என்பது நீதியினுடைய ஒரு தேவையாகும்.

[முற்பகல் 10-20]

இன்றைக்கு நீதி தேவனுடைய சன்னிதானத்தில் அநீதி ருத்திர தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றது. அதை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், நீதி தேவனைக் காக்கக்கூடிய பொறுப்பிலே அல்லது நீதிதேவனுடைய காவலர்கள் வக்கீல்கள். ஆகையினால், நீதி தேவனுடைய நிலைக்கே இன்றைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையிலே, வழக்கறிஞர்கள் ஜோதி அவர்களும், சங்கரன் அவர்களும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு 6 நாட்கள் ஆகின்றன. (குறுக்கீடு) நீதி தேவன் மயக்கம் அடைந்திருக்கிறான். அதற்கு இந்த அரசு காரணமோ, என்னமோ தெரியவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இந்தப்பிரச்னை தணிகிற வகையில் பேச வேண்டும். அதை பெரிதாக்குகிற வகையில் பேசாமல் ஒத்துழைத்தால் நலம்.

979 ஏப்ரல் 25]

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகையினால், அந்த நீதி தேவனுனுடைய மயக்கத்தை தீர்க்கும் வகையிலும், இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற மயக்கத்தைத் தீர்க்கின்ற வகையிலும் நீதி செய்ய வேண்டும். அவர்கள் கூறுவது என்ன? "பெண்டிங் என்குயரி" அந்த எஸ். ஐ.-யை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று கோருகிறார்கள். ஏற்கெனவே நீங்கள் நீதி விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கிறீர்கள். நீதி விசாரணையும் 25-ஆம் தேதியிலிருந்து தொடங்குவதாகச் சொல்லப்படுகிறது. நீதி விசாரணையில் யார் மீது தவறு இருக்கிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள். இன்றைக்கு எல்லோரும் அந்த எஸ். ஐ. மீது தவறு இருக்கிறது என்று சொல்லும்போது, 'Pending enquiry he is kept under suspension' என்று சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது. அரசு ஏன் பிடிவாதமாக இந்த விஷயத்திலே இருக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. ஒரு விஷயத்தை அரசு உணர்ந்து பார்க்க வேண்டும். ஒரு சமுதாயம், வழக்கறிஞர் சமுதாயம் இந்த நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறது என்றால், அவர்களுடைய விரோதத்தை இந்த அரசு சம்பாதித்துக் கொள்ள வேண்டுமா? அதனால், ஏற்படக்கூடிய விளைவுகளை இந்த அரசு கவனிக்க வேண்டும். விளைவுகள் ஏற்படும் என்று எல்லோரும் சொல்லும்போது, ஏன் இந்த அரசு இந்த நிலைமையைக் கையாளுகிறது. 6 நாட்களாக இரண்டு வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சென்னையிலே பல வழக்கறிஞர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்லவில்லை. மற்ற மாவட்டங்களிலே இதே நிலைமை. கோவையிலே வக்கில்கள் கூடி, மீண்டும் இந்தப் போராட்டத்தைத் தொடங்குவோம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ஏன் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் எல்லோரும் பேசியதைத்தான் திருப்பித் திருப்பி பேசிக் கொண்டிருக்கிறார்கள். புதிய கருத்து இருந்தால் சொல்ல வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : புதிய கருத்து என்ன சார் இருக்கிறது? உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதைத்தான் நான் சொல்ல வேண்டும். புதுக் கருத்தைச் சொன்னால், அதற்கும் அனுமதிக்க மாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே, மற்ற தலைவர்கள் சொன்னதைத்தான் திருப்பி, திருப்பிச் சொல்கிறீர்கள்.....

திரு. எம். ஏ. லத்தீப் : அதை வலியுறுத்துகின்ற வகையில், இதைத்தான் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறேன். இப்பொழுது சட்டக் கல்லூரியும் மூடப்பட்டிருக்கிறது. சட்டக் கல்லூரியை மூடுவதற்கும் அவர்களுடைய உண்ணாவிரதம் காரணமாக இருக்கிறது. ஆகவே, சட்டக் கல்லூரியைத் திறப்பதற்கும் வழக்கறிஞர்கள் சமுதாயத்திற்குத் திருப்தி அளிக்கவும், நாட்டிலே அமைதி நிலவவும், நீதி தலை தூக்கி நிமிர்ந்து நிற்க வேண்டுமென்பதற்காகவும், இன்றைக்கு பெண்டிங் என்குயரி அந்த எஸ். ஐ. சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்தால், அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார்கள். அதனால் ஏற்படும் விளைவுகளை நாம் தவிர்க்க முடியும் என்பதற்காகவும், மேற்கொண்டு இந்தப் பிரச்னைகளை வளர்க்காமல் இருக்கவும், மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்றும், இது குறித்து விரிவாக விவாதிக்க இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே ஒன்று சேராத வழக்கறிஞர்களை இந்த நிகழ்ச்சி ஒன்று சேர்த்திருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம் ஏற்கெனவே, பலமுறை இது பேசப்பட்டு, அதற்கு அரசாங்கம், அந்த வழக்கறிஞர்கள் வைத்த கோரிக்கைகளிலே ஒரு கோரிக்கையை மட்டும் ஏற்று, இன்னொரு கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாத நிலைமையிலே, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே ''இண்டலிஜென்ஷியா செக்ஷன்'' என்று சொல்லக்—கூடிய அந்தப் படித்த, அறிவார்ந்த வழக்கறிஞர் சமுதாயத்தினர் தங்களுடைய கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்தி, உண்ணாவிரதம் இருக்க வேண்டிய ஒரு நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

இன்று ஆறாவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இந்த அரசு அதை நினைக்காமல் விட்டு விட்டு இன்னமும் சில நாட்களுக்கு மெத்தனமாக இருக்குமேயானால் அப்படி உண்ணாவிரதம் இருப்பவர்கள் யாராவது ஒருவருக்கு ஏதாவது எதிர்பாராத நிலைமை ஏற்பட்டு விட்டால் ஆந்திராவைப் பிரிப்பதற்கு பொட்டி ஸ்ரீராமுலு என்று ஒருவர் தேவைப்பட்டதுபோல அந்த ஒரு நிலைமை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று நல்லெண்ணத்தோடுதான் இந்தப் பிரச்னையை நான், அணுகுகிறேன்.

இன்று விசாரணையை எடுத்துக் கொண்டிருக்கின்ற சி. ஜே. ஆர். பால் என்ற நீதிபதிக்கு அவர்களை நியமித்ததற்கான டெர்ம்ஸ் அண்டு ரிபரன்ஸஸ் கூட கொடுக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது. ஒரு நீதிபதி நியமிக்கப்படுகிறார் என்று சொல்கிறபோது டெர்ம்ஸ் அண்டு ரெபரன்ஸஸ் கொடுத்தேயாக வேண்டும்.

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. மார்க்கபந்து]

உண்ணாவிரதம் இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் உயர் நீதி மன்றத்தை தலைமை நீதிபதி அவர்கள் இன்னும் இரண்டு நாட்களிலே நீதிமன்றத்தை மூடப்போகிறார்கள். ஆகவே மிக அவசரமாக இந்த இரண்டு நாட்களுக்குள்ளாக இந்த சம்பவத்திற்கு ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். ஒரு உயிரோடு விளையாடுவது என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சியாக அரசாங்கத்திற்கு இருந்தபோதிலும், அந்த இரண்டு வழக்கறிஞர்கள் சங்கரன், ஜோதி என்ற அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதன் மூலமாகத் தமிழகத்தில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் இருக்கக்கூடிய லிடிகன் பப்ளிக் என்று சொல்லப்படுகின்ற படித்தறிந்த பொது மக்கள் இருக்கிறார்கள். அப்படிப் படித்து அறிந்தவர்கள் கூட்டமும் வழக்கறிஞர்கள் சமுதாயம் நீதி வேண்டும் என்று சொல்கிற சூழ்நிலையிலே இது மிக தீவிரமான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்பது புலனாகும்.

சாதாரண ஒரு ஆள் கையெழுத்துப் போடாது மொட்டைப் பெட்டிஷன் வந்தால் கூட அதற்காக அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து விசாரணை நடத்துகின்ற இந்த அரசு, விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்ட நிலைமையிலே அவரை சஸ்பெண்ட் செய்யப் பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. குறைந்த பட்சம் அவரை மாற்றலாவது செய்ய வேண்டும். அவர் லீவிலே இருக்கிறார். லீவில் இருந்து திரும்பி வந்த பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்று இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டது. அவரை உடனே அழைத்து லீவை கான்சல் செய்து திரும்பி வந்து பொறுப்பில் சேரச் செய்து, அவரை உடனடியாக சஸ்பெண்ட் செய்வதோ அல்லது இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றல்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள் நீங்களும் மற்றவர்கள் பேசியதையேதான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது குறைந்த பட்ச கோரிக்கை, அதை உயர்நீதி மன்ற நீதிபதி கூட வேண்டுகோளாக சொல்லி இருக்கிறார். இப்படி இந்த குறைந்தபட்ச கோரிக்கையாவது அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, இதற்குப் பின்னால் இருக்கிற பிரச்னைகளை ஆர அமர பேசுவதற்கு விவாதிப்பதற்கு இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30].

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் அடிப்படை என்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அவர்களுடைய

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 25

எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருக்கின்ற அந்த இரண்டு வாலிபர்கள், வழக்கறிஞர்கள், சங்கரன், ஜோதி ஆகியவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக் கூடாது என்றும், அவர்கலைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை ஆட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு தங்களது வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள்.

கருத்துக்களை எடுத்துப் பேசுகிறபோது அந்த கருத்துக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகிற முறையில் அமைய வேண்டுமே தவிர ஏற்கனவே இருக்கின்ற கொந்தளிப்பான சூழ்நிலையை மேலும் அதிகப்படுத்துவதற்காக அந்தக் கருத்துக்கள் பயன்பட்டு விடக்கூடாது என்பது என்னுடைய தாழ்மை பொருந்திய வேண்டுகோள். ஏதோ நீதிதேவன் மயங்கிக் கிடப்பதுபோலவும் அதைத் தடுத்து காப்பாற்றும் எண்ணத்தோடு ஆண்டவன் திரு. லத்தீப் அவர்களை அனுப்பியிருப்பதுபோலவும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. எவ்வளவு சொன்னாலும் அரசுக்கு உரைக்காது. அமைச்சர்களுக்கும் உரைக்காது என்று சொல்லி அவர்களைப் போலவே மற்றவர்களையும் இருக்க வேண்டுமென்று நினைப்பது எந்த அளவுக்கு நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. பேசும்போது வார்த்தைகளைக் கொட்டுவது சுலபம். ஆனால் பேசுகிற பேச்சுக்கள் நாட்டிற்கு ஆபத்து வந்து விட்டது போலவும் பண்பாட்டிற்கு பாதகம் வந்து விட்டது போலவும் அதையெல்லாம் இந்த அரசு பாதுகாக்க வேண்டும் என்று விரும்புகிற பொறுப்புணர்ச்சியோடு அவர்கள் பேசுவது போலவும், அந்த நடைமுறையில் அமையுமேயானால் அப்படி பேசுகிறவர்கள் அந்த உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று நான் ஏற்றுக் கொண்டாலும், திரு. லத்தீப் போன்ற இளம் துடிப்புள்ள வழக்கறிஞர்கள் அவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அருமை நண்பர் உமாநாத் போன்றவர்கள் ஏதோ கல்வியே சிறைப்பட்டிருப்பது போலவும், சட்டக் கல்லூரி ஹாஸ்டலையே காவல் துறையிடம் ஒப்படைத்து விட்டிருப்பது போலவும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைப் போன்ற கருத்தில் எனக்குத் தகவலே இல்லை. அந்தக் கருத்து உண்மையா இல்லையா என்பது தெரிந்து அவர் பேசுகிறாரா என்றும் தெரியாது. எனக்கு வந்த தகவல்களின்படி திரு. உமாநாத் அவர்கள் கருத்துக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிக்கும் துளிகூட சம்பந்தமே இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மார்க்கபந்த் அவர்கள் பேசுகிறபோது உற்சாகம் மிகுதியின் காரணமாக பேசினார்களா அல்லது உண்மையிலேயேபேசினார்களா என்று தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் வழக்கறிஞர்கள் சமுதாயத்தைக் களங்கப் படுத்துவது போன்ற கருத்தை அவர்கள் பேசினார்கள். வரலாற்றிலேயே வழக்கறிஞர்கள் ஒருவருக்

1979 ஏப்ரல் 25] [திரு. கி. மனோகரன்]

கொருவர் ஒன்று சேர மாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டது தான் வழக்கறிஞர்கள் சமுதாயத்தை களங்கப்படுத்துவதுபோல இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நல்ல சமுதாயம் அது. ஒற்றுமையான சமுதாயம் அது. தயவுசெய்து அப்படிச் சொல்ல வேண்டாம் என்று மார்க்கபந்து அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். பேசுகிற வேகத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நேர்ந் திருக்கும். ஆனால் அப்படிப் பேசுவது கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. மார்க்கபந்து அவர்கள் எல்லாம் அறிஞர்கள், விபரம் தெரிந்தவர்கள் அவர்களுக்கு நான் அறிவுரை சொல்ல விரும்பவில்லை. ஆனால் பிரச்னைகளைப் பற்றி பேசுகிறபோது அவ்வளவு வேகம் இருந்தது அவர்களுக்கு.

சில நண்பர்கள் சொன்னார்கள், இந்த அரசு தடைகளைத் தகர்க்கிற அளவு நியாயங்கள் அற்று விட்டது. அவர்கள் செத்தால் புயலாக, பூகம்பமாக தமிழகம் மாறும் என்று பல கருத்துக்களைச் சொன்னார்கள். இவைகள்யெல்லாம் சொல் அலங்காரத்திற்கு நன்றாக இருக்குமே தவிர பிரச்னைகளுக்கு எப்படிப் பரிகாரமாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்கள் பேச்சைக் கேட்டால் தமிழ்நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது என்று கருதத்தக்க அளவிற்கு அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வெளியே இருக்கிறவர்கள் கேட்கிறபோது சிரிப்பார்கள், இவ்வளவு பொறுப்புள்ளவர்கள் சட்டமன்றத்தில் இப்படிப் பேசுகிறார்களா என்று கேலி செய்வார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

இரண்டு இளைஞர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சரி. சங்கரன், ஜோதி என்கிற இரண்டு இளைஞர்கள்–வழக்கறிஞர்கள் அவர்கள். ஆனால் எந்தவித அடிப்படையும் இல்லாமல் திரு. மார்க்கபந்து போன்ற அருமை நண்பர்கள் பேசுகிறார்கள் என்ப தற்காக சொல்லுகிறேன். நீதிபதி நியமனத்திற்குப் பிறகு டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்படி அந்தக் கருத்து அவரது அருமையான தெளிவான மூளையிலே முளையிட்டது என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் இதோ என்னிடத்தில் இருக்கிறது. படித்துக்காட்ட வேண்டும் என்று விரும்பினால் படித்துக்காட்டத் தயாராக இருக்கிறேன்.

(1) To inquire into and report in the incidents that took place at Tirupparankundram Police Station on the 24th February 1979 relating to the alleged assault on Thiru V. Ayyadurai, Advocate by Thiru K. Rajagopal, Deputy Inspector of Police, Tirupparankundram Police Station and the counter-allegation of assault on Thiru K. Rajagopal by Thiru V. Ayyadurai.

(2) To find out whether there has been any misconduct or excess on the part of the Police personnel including the Deputy anspector of Police Thiru K. Rajagopal and whether there has Iny misconduct on the the part of the Advocate Thiru V. Ayyadurai

(3) The Commission will complete its inquiry and report to State Government within a period of one month from the date of this Notification.

'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' இல்லை என்கிறார்களே; நான் யாரிடம் சென்று அழுவது என்று புரியவில்லை. இவ்வளவு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் இல்லை என்று சொல்கிறார் என்றால் (குறுக்கீடு) சரி. அது அவர்களுடைய இஷ்டம்; நான் அதற்குமேல் எதுவும் சொல்வதற் கில்லை. இனிமேலாவது இது சட்டமன்றம்; இந்த சட்டமன்ற மரபை நான் காப்பேன் என்று ஆறுமுகம் அவர்கள் பேசினார் களே, அந்தச் சட்டமன்ற மரபைக் காப்பாற்றுகிற வகையில் விஷ யங்களையும் தெரிந்து, ஆனால் வஷயங்களை எடுத்துச் சொல்லும் போது விஷங்களை அதிலே செலுத்தாமல், கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது அது கனலாக மாறாமல்; எண்ணங்களை எடுத்துச் சொல்லி, ஆனால் எண்ணங்களை எடுத்துச் சொல்லும் போது அது பெருந் தீயாகக் கொழுந்து விட்டு எரியாமல் பாது காத்துக் கொள்கின்ற பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வதன் மூலம் தான் மரபை, ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தேவாலயத்தில் நீதியின் தேவாலயத்தில், அந்த நீதித் தேவனைக் காப்பாற்றுவதற்காக இருக்கிற காவல் தெய்வங்கள் வழக்கறிஞர்கள் என்று அலங்காரமாகப் பேசிய திரு. லத்தீப் அவர் கள் பேச்சைக் கேட்டு நான் ரசித்தேன் என்பது மட்டுமல்ல; இவ் வளவு அழகாகப் பேசக்கூடிய திரு. லத்தீப் அவர்களுக்கு இப்படிப் பட்ட திசைதிருப்பக்கூடிய அதுவும் இருக்கிறதே என்று எண்ணுகிற போது எனக்குக் கவலையாக இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: அதுவும் இருக்கிறது என்றால் அது எது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அது அவருக்குத் தெரியும். ஆகையால் நான் கீழ்க்கண்ட அறிக்கையை இங்கே படிக்க விரும்பு கிறேன். அதன்பிறகு நான் நிச்சயமாக நம்புகிறேன்; இந்தப் பிரச்சனைக்கு ஒரு நல்ல பரிகாரம் கிடைக்கும்.

உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை நடுவராகக் கொண்டு அல்லது மாவட்ட நீதிபதி ஒருவரை நடுவராகக் கொண்டு ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர்களும் மற்றவர்களும் வற்புறுத்தியதற்கு இணங்கி, இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சி.ஜே.ஆர். பால் அவர்களை நடுவ ராகக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை 9—4—1979-ஆம் தேதியன்று அரசு நியமித்தது.

இருப்பினும் வழக்குரைஞர்கள் சங்கத்தில் ஒருசிலர் தொடர்ந்து போராட்டத்தை நடத்துவது என முடிவு செய்து 20—4—1979 அன்று மீண்டும் போராட்டம் என்னும் பெயரால்,

எழும்பூரிலுள்ள வழக்கு மன்றங்களையும் மற்றும் சில மாவட்டங்களில் உள்ள வழக்கு மன்றங்களையும் புறக்கணித்தனர். சென்னை உயர்நீதி மன்றமும், சென்னையில் மற்ற நீதி மன்றங்களும் வழக்கம்போல் செயல்பட்டன.

திருவாளர்கள் கே. வி. சங்கரன், என். ஜோதி ஆகிய வழக்குரைஞர்கள் 20—4—79 முதல் சென்னை உயர்நீதி மன்றத்தினுள் உள்ள முத்துசாமி ஐயர் சிலை முன்னால் உண்ணாவிரதம் இருக்கின்றனர். அவர்களுடைய வேண்டுகோள் மதுரை திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரியை தற்காலிகவேலை நீக்கம் செய்ய வேண்டும் என்பது. அந்த அதிகாரி விடுப்பில் இருக்கிறார். விடுப்பில் இருந்துவரும் பொழுது வேறு மாவட்டத்துக்கு மாற்றப்படுவார் என்று அரசு ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

பெருவாரியான வழக்குரைஞர்களின் கோரிக்கையும் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரியை வேறு மாவட்டத்துக்கு மாற்ற வேண்டும் என்பதுதான். எனினும் ஒருசிலர் இந்த தற்காலிக வேலை நீக்கக் கோரிக்கையை மீண்டும் எழுப்பி போராட்டத்தைத் தொடங்கியிருப்பது துரதிர்ஷ்டமானது.

எழும்பூர், கோவை, பொள்ளாச்சி, ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களில் உண்ணாவிரதம் இருக்கின்றதாகத் தெரிகிறது. உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டு, நடக்கவிருக்கும் விசாரணைக் குழுவின் முன்னர் உண்மை வெளிவர வழக்குரைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது வழக்கம்போல் எல்லா நீதி மன்றங்களும் செயல்படுகின்றன. எனவே, சட்டமன்றத்தின் இதர நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்தது, இதுபற்றி விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்

அ. பெத்தூர்பெட் நகர மாணவர்கள் சிலர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து திருவாளர்கள் ஏ. ஏகாம்பர ரெட்டி, திரு. சி. ஆறுமுகம், திரு.

பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். முதலில் திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி.

Thiru *A. EAKAMBARA REDDY: Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the hunger strike by the Old students of Podatoorpet Town from 19.3.1979 demanding immediate provision of drinking water, proper drainage and street lighting and other basic amenities which had deen neglected for a long period.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதத்தூர் பேட்டை நகர பஞ்சாயத்து பழைய மாணவர்கள் போராட்டம், மேற்கூறிய பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி மற்றும் பஞ்சாயத்து தலைவர் இருவரும், அவர்களுடைய குறைபாடுகள் தக்க முறையில் கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்'' என கோட்டாட்சியாளர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் முன்னிலையில் உறுதி கூறியதின் பேரில் 21—3—79 அன்றே நிறுத்தப்பட்டு விட்டது. இருந்த போதிலும் நகராட்சியின் தேவைகளை அறிந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 10.40]

THIRU EAKAMBARA REDDY : Sir I am thankfull for the assurance given by the Hon. Minister for Local Administration. But at the same time, the Podatore Town Panchayat is a thickly populated town with a population of 17,000 people. It is predominantly a weavers area. They require drainage, street lighting and drinking water facilities. In 1971, when I was Chairman of the panchayat Union, deep bore wells were sunk and hand pumps were erected. Irrequested the TWAD Board to take up this and provide water supply. This was brought to the notice of the Executive Engineer, Conjeevaram division several times and he was requested to provide drinking water supply to that area. At the same time, I also request. The Government to include Podatore Town Panchayat in the Urban Water Supply and Drainage Scheme. This is essentially felt by the people of that Town Panchayat. May I request the Hon. Minister for Local Administration, through you, Sir, to include Podatore Town Panchayat in the scheme of Urban Wate Supply and Drainage Scheme using his good offices with the Hon'ble Minister Concerned

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தோடு தொடர்பு கொண்டு இவைகளை விரைவிலே நிறைவேற்றுவதற்கும், மாண்புமிகு உறுப்பினர்ாக கூறிய குறைபாடுகளை களைவதற்கும் அரசு நிச்சயம முயற்சி எடுக்கும்.

1979 ஏப்ரல் 25]

ஆ. மகிமைபுரத்தில் மதிய உணவு அருந்திய மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவை விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் மு. அரங்கநாதன், மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, ஒ. சோ. வேலுச்சாமி, சின்னசேலம் மா. சுப்பிர மணியன், கே. பண்ணை சேதுராமன், துரை முத்துசாமி ஆகி யோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''ஜெயங்கொண்டானை அடுத்த மகிமைபுரத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மதிய உணவு சாப்பிட்ட 33 மாணவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பது பற்றியும் அதனால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்தும்'' என்கிற அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சரகம் மகிமைபுரம் ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 450 மாணவர் கள் உள்ளனர். அவர்களில் 33 மாணவர்கள் (27 மாணவர்கள், 6 மாணவியர்) இப்பள்ளியோடு இணைந்துள்ள அனாதை விடுதி யில் தங்கியுள்ளனர். இந்த அனாதை விடுதியில் வழங்கப்பட்ட கேழ்வரகு (களி), சாம்பார், காய்கறிகள் ஆகியவற்றை உண்ட பிறகு அவர்களுக்கு வாந்தியும் வயிற்று வலி முதலியவையும் ஏற்பட்டன. இவர்களுக்கு 14—3—79 அன்று மாலை சுமார் 5½ மணிக்கு வாந்தியும், வயிற்று வலியும் ஏற்பட்டது. இந்த 33 மாணவர்களும் ஜெயங்கொண்டம் அரசினர் மருத்துவமனை யில் இரவு 8 மணிக்குச் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு மருத்துவ அதிகாரி உடனடியாகச் சிகிச்சை அளித்தார். அவர்கள் குணம் அடைந்து 16—3—1979 அனறு இரவு 7 மணிக்கு மருத்துவ மனையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவசிகிச்சை அளிக்கும்போது எந்த மாணவரும் கடுமை யாக பாதிக்கப்படவில்லை என்றும் அனைவரும் ஒரே சீராக நலம் பெற்று வந்தனர் என்றும் மருத்துவ அதிகாரி தெரிவித்து உள்ளார். உணவில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் கலந்திருந்ததால் அவர்களுக்கு வாந்தியும், வயிற்றுவலியும் ஏற் பட்டிருக்கக்கூடும் என்றும், ஆய்வு செய்வதற்காக, வாந்தி எடுக் கப்பட்ட உணவுப்பொருளில் சிறிதளவு ஏற்கனவே ஆய்வு கூடத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சி நடந்த உடனே நோய்த் தொற்றுவதைத் தடுக்க இவ்விடுதியில் உள்ள கிணற்று நீரில் குளோரின் கலக்கப்பட்டது என்பதோடு சமைப்பதற்கான பாத்திரங்களுக்கு ஈயம் பூசப் பட்டது. இனிமேல் இது போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரும் விடுதி காப்பாளரும் வன்மையாக அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவை வடித்து அரிசன மாணவர்களுக்கு, பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதிகளில் தங்கிப்படிக்கக்கூடிய மாணவர்களுக்கு பள்ளிகளில் கொடுக்கப்படுவதால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கவனக்குறைவால் அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. இதை எச்சரிக்கையாக அரசாங்கம் எடுத்துக்கொண்டு விடுதிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகளை அலட்சியமாக நடத்தாமல் இருக்கவேண்டும் என்கிற முறையில் தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். அதற்கு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அதிகாரிகள் கடுமையாக எச்சரிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்பதுடன், இது மாதிரி தவறுகள் ஏற் படாமல் இருப்பதற்கு எச்சரிக்கையாக இருக்கும் வகையில் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படுவதன காரணமாக தமிழகத்திலே பல இடங்களில் ஏழை குழந்தைகள் உணவு வேண்டாம், சாப்பிட வேண்டாம் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு அரசு ஏதோ தவறாகச் செய்வதாக நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மீண்டும் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று எந்தப் புகாரும் அரசின் கவனத்திற்கு குறிப்பாக சமூக நலத்துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, இந்த ஜெயங்கொண்டம் சரகம், மகிமைபுரம் உயர்நிலைப்பள்ளியில் உள்ள 33 மாணவர்கள் மயக்கமுற்றதன் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அந்த விளக்கத்தில் சமையல் செய்யப்படும் பாத்திரங்களில் ஈயம் பூசப்படாத காரணத்தால்

1979 ஏப்ரல் 25] [திரு. கே. பண்ணைசேதுராம்]

தான் களிம்பு ஏறி விஷம் கலந்ததுதான் மயக்கமுற்றதற்கான காரணமாக இருந்தது என்று அறிக்கையில் இருந்து அறியப் படுகிறது. ஆகவே ஈயம் பூசப்படாத அந்த பாத்திரங்களை ஈயம் பூசுவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புவதோடு அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை யும் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிக்கூடங்களிலும் உள்ள சமைய லுக்கான பாத்திரங்கள் ஈயம் பூசப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பாத்திரங்கள் அத்தனைக்கும் ஈயம் பூசப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, நான் அளித்த பதிலிலே, மருத்துவ சிகிச்சை அளிக்கும்போது உணவில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் கலந்திருந்த தால் அவர்களுக்கு வாந்தியும், வயிற்றுவலியும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றுதான் சொன்னேனே தவிர, ஈயம் பூசப்படாததால் அத்தகைய நிலை ஏற்பட்டது என்று சொல்லவில்லை. ஆனாலும் எல்லா அனாதை விடுதிகளுக்கும் எச்சரிக்கையாக நாங்கள் ஏற் கனவே தகவல் அனுப்பி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர் களே, கேழ்வரகில் நுண்ணுயிர் இருந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது என்ன நுண்ணுயிர் என்று கண்டுபிடித்தாகிவிட்டதா? தமிழ்நாடு முழுவதும் அதே கேழ்வரகுதான் அனுப்பப்பட்டிருக்கும். ஆகவே அதைக் கண்டுபிடித்துப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, கேழ்வரகில் நுண்ணுயிர் இருக்கிறதா அல்லது வேறு எதிலும் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அதைக் கண்டு பிடிப் பதற்காகத்தான் அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் பரிசோத னையின் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, ஹாஸ்டல் களுக்கென்று வழங்கப்படக்கூடிய அரிசியில் வண்டுகளும், புழுக்களும் இருந்ததன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறதே. அதுமட்டு மல்ல ஹாஸ்டல்களில் அரிசி எப்போதோ வாங்குகிறார்கள். காலம் கழித்து அது உபயோகப்படுத்துகின்றபோது இந்த மாதிரி நிலை ஏற்படுகிறது. ஆகவே மருந்துகளுக்கெல்லாம் காலக்கெடு

விதிக்கப்பட்டிருப்பதைப் போல அரிசி வாங்கினால் அதையும் 3 மாதங்களுக்குள்ளாக உபயோகப்படுத்திவிட வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் அதாவது தேவையான பொருட்கள் எங்கெங்கிருந்து வருகின்றது, எப்படி சப்ளை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றேன்,

(5) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கே. சௌந்திரராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பது குறித்து விதி 44-ன் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வரலாற்று புத்தகத்தில் நபிகள் நாயகத்தைப்பற்றி தரக்குறைவாக எழுதி இருக்கிறார்கள் என்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். அடுத்து இப்போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்.

(6) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்டமுன் வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறி முகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(இ) அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10—50)

(ஈ) வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(எ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(5) தகவல் கோரல்—(தொடர்ச்சி)

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து:

திரு. கே. பண்ணை சேதுராப் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை திரு. ஏ. ஏகாம்பர செட்டியார், எம்.எல்.ஏ. அவர்கள் கொடுத்திருப்பதாக எங்களுக்கு அச்சிடப்பட்டு தாள்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏகாம்பரச் செட்டியார் அவர்கள் இந்த அவைக்கு எப்போது தேர்ந்தெடுக்கப் பட்டார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு பிழையாக இருக்கலாம். அதைப் பெரிது படுத்தக் கூடாது. ஒரு பெரிய பிரச்னை அல்ல.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஏ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979 தொடர்ச்சி).

*திரு. து. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் விவசாயிகளுடைய பிரச்னை பெரும் பிரச்னையாக இருப்பதை ஏற்கெனவே இந்த அவையில் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இருப்பினும் நேற்று முன் தினம் நடந்த நிகழ்ச்சிகளைக் காண்கிற நேரத்தில் அதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளைப் பொறுத்த வரையில் 80 சதவிகித மக்கள் இந்த தமிழகத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது 80 சதவிகித மக்கள் வறுமையால் வாடுகின்றதை நாம் இன்றைக்குக் காண முடிகிறது. இன்று அவர்கள் நாட்டுக்கு உணவு அளிக்கக் கூடிய சமுதாயமாக இருந்தாலும் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருந்தாலும், அவர்கள் வறுமையைப் போக்குவதில் மெத்தன மாக இருக்கிறோம் என்று கூறுவது மிகையாகாது. இன்று சாதாரணமாக நகரங்களில் சிறுதொழில்களை ஆரம்பித்தவர் பிறகு பெரிய தொழிற்சாலைக்கு அதிபராக ஆகியிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு 50 ஏக்கருக்கு உரிமையாளராக இருந்தவர், இன்றைக்கு 5 ஏக்கருக்கு உரிமையாளராக ஆகும் அவல நிலையைத்தான் காண முடிகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

ஆக, ஒவ்வொரு ஆண்டும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்களுடைய உடமைகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விற்று அதைக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே விவரம் அறியாத அவர்கள் திசை தெரியாமல் அவதிப்பட்டுக்

கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அவர்களுடைய வறுமை நிலைமையை உணர்ந்து, அவர்களுக்கு உதவி செய்ய முன் வராததோடு, அவர்களுடைய பிரச்சினைகளை கண்டு, ஓடி ஒளிந்து கொள்ளும் நிலைமையும் நாம் காண்கிறோம். இன்று இந்த நிலை தமிழகத்தில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் மத்திய அரசை கை காட்டுகிறார்கள். உர விலை உயர்ந்து விட்டது. பூச்சி மருந்து விலை உயர்ந்து விட்டது, டீசல் எண்ணெய் நியாயமான விலைக்கு கிடைப்பதில்லை, விலையும் உயர்ந்து விட்டது என்று கூறிய நேரத்தில் அதற்கு மத்திய அரசை சுட்டிக்காட்டுகின்ற நிலையை நாம் காண்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகள் மீது அக்கறை உள்ளதாக தெரியவில்லை. விவசாயிகளை அவமதிப்பதுடன், அவர்கள் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள் சண்டை, பூசல் காரணமாக நிர்வாகத்தில் திறமையில்லாத நிலை இருப்பதை காண முடிகிறது. அம்மாதிரியான ஒரு நிலையில் மத்திய அரசு இருப்பதால், மாநில அரசு இதைப்பற்றி மத்திய அரசிடம் வற்புறுத்தி கூறியும் நாம் பெற வேண்டியதை பெறுவதற்கு வழியில்லாமல் எல்லாவற்றையும் இழந்திருக்கக்கூடிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு மத்திய அரசு எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்ற நேரத்தில் மாநில அரசாவது, உதவி தொகை மூலம், விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கொடுப்பார்களா என்று கேட்கின்ற நேரத்தில் அதற்கு இந்த அரசிடமிருந்து எந்த நல்ல பதிலும் கிடைக்க வில்லை. புயல் போன்ற நேரங்களில்தான் இப்படிப்பட்ட உதவிகள் கொடுக்க முடியும், மற்ற நேரங்களில் கொடுப்பதற்கில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அரசாக இல்லை என்கின்ற இந்த குற்றச்சாட்டை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக விவசாயிகளுக்கு நாங்கள் வரியை ரத்து செய்து விட்டோம் என்று கூறிக்கொள்கின்ற நேரத்தில், அவர்கள் கிஸ்தியை ரத்து செய்து விட்டோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், பல முனை வரிகள் போட்டு, பணப் பயிர்களுக்கெல்லாம் ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலையில் வருவதும், உணவுப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 60 ரூபாய் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் வருகிறது. அது மட்டுமல்லாமல் நான் ஏற்கனவே சொன்னது போல், உரம், பூச்சி மருந்து இவைகளுக்கு விலை அதிகமாக இருக்கிறது, டிராக்டர்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. ஆயில் என்சின்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. டீசல் ஆயில் கிடைப்பதில்லை என்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மின் கட்டணத்தினாலும் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மின் துண்டிப்பும் அதிகமாக

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பவர் கட் செய்கிறார்கள் என்று சொன்னால், எந்த நேரத்தில் பவர் கட் செய்யப் போகிறார்கள் என்பதோ அல்லது எப்போது பவர் கொடுக்கப் போகிறார்கள் என்பதை விவசாயிகளுக்கு அறிவிப்பதில்லை. ஆகவே இரவு 9 மணிக்கு மின்துண்டிப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், திரும்பவும், அடுத்தநாள் காலை மூன்று மணிக்கு அல்லது இரண்டுமணிக்கு தான் மறுபடியும் பவர் வருகின்ற காட்சியை நம்மால் காண முடிகிறது. இரவில் விவசாயி, எப்படி அந்த விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கட்டுவது என்று தெரியாமல் சிரமத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை விட கொடுமையானது என்னவென்றால், இப்படி இரவு நேரத்தில் அவர்கள் விவசாய வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் கடித்து இறந்து விட்டால், அவர்களுக்கு அரசால் எந்தவிதமான உதவித் தொகையும் கொடுக்கப்படுவதில்லை. அதே நேரத்தில் மற்றவர்களுக்கு எல்லாம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உதவித் தொகை கொடுக்க முன்வருகிறது. விவசாய சமுதாயத்தை ஏன் இப்படி ஒதுக்கி வைக்கிறார்கள் என்று புரியவில்லை.

வறட்சி ஒருபக்கம் விவசாயிகளை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் அவர்கள் புயலால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த இரண்டிலிருந்தும் அவர்கள் தலை தூக்கக்கூடிய நேரத்தில் விலைவாசி வீழ்ச்சியடைந்து அவர்கள் வாங்கியிருக்கும் கடன்களையும் திரும்பச் செலுத்த முடியாமல் பஞ்சை பரட்டைகளாய் காட்சியளிக்கின்ற நிலையைத்தான் காண்கிறோம். இந்த நாட்டில் இருக்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய அந்த விவசாய மக்கள் உண்ண உணவு இல்லாமல் அவதிப்படுகின்ற காட்சியைத்தான் காண முடிகிறது. இன்றைக்கு உணவில்லாமல் ஓட்டாண்டிகளாய் இருக்கின்ற விவசாயிகளிடம் எப்படியும் கடனை வசூலித்தே தீருவோம் என்று அரசு கூறுவது எந்த விதத்திலும் நியாயம் கற்பிக்க முடியாத செயல் ஒன்று என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, விவசாயிகள் இப்படிப் பட்ட தொல்லைகளுக்கு ஆட்பட்டுக்கொண்டு எந்தவிதமான வழியும் இல்லாமல் நாம் எப்படி வாழப்போகிறோம், வாங்கிய கடனை எப்படி திருப்பிக் கொடுக்கப்போகிறோம் என்று திசை தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்களுக்கு வாழ நல்வழி காட்டவேண்டிய தமிழக அரசு கண்டும் காணாமல் இருக்கின்ற போக்கின் காரணமாகத்தான், அவர்களுடைய பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் அக்கரை காட்டாததின் காரணமாகத்தான் அந்த ஏழை விவசாயிகள், நாராயணசாமி நாயுடு என்பவருடைய தலைமையில் ஏதோ அவர்களுக்கு நல்ல காரியங்களை அவர் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையில் அவர்கள் பக்கம் சென்று விட்டார்கள்.

[முற்பகல் 11-00]

சென்றது மட்டுமல்ல, நாராயணசாமி நாயுடு அவர்களுடைய தவறான கருத்துக்களின் காரணமாக இன்று விவசாயிகள் தவ

றான பாதையிலே இட்டுச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு கோபப்படுவதில் நியாயமில்லை. ஆக, விவசாயிகளுக்கு இருக்கின்ற தொல்லைகளை, துன்பங்களை இந்த அரசு அறிந்து, தெரிந்து அதற்குப் பரிகாரம் காண முன்வரவேண்டும் என்று நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய யோசனைகளை நான் கூற விரும்புகிறேன். விவசாய வருமான வரியை இந்த ஆண்டு உயர்த்தியிருக்கிறார்கள். அது செலக்ட் கமிட்டிக்குச் சென்றிருந்தாலும் கூட, வருகின்ற நேரத்திலே சுமார் 15 கோடி ரூபாய் அதிக வருமானம் இந்த அரசுக்கு வரயிருக்கிறது. ஆக, இந்த அரசுக்கு நிதியில்லாமல் இருந்தாலும்கூட, ரிசர்வ் வங்கியிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமிருந்தோ இந்த அரசு 130 கோடி ரூபாய் கடன்பெற்று, விவசாயிகளுடைய கடன் 130 கோடி என்று சொல்கிறார்கள், அந்தக் கடனை வஜா செய்யவேண்டும். அப்படிச் செய்வார்களானால், இன்றைக்கு விவசாய வருமான வரி மூலமாக அதிகமாகக் கிடைக்கின்ற 15 கோடியிலிருந்து 7 வருஷத்திற்குள் இந்தக் கடனை அரசு திருப்பிக் கொடுத்து விடலாம்; அந்த வாய்ப்பு இன்றைக்கு இருக்கிறது. விவசாயிகளிடமிருந்து பெறுகின்ற அந்த விவசாய வருமான வரியிலிருந்து கிடைக்கின்ற நிதியிலிருந்தே, இந்த விவசாயக் கடன் 130 கோடியை வஜா செய்ய வாய்ப்பிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே அரசுக்கு தெரிவித்துக் கொள்வதோடு, இதிலே ஏன் அரசு தயக்கம் காட்டுகிறது? இதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அமைச்சருக்கு நிதி இலாகாவின் அதிகாரிகள் இதைப்பற்றி எடுத்துக் கூறவில்லையா? அல்லது அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தவில்லையா? என்ற சந்தேகம்தான் வருகிறது. ஆகையால், இதை இன்னும் கவனிக்காமல், மெத்தனமாக இல்லாமல், மேற்கொண்டு இதைச் சிக்கலாக்காமல், அவர்களை மேற்கொண்டும் வாட்டி வதைக்காமல், சுட்டுப் பொசுக்காமல், அவர்களை சிறைச்சாலைகளிலே அடைக்காமல், அவர்களுக்கு நன்மை செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்தை எடுத்துக் கொண்டால், பல மாவட்டங்களிலே தண்ணீர் பற்றாக்குறை நிரந்தரமாக இருக்கக் கூடிய காட்சியாக இருக்கின்றது. இந்தப் பற்றாக்குறையைப் போக்குகின்ற முறையிலே இதற்கு முன்னால் தொடர் கூட்டங்களிலே பல கருத்துக்களை வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். ஆனால், இந்த அரசு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆகையால், வருங்காலத்திலே நான் சொல்லுகின்ற கருத்துக்களை கொஞ்சம் காதிலே வாங்கி, இதில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். திரு. அம்பிகாபதி அவர்கள் அடிக்கடி

சொல்வார்கள். தமிழகத்திலே தஞ்சையிலே நஞ்சையும் புஞ்சையும் தவழ்ந்து விளையாடுகிறது என்று சொல்வார்கள். அந்த நிலை தமிழகத்திலே உள்ள கோவை மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும், ராமநாதபுரம் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும், இந்த மாவட்டங்களிலே எல்லாம், கிட்டத்தட்ட தமிழகத்திலே 60 சதவீதத்துக்கும் அதிகமான நிலப் பரப்பிலே நான் நஞ்சையும், புஞ்சையுந் தவழ்ந்து விளையாடுகின்ற காட்சியை உறுதியாகக் காண முடியும். ஆகையால், இந்த நல்ல திட்டங்களை அரசு நிறைவேற்ற முனவரவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது திட்டம். கோதாவரித் தண்ணீரை நாம் நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டு வருவதிலே எந்த சிக்கலும் சிரமமும் இருப்பதாகத் தெரியவில்லை. கோதாவரியிலே அளவற்ற தண்ணீர் வீணாவதாக நாம் அறிய முடிகிறது. குறிப்பாக, கேட்ச்மென்ட் ஏரியாவிலே அணைக்கட்டுக்கு மேல் பரப்பில் மழை குறைவாகவும், அணைக்கட்டுக்கு கீழே இருக்கின்ற பகுதியில் மழை அளவு அதிகமாகவும் இருக்கின்ற காரணத்தினால், அங்கே அதிகமாக தண்ணீர் சேதமாகின்றது; வீணாகின்றது. ஆக, அந்தத் தண்ணீரைக் கேட்டுப் பெற்றால், ஒகனேகல், காவேரியோடு சேர்க்க வாய்ப்பிருக்கிறது. அங்கே ஒரு அணையைக் கட்டி அதிகமான அளவுக்குத் தண்ணீரை தேக்கினால், தர்மபுரி, சேலம் மாவட்டங்களுக்குப் பயன்படுவதோடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கும் நிரந்தரமாக தண்ணீர் பாசனம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும், அதனால் நல்ல பயன் ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, கேரள நதிகளிலே இன்றைய தினம் 2,500 டி.எம்.சி. தண்ணீர் மொத்தம் கிடைக்கின்றது. இப்படி கிடைக்கக்கூடிய தண்ணீரில் கேரளா அரசு உபயோகித்துக் கொண்டிருப்பது 500 டி.எம்.சி.கேரள அரசினுடைய, கேரள மாநிலத்தினுடைய மொத்தத் தேவை 850 டி.எம்.சி தான். இதை நான் கூறவில்லை. இதைத் தமிழக சீப் எஞ்சினியரும், கேரள சீப் இன்சினியரும் சேர்ந்து ''இந்து'' பத்திரிக்கையிலே 1976 ஆம் ஆண்டு எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

ஆக, 2,500 டி.எம்.சி. தண்ணீரில் 850 டி.எம்.சி. அல்லது 1000 டி.எம்.சி. தண்ணீரையே கேரளா எடுத்துக் கொண்டாலும் கூட பாக்கி 1,500 டி.எம்.சி. தண்ணீர் இன்றைக்கு கேரள மாநிலத்தால் உபயோகப்படுத்த முடியாத நிலைமையில் வீணாகக் கடலில் கலக்கும் அவலக் காட்சியைப் பார்க்கிறோம். அந்தத் தண்ணீரைத் தமிழ்நாட்டுப் பக்கம் திருப்பிவிட்டால் தமிழகத்தில் 60 சதவீதம் நிலப்பரப்பு பயனடையும், விவசாயிகளுக்குப் பெரும் காரியத்தைச் செய்த நற்பெயரும் இந்த அரசுக்குக்

1979 ஏப்ரல் 25] [திரு. ந. இராமசாமி]

கிட்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். 1,500 டி.எம்.சி. தண்ணீர் என்பது கிட்டத்தட்ட 20 மேட்டூர் அணைக்குச் சமமான அளவு என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆயிரம் டி.எம்.சி. தண்ணீர் கிடைத்தாலே 54 லட்சம் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும். இந்தத் திட்டங்களைப்பற்றிச் சொல்லும்போது இதைக் கேட்க மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லாதது பெருங்குறையாக இருந்தாலும், கூட்டுப் பொறுப்பு என்ற முறையில் அவையில் இருக்கும் ஒரே ஒரு அமைச்சராவது கேட்டு அவர்களிடத்தில் கூறுவார்கள் என்று கருதுகிறேன்.

பி.ஏ.பி. விஸ்தரிப்புப் பற்றிப் பல முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. கடந்த ஆண்டு அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஓராண்டுக் காலம் முடிந்துவிட்டது. பி.ஏ.பி. விஸ்தரிப்புக்காக இதுவரை அதிகாரிகள் நியமனம் செய்யப்படவில்லை. எந்தவிதமான பணிகளும் நடத்தப்படவில்லை என்பதை வேதனையோடு, வருத்தத்தோடு கூற விரும்புகிறேன். இதுதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் பெரிய சாதனை என்று நான் கூறினால் அது மிகையாகாது. எந்த ஒரு அரசிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு சில மாதங்களுக்குள்ளாக, வேலை துவக்கப்பட்டு அடுத்த தொடர் கூட்டத்திற்குள் முடிவடையும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த அரசு ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்வதிலேயே தயக்கம் காட்டுகிறது. எடுத்துக் கொண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் மிக அதிகமான தயக்கத்தை காட்டுகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை வேதனையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த தொடர் கூட்டத்தில் ''நல்லாறு அணைத் திட்டத்தைப்'' பற்றி தெளிவாகக் கூறினேன். இதுவரை இன்வெஸ்டிகேஷன் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இப்போதாவது, இந்த அரசு, எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

நிலத்தடி நீரைப் பற்றி ஆராய, அரசு செலக்ட் கமிட்டி அமைத்து விவாதத்திலே விட்டிருக்கிறது. நிலத்தடி நீர் பற்றாக்குறை இருக்கும் காரணத்தால் நிலத்தடி நீரை உபயோகிக்கும் விவசாயிகளுக்குத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற தவறான கருத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, அப்படித் தடை விதிப்பதை விட, நிலத்தடி நீரின் நிலையை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உண்டா என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும். ரி-சார்ஜிங் கெபாசிடியை உண்டாக்கினால் உறுதியாக நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்படாது. பல மாவட்டங்களிலும், பல இடங்களிலும் இன்று மழை பெய்யும் தண்ணீர் வீணாகச் சென்று கொண்டிருக்கும் காட்சியைக்

காண முடிகிறது. ''செக்டாம்கள்'' கட்டுவதன் மூலமும், குளங்கள், குட்டைகள், சிறு அணைகள் கட்டுவதன் மூலமும் தண்ணீரைத் தேக்கினால் விவசாயிகளுக்குப் பலன் கிடைப்பது மட்டுமல்ல; நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை என்ற நிலையை உறுதியாகமாற்ற முடியும். கிட்டத்தட்ட 3,500 டி.எம்.சி தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கொண்டிருக்கும் நிலைமையைக் காணமுடிகிறது. அம்மாதிரியான நல்ல விஷயங்களை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை விட்டு வ்வசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற முறையில் நிலத்தடி நீருக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்டுப்பாடு கொண்டுவரக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ''நல்லதங்காள் ஓடைத் திட்டம்'' நிறைவேற்றப்பட வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக மக்களால் கேட்கப்பட்டும், இந்த அவையிலே பேசப்பட்டும் இது வரை எந்த முடிவுக்கும் வராமல் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. முதலில் ''ஏழு குளத் திட்டம்'' என்றார்கள், பிறகு ஆறு குளத் திட்டம் என்றார்கள், பிறகு ஒரு குளத் திட்டம் என்றார்கள். இப்படி ''கழுதை தேய்ந்து கட்டெறும் பாயிற்று'' என்று கூறுவார்களே, அந்த நிலையில் திட்டங்கள் தேய்ந்து கொண்டிருக்கின்றன. திட்டங்களை உருவாக்கும் நிலை இந்த அரசிடம் இல்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். கண்ணாடிப்புத்தூர் திட்டத்தைப் பற்றி ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். அதையும் இந்த அரசு நடைமுறைப்படுத்தவில்லை. வடமலை ஓடைத் திட்டத்தில் நஞ்செய்க்குக் கொடுக்கும் தண்ணீரை, புஞ்சைக்கு என்று மாற்றினால் மேலும் 4,000 ஏக்கர் பயிர் செய்ய வாய்ப்பு ஏற்படும். பல கிராமங்களில் குடி தண்ணீர் இல்லாத பிரச்சினை இருக்கிறது.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 12 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொள்ளவேண்டும்.

[முற்பகல் 11-10]

திரு. து. இராமசாமி: அடுத்தபடியாக நேரம் இல்லாத காரணத்தால் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாக வைத்து விட விரும்புகிறேன். கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இராஜா சுப்பிரமணியம் அறிக்கையிலே இருக்கிற விவரங்களை இங்கே சட்டமாக நிறைவேற்ற இந்தத் தொடர்கூட்டத்திலே ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார்கள். ஆனால் இது வரையில் அவைமுன் அது வைக்கப்படவில்லை. இராஜா சுப்பிரமணியம் அறிக்கை நீண்ட நெடுங்காலமாக தூங்கிவிட்டது என்று குறிப்பிட்டேன். மறுபடியும் இப்போது தூங்கச் சென்று விட்டதா அல்லது வரப்போகிறதா என்று தெரியவில்லை, இதை நான் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1979 எப்ரல் 25] [திரு. து. இராமசாமி]

அடுத்து கூட்டுறவு நூற்பாலைகள் பல இடங்களிலே இருக்கின்றன, அந்த நூற்பாலைகளிலே அதிகாரிகளுடைய ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. அந்த நூற்பாலைகளுக்கு எல்லாம் இயக்குநர்களைக் கொண்ட போர்டுகளை அமைத்து அந்த அந்தத் தொகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை இயக்குநர்களாக ஆக்கி அதிகாரிகளுடைய ஆதிக்கத்தைக் குறைத்து அந்த நூற்பாலைகளை நல்ல முறையிலே செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையிலே இந்த அரசின் கொள்கை கிராமப் புறங்களிலே தொழிலைப் பரவச் செய்யவேண்டும் என்றும், அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் இன்றுவரை அந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் அந்தமாதிரி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இண்டஸ்ட்ரீஸ்களை ஊக்குவிக்கின்ற முறையிலே கடன் கொடுக்கின்ற அந்த நிறுவனங்கள் எல்லாம் சென்னை மாநகரத்திலேயேதான் இருக்கின்றன.

Sipcot, Tamil Nadu Industrial Investment Corporation. small Industries Development Corporation. ஆகிய இவைகள் எல்லாம் சென்னை மாநகரத்திலே தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு போர்டுகள் இருக்கின்றன, அந்த போர்டுகளிலே எல்லாம் பெரிய தொழிலதிபர்களைத்தான், திரு. பி. ஆர். ராம கிருஷ்ணன் போன்றவர்களை இயக்குநர்களாக வைத்து, அதிகாரிகளை வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள், இப்படிப் பட்ட பெரிய தொழில் அதிபர்கள் அங்கே இருப்பதால் சிறு தொழில் செய்கின்றவர்கள், செய்ய முன்வருகிறவர்கள் போன்றவர்களுக்குத் தேவையான கடன்கள் கிடைக்கின்ற நிலையில் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே சிறு தொழில் செய்கின்ற வர்களை இயக்குநர்களாக நியமிக்கின்ற வகையிலே அதோடு பொதுமக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலே சட்டசபை உறுப் பினர்களையோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களையோ அந்த போர்டிலே நியமித்தால் கிராமப்புறங்களிலே சிறு தொழில் செய்கின்றவர்களுக்கு, செய்ய முன்வருகின்றவர்களுக்குத் தேவை யான கடன்கள், குறித்த காலத்திலே கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படமுடியும்.

Marketing of small-scale Industries product சிறு தொழில் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்து கொடுக்க ஏற்பாடு செய்கின்ற இந்த நிறுவனம் இப்போது தூங்கிக்கொண்டி ருக்கிறது, அந்த நிறுவனம் செயல்படவே இல்லை, அது செத்துவிட்டது என்று கூறினாலும் மிகையாகாது. ஆகவே அந்த நிறுவனத்திற்கு உயிர்கொடுத்து சிறு தொழில் செய்கிறவர் களின் புராடக்ட்ஸை விற்பனை செய்துகொடுக்கச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வற் புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த இன்வெஸ்ட்மெண்ட்

[திரு. து. இராமசாமி] [1979 ஏப்ரல் 25

கார்ப்பரேஷன்களில் கிளைகளை மாவட்டங்களில் துவக்கி மாவட்ட அதிகாரிகள், மாவட்டங்களிலே இருக்கின்ற சிறு தொழில் செய்கின்றவர்களுக்கு உதவியாக, சிறு கிராமங்களிலே எந்த எந்த இடங்களிலே என்ன கச்சா பொருட்கள் கிடைக்கின்றன என்பதையும் அதைவைத்து எந்தஎந்த மாதிரியாக சிறு தொழில்களை செய்யலாம் என்பதையும், அதற்கு எவ்வளவு கடன் என்பதையும் எவ்வளவு சப்ஸிடி கொடுக்கமுடியும் என்பதையும் அதற்கு இன்வெஸ்ட்மெண்ட் எவ்வளவு ஆகும் என்பதையும் எடுத்துக் கூறினால்தான் கிராமப்புறங்களிலே இருக்கிறவர்கள் தொழில் செய்ய முன்வருவார்களே ஒழிய அவைகளை நகரத்திலே வைத்துக் கொண்டிருந்தால் ஏற்கனவே தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் தான இந்தத் துறையிலே ஈடுபட முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது.

ஓசூரை பேக்வர்ட் ஏரியா என்று அறிவித்தார்கள். ஓசூரிலே பல தொழிற்சாலைகள் உருவாகின்றன என்று திரு. சமரசம் அவர்கள் இங்கே பெருமையோடு கூறினார்கள், நான் திரு. சமரசம் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன், ஒசூரிலே இருக்கின்றவர்கள் அங்கே தொழில்களை ஆரம்பிக்கவில்லை. அங்கே தொழிலை ஆரம்பிக்கிறவர்கள் எல்லாம் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களா என்று பார்க்குமாறு கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் சென்னையிலிருந்தும், கோவையிலிருந்தும், மதுரையிலிருந்தும் வந்து தான் அங்கே தொழிலை ஆரம்பிக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏன் முன்னுரிமை கொடுக்கப் படவில்லை? ஏன் கொடுக்கப்படவில்லை, வருங்காலத்திலே இந்தத் தவறுகள் நிகழாமல் சாதாரண சிறு

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் திரு. இராமசாமி அவர்கள் ஹோசூரிலே இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். உண்மைதான் தர்மபுரி மாவட்டத்திலே உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். கேட்கவில்லை. கேட்கிறவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். தொழில் ஆரம்பிக்க முன் வருபவர்களை ஊக்குவிப்பது அரசின் கடமை என்ற வகையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவகளே, நண்பர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சமரசம் அவர்கள் எப்பொழுது அமைச்சர் ஆனார் என்பதை மகிழ்ச்சியோடு அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 25]

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. சமரசத்தைக் குறிப்பிட்டு உறுப்பினர் சொன்னார். ஆதலால், திரு.சமரசம் அதற்குப் பதில் சொன்னார்.

திரு. பா. க. சி. முத்துசாமி : வெளி ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே, தர்மபுரியைச் சேர்ந்த பிரஜைகளுக்கு வேலை கிடைக்காமல், வெளி ஜில்லாவைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்படுகிறது. ஆகவே, தர்மபுரி ஜில்லாக்காரர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்றுதான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சொன்னாரே தவிர வேறல்ல.

திரு. து. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு தொழில் செய்வதற்கு முன் வரவில்லையென்று நண்பர் அவர்கள் கூறினார்கள். கிராமப்புறங்களிலே, சிறு நகரங்களிலே இருப்பவர்கள் எல்லாம், தொழிலிலே எந்தவிதமான சம்பந்தமும் இல்லாதவர்கள். தொழிலே புரியாமல் இருக்கிறது அவர்களுக்கு. அரசினுடைய நல்லெண்ணத்தைப் போற்றுகிறேன். ஆகவே, சிறு நகரங்களிலே இருப்பவர்களுக்கும் கிராமத்திலே இருப்பவர்களுக்கும் உக்க 'ப்ராபகண்டா' செய்ய வேண்டும். அதை அரசு செய்யத் தவறியிருக்கிற காரணத்தால் தான் அவர்கள் கேட்க முன் வரவில்லை. ஆக, எல்லோரும் விவசாயத்திலே ஈடுபட்டு நிற்கிற காரணத்தாலே, அந்த விவசாயத்தை விட்டு அவர்களைத் தொழில் பக்கம் திருப்ப வேண்டுமென்றால், அவர்களை, அறுவை சிகிச்சைகளுக்கும், சிறு சேமிப்பு திட்டங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் பிரசாரம் செய்வதைப் போன்று, இதனையும் பிரசாரத்தின் வாயிலாக எடுத்துக் கூறினால்தான் கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் தொழில் துறைக்கு வருவார்கள். அந்த நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நிலவள வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, இதர கூட்டுறவு வங்கிகளின் சூப்பர்வைசர்கள் போன்றவர்கள், இன்று கூட்டுறவிலே ஒரு பெரிய ஆதிக்கமே நடந்து கொண்டிருந்தது—அதிகாரிகளுடைய ஆதிக்கத்திலிருந்து அவைகள் விடுபெறவில்லையென்றால், அங்கே ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்காது என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். ஆகவே, இந்த நிறுவனங்களுக்கு உடனடியாக அரசு தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை உடனடியாக நடத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறினார்கள். அப்படி சிக்கல்கள் இருந்து தேர்தல் ஒத்தி வைக்கப்படுமானால், அதுவரை அந்த மாவட்டத்திலே உள்ள அல்லது அந்த நிலவள வங்கியின் 'ஏரியா ஆப் ஆப்பரேஷன்' பகுதிக்குள் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட அட்வைசரி

கமிட்டியை நியமனம் செய்து, அங்கே இருக்கிற அதிகாரிகளுடைய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லையென்றால், விவசாய சங்கங்கள் எதுவுமே இயங்காமல் அது முழுமையாக செத்து விடும் என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

அதிகாரத்தைப் பரவலாக்குவதாக இந்த அரசு கொள்கையை அறிவித்தது. ஆனால், இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது தலைமை அலுவலகங்களை மற்ற மாவட்டங்களுக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது எங்களைப் போன்ற பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு பெரும் தொல்லை கொடுப்பதாக இருக்கும் என்பதை வலியுறுத்தி சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த சட்டசபைத் தொடர் கூட்டம் நீண்ட நெடு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. என் தொகுதியிலே இருந்தும், எங்கள் மாவட்டத்திலே இருந்தும் பலர் பல காரியங்களுக்கு வருகிறார்கள். வருகின்ற நேரத்திலே, எல்லா தலைமை அலுவலகங்களும் இங்கேயே இருந்தால்தான், அவர்களை அழைத்துச் சென்று கவனிக்க முடிகிறது. அப்படி இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைமை அலுவலகங்களை மாற்றினால், அமைச்சர்கள் மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து வருவதைப் போல், நாங்களும் சுற்றி வந்தால்தான் காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே தலைமை அலுவலகங்களை மாவட்டங்களுக்கு மாற்றுவதை உடனடி நிறுத்தி அதிகாரத்தை மட்டும் பரவலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறுகிறேன்.

[முற்பகல் 11–20]

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் டெல்லிக்குச் சென்றால் அங்கே அவர்களுக்கு தங்குவதற்கு வசதி வாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே தமிழ் நாடு இல்லத்தில் அவர்களுக்கு தங்குகிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு இவ்வளவு நேரம் எனக்கு பேச அனுமதி கொடுத்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மீது நான் சார்ந்து இருக்கின்ற ஜனதா கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஒவ்வொரு வருஷமும் சட்டமன்றம் பற்றிய மானியம் இங்கே விவாதிக்கப்பட்டு, பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்து பறிமாறப்பட்டு, அதற்கான பல்வேறு முடிவுகள் இங்கே எடுக்கப்பட்டு இருப்பது வழக்கம். ஆனால் இந்த முறை அந்த மானியம் இங்கே விவாதிக்கப்படாமல் ஒட்டுக்கு விடப்பட்ட காரணத்தால், சட்டமன்றத் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. பொ. விஜயராகவன்]

கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது குறிப்பிட்டேன். இப்போது சட்ட மன்றத் துறைக்கு என்று இருக்கிற இடம் போதாது என்று சொன்னதோடு மட்டுமல்ல; பல முறைகளில், பல தடவைகளில் இந்த அவையிலே கூட எடுத்து சுட்டிக்காட்டியிருக்கிறோம். இருக்கின்ற இடம் போதாது, அலுவலர்கள் ஆங்காங்கு இருக்கின்ற இடங்களில் மேஜை, நாற்காலிகளை போட்டுக்கொண்டு அங்கே போவதற்குக் கூட இடம் இல்லாத அளவிற்கு நெருக்கடியான சூழ்நிலையில் இந்தச் சட்டமன்றத் துறை இருக்கிறது என்பதை பல முறை எடுத்துக் கூறியும் இந்த சட்டமன்றத் துறைக்கு அதிகப்படி இடம் செயலகத்தில் ஒதுக்கிக் கொடுக்காதது மிகவும் வருந்தத்தக்கது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

10 மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டால், இங்கே இருக்கிற அலுவலகங்கள் மாற்றப்பட்டால், பழைய தலைமைச் செயலகத்தின் அடித்தளம் முழுவதும் சட்டமன்றத் துறைக்குக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று இருக்கும் நிலை என்னவென்றால், இடம் கொடுப்பதற்கு மற்ற இலாக்காக்கள் தயாராக இல்லை. அப்படியென்றால் சட்டமன்றத் துறை மற்ற இலாக்காக்களுக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டுமா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இடம் இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டால், புதிதாக இந்த சட்டமன்றத் துறைக்கே ஒரு கட்டிடம் கட்டலாம், சட்டசபையையே புதிதாகக் கட்டலாம் என்ற ஆலோசனையை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரள மாநிலத்தைப் பொறுத்த வரையில், அங்கே மேல் சபை கூட இல்லை. அங்கே 134 பேர் அடங்கிய சட்டமன்றத்திற்கு புதிதாக 5 கோடி ரூபாய் செலவில் ஒரு கட்டிடத்தைக் கட்ட முடிவு செய்து இருக்கிறார்கள். இவ்வளவு இட நெருக்கடியை வைத்துக் கொண்டு, இவ்வளவு சிரமங்களுக்கு இடையில் நாம் சபையை நடத்திவருகிறபோது, புதிதாக ஒரு சட்டமன்றத்தையே கட்ட அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த தடவையும் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். மற்ற மாநிலங்களில் பல்வேறு கமிட்டிகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக 3 கமிட்டிகள் மற்ற மாநிலங்களில் இருக்கின்றன. பாராளு மன்றத்திலும் இருக்கின்றன. ஆனால் இந்த மாநிலத்தில் இல்லை. அந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டால் நிர்வாகம் செம்மையாக நடப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அந்தக் கமிட்டிகள் என்னவென்றால் கமிட்டி ஆன் பெட்டிஷன்ஸ், கமிட்டி ஆன் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் பை தி லெஜிஸ்லேச்சர், கமிட்டி ஆன் லைப்ரரி—என்கிற வகையில் மூன்று கமிட்டிகள் இங்கே இந்த சட்டமன்றத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னேன். ஒவ்வொரு தடவையும் நான் ஏதோ எடுத்துக் கூறுகிறேன் என்ற வகையில்..............

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மாநில அரிசன நலக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அது தான் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதை இந்த அரசும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

திரு. பொ. விஜயராகவன் : நான் குறிப்பிட்டது தமிழ் நாடு சட்ட மன்றத்திற்கு உட்பட்டது. அதாவது கமிட்டி ஆன் எஸ்டிமேட்ஸ், கமிட்டி ஆன் பப்ளிக் அண்டர்டேகிங், கமிட்டி ஆன் பப்ளிக் அக்கௌன்ட்ஸ்— அதுபோன்று சட்டமன்றத் துறையைச் சேர்ந்த ஒரு கமிட்டியைக் குறிப்பிட்டேன். நீங்கள் சொன்னதைப் பற்றி பின்னாலே வருகிறேன். இந்தச் சட்டமன்றத் துறையில் அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டால்தான் நிர்வாகம் சிறந்ததாக, செம்மையாக அமையும், அங்கேயுள்ள குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்படுவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பாராளுமன்றத்தில் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு அமைச்சரகத்திலும் ' கன்சல்டேடிவ் கமிட்டி ' என்ற அளவில் ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி வைத்திருக்கிறார்கள். சிறப்பாக நிர்வாக இயந்திரங்கள் நடக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்த அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி வைத்திருக்கிறார்கள். இங்கே அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அது அரிசன நலத்துறையில் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். ஒரு அமைச்சர் மட்டும்தான் இதைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு குழு அமைத்திருக்கிறார்; எல்லா அமைச்சர்களும் இதைப்போன்ற குழுவை அமைத்து அந்தந்த இலாக்காக்களில் எத்தகைய நிர்வாக சீர்கேடு இருக்கிறது ; இலாக்காக்களில் நிர்வாகம் எப்படி நடக்கிறது, அதை சிறப்பாக நடத்த என்ன செய்யலாம், இப்போது எப்படி நடக்கிறது என்பதை அறிந்து கொள்வது மட்டுமல்ல ; தவறுகளை திருத்துவதற்கும் அந்தக் குழுவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. இந்த சட்டமன்றத் துறையில் ஆர். ஆர். செக்ஷன் என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அது ரீசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷன். பெயர் மட்டும்தான் ரீசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷன். அதில் ரீசர்ச்சும் நடைபெறவில்லை, ரெபரன்சும் நடைபெறுவதாகத் தெரியவில்லை ; ரீசர்ச்சும் ரெபரன்சும் நடப்பதாக யாரும் பார்க்கவில்லை. இங்கே வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு—அவர்களுடைய விருந்தினர்களுக்கு இங்கே வந்து பார்க்க பாஸ் வழங்குவதற்கு மட்டும் அந்த செக்ஷன் இருக்கிறது. இங்கே வருகின்றவர்களுக்கு பாஸ் வழங்க வேண்டியதுதான். ஆனால் ரீசர்ச்

1979 ஏப்ரல் 25] [திரு. பொ. விஜயராகவன்]

அண்டு ரெபரன்ஸ் செக்ஷன் எவ்வளவு சிறப்பாக விளங்க வேண்டும்? அது உண்மையிலேயே நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால் அது நூலகத்தோடு இணைந்து செயல்பட வேண்டும். அங்கே இருக்கிற குறிப்புகளைப் பார்த்து ஸ்டாடிஸ் டிக்கல் டேட்டா எடுக்க வேண்டும். தற்போது அப்படி இல்லை. பாராளுமன்றத்திலே ரிசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷன் எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். ஒரு குறிப்பு வேண்டு மென்று ரீசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷனில் போய் கேட்டால், கேட்ட ஒரு மணி நேரத்திற்குள்ளாக வந்து விடும். ஆனால் இங்கே இருக்கிற ரீசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷனில் குறிப்பு வேண்டுமென்று எழுதிக் கொடுத்தால் ஒரு வருடத்தில் வந்து விடுமா என்பதே சந்தேகம். ஆகவே, இந்த ரீசர்ச் அண்டு ரெபரன்ஸ் செக்ஷனை நன்கு கவனித்து, சிறப்பாக நடைபெறும் வகையில் இதை மாற்றியமைக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு நூலகம் இருக்கிறது. அது இந்த சட்டமன்றத் திற்குள்ள நூலகம்தானா என்ற நிலையில் இருக்கிறது. ஏதோ இட நெருக்கடியில் இருக்கிற ஒரு புத்தகக் கடை மாதிரி அது இருக்கிறதே தவிர நூலகமாக இல்லை. அங்கே யாராவது உட்கார்ந்து, ஆற அமர ஆராய்ந்து பார்க்கக் கூடிய முறையில் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. காரணம் இட நெருக்கடி. போகும்போது பார்க்கலாம். வராந்தாக்களில் எல்லாம் அலமாரிகளை வைத்து, அதிலே புத்தகங்களை வைத்தி ருக்கிறார்கள். ஒரு சந்தேகத்தை தீர்க்க, இந்த நூலகத்திற்கு போய் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுக்க வேண்டுமென்றால், அங்கே இருக்கிற ஊழியர்கள் சிரமப்பட்டு, பல இடங்களில் ஓடி, ஆடி, தேடி, அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் கழித்து எடுக்கக் கூடிய சூழ்நிலையில் நூலகம் இருக்கிறது. அங்கே உட்கார்ந்து படிக்க வசதி இல்லை. ஆகவே, இந்த நூலகத்திற்கு ஒரு நல்ல அரங்கத்தை ஏற்படுத்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் வசதியாக உட்கார்ந்து படிக்கின்ற முறையில் சிறப்பாக நூலகத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் கூறி கொள்ள விரும்புகிறேன். எல்லா மாநிலங்களிலும் பார்க்கிறோம். சட்டமன்றத்திற்கு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் இருக்கிறார். இங்கேயும் பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் இருக்க வேண்டுமென்று கடந்த முறையும் கேட்டோம். உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற சங்கடங்களை எடுத்துச் சொல்ல, பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் ஒரு இணைப்புப் பாலமாக இருப்பார். மற்ற மாநிலங்களிலிருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்ல, அவர்களுக்கு வழிகாட்ட, அவர்களுடைய போக்குவரத்து, மற்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்த பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் தேவை. அவர் இங்கே நியமிக்கப்படவில்லை. அதற்கு ஒரு நல்ல அதிகாரியைப் போட்டு, சிறப்பாகப் பணியாற்றச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊழியர்களைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற 'வாச் அண்டு வார்டு' இருக்கிறார்கள். அவர்களுக்கு சாதாரணமாக வருடம் ஒன்றுக்கு இரண்டு சீருடைகள் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இப்போது ஒரு சீருடைதான் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு சரியான பூட்ஸ் கூட இல்லை. ஒன்றுதான், அதுவும் சரியாக கொடுக்கு வில்லை என்று சொல்கிறார்கள். அதையும் கவனித்து இந்த அரசு சரியான முறையில் சீருடையும், பூட்சும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்,

இதைப்போன்ற பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்றத்தைப்பற்றி கடந்த முறையும் சொல்லியிருக்கிறேன். மிகப் பெரிய பத்திரிகளைகளில் எல்லாம் கூட செய்தி வருவதைப் பார்க்கும்போது எங்களைப் போன்றவர்கள் தலை குனிந்து கொள்ள வேண்டிய வகையில் இருக்கிறது. அவைகளை எடுத்துக் காட்ட நேரம் இல்லை. குறிப்பாக,

MLAs' hostel has become a no-man's land, 'anybody can come and go, anybody can come on his own accord

என்ற அளவில் கடந்த முறை நான் சொன்னேன்.

[முற்பகல் 11.30.]

ஆகவே அது குறித்து ஒரு திடமான முடிவுக்கு இந்த அரசு வரவில்லை. பல பத்திரிகைகளில் அதுவும், அகில இந்திய பத்திரிக்கைகளில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் செல்கின்ற பத்திரிகைகளில் கூட அதைப்பற்றி வந்திருக்கின்ற பல செய்திகளைப் பார்க்கின்றபோது எங்களைப் போன்ற உறுப்பினர்கள் வெட்கித் தலை குனிந்து போகின்ற சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளை எல்லாம் உடனடியாக கவனிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்தக் குறைகள் எல்லாம் போக்கப்பட வேண்டும்.

அடுத்து அங்கே உணவு விடுதிகள் இருக்கின்றன. நாங்கள் இளைஞர்கள் பலர் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்றோம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாங்கள் வளர்ந்து வருவதை விடுத்து நாளொரு மேனியும் பொழுதொரு நோயுமாக வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வகையில் உணவு விடுதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த உணவு விடுதிகளை மாற்றி அமைக்க வேண்டும். ஆகவே டெல்லியிலே தமிழ்நாடு ஹவுசிலே இருப்பதைப் போல் அரசாங்கமே சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று நடத்துகின்ற கேண்டீன் ஏற்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் கூடச் சொன்னார்கள் இந்த நிலையைப் பற்றி, அங்கே அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் சாப்பிடப் போவதே இல்லை. வெளியே இருந்து சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகின்றவர்கள்தான் அங்கே

சென்று சாப்பிடுகிறார்கள். அவர்கள்தான் அந்த உணவு விடுதிகளைப் பயன்படுத்துகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலோர் அங்கு சென்று சாப்பிடுவதில்லை. இதற்குக் காரணம் எனனவென்றால் அந்த அளவிற்குத் தரம் இல்லாத நிலையில் அந்த உணவு விடுதிகள் இருப்பதுதான். மேலும் செல்வாக்கு படைத்தவர்கள்தான் அங்கே அந்த உணவு விடுதிகளை நடத்தி வருகிறார்கள் என்றும் கூடச் சொல்லப் படுகிறது. ஆகவே அரசாங்கத் துறையிலே ஒரு கேட்டரிங் டிப்பார்ட்மென்டை வைத்து அங்கே விடுதி அமைக்கப்பட வேண்டும். இருக்கின்ற உணவு விடுதியை வேண்டுமென்றால் வெளியிலே இருந்து வருகின்றவர்களுக்காகக் கொடுத்து விடுங்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரமான உணவைக் கொடுங்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டு கஷ்டப் படக்கூடிய சூழ்நிலையை அங்கே இருந்து தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அரசாங்கத்தால் அங்கே உணவு விடுதிகள் அமையுங்கள் என்பதைப் பணிவோடுகேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னும் பல்வேறு விஷயங்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கருதினாலும் நேரம் இல்லாத காரணத்தால் எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பாக இந்த நிதி ஒதுக்கீடு விவாதத்தின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூறிக் கொள்கிறேன்.

பொதுவாக தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள் வெடித் திருக்கின்றன. அவைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான எந்தத் திட்டங்களையும் அரசாங்கம் அறிவிக்கவில்லை. தமிழக மறு மலர்ச்சிக்கும் தமிழகத்தின் முன்னேற்றத்திற்கும் தேவையான திட்டங்களை அரசாங்கம் அறிவிக்கவில்லை. 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. அதன் பிறகு 9 ஆண்டு காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி செய்தது. அதன் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இரண்டாண்டு காலமாக ஆண்டு கொண்டிருக்கிறது. மூன்று பட்ஜெட்டுகளும் வந்தாகி விட்டன. இவ்வளவு காலமாகியும் எந்தவிதமான அடிப்படை மாற்றங்களும் அதாவது சமுதாயத்திற்கு தேவையான நிலைபாடுகள் எதுவும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே ஒரு கட்சி ஆட்சி என்பதை தமிழக மக்கள் நிராகரிக்கின்ற அளவுக்கு இன்றைக்கு நாட்டில் நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றுவதற்கு ஒரு நல்ல ஆட்சி உருவாக வேண்டும் என்று மக்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள்.

இதற்கெல்லாம் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு தமிழகத்தில் என்.ஜி.ஒ. பிரச்சினை வெடித்திருக்கிறது. அது குறித்து பேசப் போவதாகச் சொல்கிறார்கள். பேசிக் கொண்டே இருக்கிறார்கள். எந்தத் தீர்வும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அதேபோல வழக்கறிஞர்கள் பிரச்சினை. அதாவது திருப்பரங்குன்றம் பிரச்சினை. ''திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால்'' என்ற ஒரு பாடல் இருக்கின்றது. அதுபோல் திருப்பரங்குன்றத்தில் வழக்கறிஞர் அடிக்கப்பட்டதால் உரிய அதிகாரியை சஸ்பென்ட் செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர்கள் கேட்கிறார்கள். அதைச் செய்வதற்குக் கூட இன்றைக்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பது வருந்தத் தக்கது.

அதேபோல ஆசிரியர்களுடைய பிரச்சினை, மாணவர்களுடைய பிரச்சினை, வழக்கறிஞர் பிரச்சினை, இப்படி பல பிரச்சினைகள் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்றது. எங்கே பார்த்தாலும் உண்ணா விரதங்கள் அதிகமாகி இருக்கின்றன. அண்ணா சமாதிக்குப் பக்கத்திலே பெர்மனன்ட்டாக ஒரு உண்ணா விரதக் கொட்டகையை ஏற்படுத்தி விடலாம் போல் தெரிகிறது. அந்த அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் இன்றைக்கு வெடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மக்களுடைய பிரச்சினைகளாக இன்றைக்குப் பார்க்க முடிகிறது.

அதேபோல இன்றைக்கு காவல்துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் பணி புரிகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நேரம் காலமே கிடையாது. அவர்கள் நீண்ட நெடுநேரம் பணி புரிகிறார்கள். ஆகவே காவல் துறையில் உள்ள அனைவருக்கும் 8 மணி நேர வேலை என்கின்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். தொழிற்சாலைகளிலே 8 மணி நேரம் வேலை என்பதுபோல் காவல்துறைக்கும் அமல்படுத்தப்பட வேண்டும். காவல்துறையினருக்கென்று வீடுகள் புதிதாகக் கட்டப்பட வேண்டும். அவர்களுக்கு மின்சாரம் இலவசமாக அளிக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் என்.ஜி.ஓக்கள் விஷயமாக மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. டியர்னஸ் அலெளன்ஸ் பேசிக் பே-ஓடு சேர்த்து ஒரு பரிந்துரை அறிவிக்கப்பட்டது. அடிப்படை ஊதியத்தோடு இணைக்கப்பட்டது. அதன் விளைவாக என்.ஜி.ஓக்களிடமிருந்து, அவர்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு அதிகமாக வீட்டு வாடகை வசூலிக்கப்படுகிறது. எனவே அவர்களுக்குத் தரப்படுகிற எச்.ஆர்.ஏ. மட்டும் தான் பிடிக்க வேண்டும், மாறாக ரூபாய் 120 என்றும், 130 என்றும், 140 என்றும் கேட்பது சரியல்ல என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. மு. அம்பிகாபதி]

அதுபோல் விவசாயிகள் பிரச்சினை. அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்கள் அமைச்சர்களைச் சந்தித்து பேசி, தங்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளை அளிக்க வேண்டும். இந்தப் பிரச்னையில் உங்கள் கொள்கை தெளிவாக இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு பிரச்னைகள் வெடித்துக் கிளம்புகிற நிலையைக் காண முடிகிறது. அரிசன நல பிற் பட்டோர் மாணவர்கள் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகை போதாது. அதை அதிகமாக்க வேண்டும்.

அதுபோல் தஞ்சை மாவட்டத்திற்கு, மாவட்டத்திற்கு மட்டு மல்ல, திருச்சி, காரைக்கால் பகுதிகளைக் காப்பாற்ற காவிரி நீர் பிரச்னையை உடனடியாகப் பேசி தீர்வு காண்கிற முறையில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச்னையினால் தஞ்சை வறண்டுவிடுமோ என்ற அபாயம் என்னை அச்சுறுத்து கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் துரித மான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் வேலை செய்துவிட்டு, மாட்டைக் கொண்டு வந்து கட்டி, பிறகு அந்த மாடு இடியினால் இறந்து விடுகிறது. அதற்கு அரசு நிவாரணம் அளிக்க வேண்டும். காட்டுப்பரங்குடி யில் கணேசன் என்பவருடைய மாடு இடியினால் தாக்கப்பட்டு இறந்து விட்டது. அது பற்றி தாசில்தார் அவர்கள் அந்த நபருக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று ஒரு குறிப்பு அனுப்பி, இன்றுவரையில் அவருக்கு அந்த நிவாரணம் வழங்கப் படவில்லை.

இந்தச் சட்டசபையில் வாச் அண்டு வார்டாக இருக்கக் கூடிய வர்களுக்கு 1978 ஆம் ஆண்டிலே ஒரு செட் டிரஸ் தான் கொடுக் கப்பட்டதாக அறிகிறேன். 2 செட் கொடுத்தால், அவர்கள் சலவை பண்ணி சுத்தமாகப் போட்டுக் கொள்ள முடியும். அவர் களுக்கு நாள் ஒன்றுக்கு 2 ரூபாய் டி.எ. கொடுக்கிறார்கள். குறைந்தது 10 ரூபாயாவது உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல இங்கே இருக்கக்கூடிய, சட்ட சபையில் பணியாற்றக் கூடிய, 10 பியூன்கள் 10 வருஷங் களாக தற்காலிகமாகவே இருக்கிறார்கள். அவர்களை நிரந்தர மாக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்யும் காலங்களில் இடிந்து விழுந்து இறந்து விட்டாலோ, அல்லது இரவு நேரத்தில் பாம்பு கடித்து இறந்து விட்டாலோ அவர்களுக்கு ரூபாய் 10,000 கொடுப்பதற்கான முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க

வேண்டும். 5,000 ரூபாய் கொடுப்பது போதாது. சாதாரண இன்டஸ்ட்ரியில் வேலை செய்தால் நெல்லிக்குப்பத்தில் ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர் ஒருவர் வேலை செய்யும் போது இறந்து விட்டார் என்பதற்காக, ரூ. 23,000 கொடுக்கப் பட்டது. ஆனால், 23,000 ரூபாய் கேட்கவில்லை. 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மதுமரத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், மீனவர்கள் ஆகியவர்களுக்கு ரூ. 10,000 கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் உத்தரவாதமான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் பல்லாயிரக் கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் வீடு கட்டும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 4 மாடி, 5 மாடி, 15 மாடிகள் உல்லாச உப்பரிகையிலே கட்டக் கூடிய அந்த வீடு கட்டும் தொழிலாளர்கள் இன்றைக்கு சிமெண்ட் தட்டுப்பாட்டினால் வேலையிழந்து அபாயகரமான நிலையில் இருக்கிறார்கள். அந்தக் கட்டடத் தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடிய நிலைமையை உருவாக்கவேண்டும்.

[முற்பகல் 11-40.]

அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்கும்போது, எங்களுக்கும் பாதுகாப்பான நிலை வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கின்ற போன் வேலை செய்வதே இல்லை. காலை எட்டு மணிக்கு டெப்டி ஸ்பீக்கரிடம் பேச வேண்டும் என்று போனில் கேட்டால் ஒன்பது மணிக்குத்தான் கனக்ஷன் கிடைக்கும். அதற்கு முன்னால் அவர்கள் சட்டமன்றத்திற்குப் புறப்பட்டு வந்து விடுவார்கள். வந்த பிறகுதான் போன் கிடைக்கும். இந்த நிலையில்லாமல் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி வசதி வேண்டும். சட்டமன்ற கட்சிகளின் அலுவலகத்திற்கும் நேரடி தொலைபேசி வசதி வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இருக்கும்போது அரசின் செலவிலேயே இது அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இருந்தும் ஏன் இதில் காலதாமதம் ஏற்படுகிறது? எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் எளிதில் பேசக்கூடிய முறையில், எல்லாக் கட்சி அலுவலகங்களுக்கும் நேரடி தொலைபேசி அமைத்துக் கொடுப்பதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய கொந்தளிப்பான நிலைமையை நாம் கவனிக்கவேண்டும். எல்லா தொழிற்சங்கங்களிலும் இது ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு காலதாமதப்படுத்துகின்ற போக்கு இருந்து கொண்டே இருக்கிறது. இதில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற

1979 ஏப்ரல் 25] [திரு. மு. அம்பிகாபதி]

போக்குக்கு ஒரு உதாரணம், சுற்றுலா வாரியத்தில் — வேலை நிறுத்த போராட்டம் 20 நாட்களாக நடக்கிறது. இங்குள்ள பிரச்னைகளை பேசித் தீர்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி கேட்டிருக்கிறோம். இன்னும் பேச்சுவார்த்தை முடிந்த பாடில்லை. அவர்களுடைய பிரச்னைக்கு தீர்வும் காணவில்லை. இது போன்ற காரணங்களுக்காக கடந்த 21-ம் தேதி சென்னை நகரத்தில் அனைத்துக் கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கங்களும் ஒன்றாக இணைந்து ஒரு மிகப்பெரிய பேரணியை நடத்தினார்கள். அதில் ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., டி.எம்.கே. பேரவை, உழைக்கும் மக்கள் மன்றம் இப்படிப்பட்ட தொழிற் சங்கங்கள் அனைத்தும் கலந்துகொண்டு அந்த ஆர்ப்பாட்டத்தை, ஊர்வலத்தை நடத்தியது. ஏன் நடத்தினார்கள், தொழிற் சங்கப் பிரச்னைகளில் விவசாயிகள் பிரச்னைகளில், இந்த அரசாங்கத்தின் அணுகு முறையை எதிர்த்துத்தான் இதை நடத்தினார்கள். ஆகவே, இப்பேர்ப்பட்ட பிரச்னைகளில் அரசு காலம் தாழ்த்தாது உழைக்கின்ற அந்த மக்களின் பிரச்னைகளை தீர்க்க வேண்டும். இன்றைக்கு உழைக்கின்ற அந்த மக்கள் எல்லாம் கொதித்து எழுந்திருக்கிறார்கள். எல்லோரும் போராடுகிறார்கள், இன்றைக்கு போராடாதவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள் மட்டும்தான். என்.ஜி.ஓ.க்கள் போராடுகிறார்கள், ஆசிரியர்கள் போராடுகிறார்கள், இளைஞர்கள் போராடுகிறார்கள், வேலைகோருகின்றவர்கள் போராடுகிறார்கள், அனைவரும் இப்படிப்பட்ட போராட்டத்தில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் எந்தவிதமான திட்டமும் கிடையாது. எல்லோருக்கும் வேலை என்று அறிவிக்கிறார்கள். செய்த வேலைக்கு உதவித் தொகை என்று சொல்கிறார்கள். அப்படி சொன்னால், என்ன வேலை, மண் வெட்டும் வேலைதான் கொடுக்கமுடியும். அப்போதுதான் மெஷர்மென்ட் எடுக்க முடியும். இன்றைக்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் வேலைக்காக 9 லட்சத்து 87 ஆயிரம் பேர்கள் பதிந்திருக்கிறார்கள், இவர்களுக்கெல்லாம் என்ன வேலை கொடுக்க போகிறோம்? தீவிர நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரப்போகிறோமா, கோவில்களுக்கு சொந்தமான நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்கு கொடுக்கும் ஏதாவது திட்டத்தை வைத்திருக்கிறோமா, அதற்கான ஏதாவது கொள்கை இருக்கிறதா? ஒன்றும் கிடையாது. விவசாயிகள் எல்லாம் கடன் பட்டுக்கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

''விடம்கொண்ட மீனென வெந்தணல் வாய்மெழுகென,
படம்கொண்ட பாம்பின்வாய் பற்றிய தேரையென
திடம் கொண்ட ராமபாணம் செறுகளத்துற்ற போது
கடன்பட்டார் நெஞ்சம் போல், கலங்கினான் இலங்கை
வேந்தன்''.

என்ற நிலையில் கடன்பட்ட நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவனுடைய விளைபொருட்களுக்கு தகுந்த விலையில்லை, இன்றைக்கு அறுவடைசெய்கின்ற குறுவை

நெல்லுக்கு 34 ரூபாய், 40 ரூபாய் என்ற அளவில் கிடைக்கிறது. அதே நேரத்தில் உரவிலையேற்றம், பூச்சிமருந்து போன்றவற்றின் விலையேற்றம், மற்ற விவசாயக் கருவிகளுக்கெல்லாம் விலை யேற்றம், அதே நேரத்தில் கரும்புக்கு விலையில் வீழ்ச்சி, நெல் லின் விலையில் விழ்ச்சி, இது எந்த வகையிலும் நியாயமில்லை. விவசாயிகள் வாங்கிய கடனை கட்டுவதற்கு எந்தவிதமான வழி யும் இல்லாமல், வகையுமில்லாமல திண்டாடிக்கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் அவர்களிடம் கேட்பதும் நியாயமில்லை. அவர்கள் கட்ட வேண்டாம் என்று நினைக்க வில்லை, கட்ட முடியாமல் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள், உயர்மட்டக் குழுவின் அறிக்கையில் என்ன வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஆதரவாக என்ன அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட விவசாயப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஒரு தெளிவான கொள்கை இல்லை என் பதை சுட்டிக்காட்டி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு போன் மற்றுமுள்ள வசதிகளை எல்லாம் துரிதமாக செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, நான் மெயின் விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு முன்னால் ஒன்றி ரண்டு ரெபரன்ஸ்களை குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக திரு. பாங்கோ அவர்கள், நேற்று காலையில் திடீரென்று மரண மடைந்தது எல்லோரையும் வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது. அதை நீங்கள் ரெபரன்ஸ் பண்ண முடியாது என்ற நிலையிருந்தாலும், நாங்கள் பேசும்போது இதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அவரைப் பொறுத்தவரையில், இந்த ஹவு ஸில் உள்ள அத்தனைபேரையும் வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது என்பது உண்மை. பஞ்சாபிலிருந்து வந்திருக்கக்கூடிய ஒருவர், தமிழகத்தில் — தமிழக அரசில் பல்வேறு பொறுப்புகளில் இருந்து தமிழ் கற்றுக்கொண்டு, தமிழகத்திலுள்ள மக்களுடைய பாப் புலர் ஆபீசராக, நிர்வாகத்தில் இருந்து வந்தவர், கலெக்டராக இருந்த நேரத்திலும் சரி, டிப்பார்ட்மென்ட் செக்ரட்டரியாக இருந்த நேரத்திலும் சரி, அவர் நல்லபடியாக பணியாற்றி வந் திருக்கிறார்.

அப்படிப்பட்டவர் திடீரென்று மரணமடைந்தது வேதனை யாகத்தான் இருக்கிறது. நமக்கே இவ்வளவு வேதனை ஏற் படுகிறதென்றால், அந்தக் குடும்பத்தினருக்கு எத்தகைய வேதனை ஏற்பட்டிருக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆகவே, நம்முடைய ஆழ்ந்த வருத்தத்தை இந்தக் குடும்பத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

அடுத்தபடியாக, முந்தா நாள் நடந்த இந்த பந்த் சம்பந்தமாக ஒரு சப் இன்ஸ்பெக்டர் இறந்தது தெரியும். அதைப்பற்றி நாம் பேசியிருக்கிறோம். அதனால் மாநிலம் பூராவும் கான்ஸ்டபிள்கள் மத்தியில் ஆத்திரம் இருக்கும். எப்படி ஆத்திரப்படுவார்கள் என்பதை நாம் உணர முடியும். ஆனால், அதையொட்டி மாநிலத்தில் பல்வேறு இடங்களில் கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்படும்போது, அந்த ஆத்திரம் பிரதிபலிக்குமானால், பல்வேறு ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், கிராமத்திலே உள்ள ஏழைகள் தாக்கப்படுகின்ற முறையில் பலநிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன ; நடக்கக் கூடும். ஆகவே, நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஆத்திரம் ஏற்கெனவே ஒரு போலீஸ் இன்சிடென்ட் நடந்தாலே அவர்கள் எப்படி ஈடுபடுவார்கள் என்பது நமக்குத் தெரியும். எனவே, குறிப்பாக இந்த மரணத்தால் ஆத்திரத்தில் பல நிகழ்ச்சிகள், பல கிராமங்களில் ஏற்பட்டு சாதாரண ஏழைகள் பாதிக்கப்படுவார்கள். எனவே, இந்த ஏழைகளைப் பாதுகாக்கின்ற வகையில், போலீஸ் நடவடிக்கைகளைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று, என்.ஜி.ஜி.ஓ-க்களைப் பொறுத்தவரையில் 25 ஆம் தேதி இன்று சட்டசபையில் அரசாங்க தரப்பில் அறிக்கை வெளியிடப்படும் என்று பத்திரிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரம்வரை அறிக்கை விடப்படவில்லை. அந்த என்.ஜி.ஜி.ஓ-க்கள் சம்பந்தமான அறிக்கையை இந்த அவையில் வெளியிட வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் பல்வேறு துறைக் கொள்கை சம்பந்தமாகவும், திட்டங்கள் சம்பந்தமாகவும், அணுகுமுறை சம்பந்தமாகவும் சுமார் ஒன்றரை மாதங்களாக இந்த அவையில் நாம் விவாதம் நடத்தியிருக்கிறோம். இந்த விவாதத்திற்கு பல அமைச்சர்களும், நிதி அமைச்சரும், முதல் அமைச்சரும் பதில் கூறியுள்ளார்கள். இந்த பதில்களில் இருந்து முக்கியமான சில Certain important issues stand out பிரச்னைகள் முன்நிற்கின்றன. ஒன்று, தங்களுடைய தொழிற் கொள்கை சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருப்பது போதாது நமது முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று, அந்த பன்னாட்டு முதலாளிகளை நம் நாட்டிற்கு வந்து முதலீடு செய்யச் சொல்லியிருப்பதாக பத்திரிகையிலே பார்த்தோம். ஆகவே, பன்னாட்டு முதலாளிகளை நம் நாட்டுக்கு அழைப்பது என்பது தமிழக அரசின் முக்கியமான தொழிற்கொள்கையாக அமைந்திருக்கிறது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம். இதுதான் கடந்த 30 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியின் கொள்கையாக இருந்தது. இதுதான் இன்றைக்கு

அதிகாரத்திற்கு வந்திருக்கும் ஜனதா அரசாங்கத்தின், மைய அரசாங்கத்தின் கொள்கையாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட கொள்கையின் அனுபவம் என்ன ?

பன்னாட்டு முதலாளிகள் நமது பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில்களைக் கட்ட மாட்டார்கள். அவர்கள் உலக சந்தையின் தேவைக்கேற்ப எப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமோ, அப்பேர்ப்பட்ட தொழில்களைக் கட்(வார்கள். இது நம்முடைய பொருளாதாரத்தை மேலும், dependent சார்புடையதாக பன்னாட்டு தேவையின் சார்புடைய பொருளாதாரமாக மாற்றியமைக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒரு பயங்கரமான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்ன விலை பன்னாட்டு முதலாளிகளுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது? சமீபத்திலே ஒரு சர்வே ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவால் செய்யப்பட்டது. கமிஷன், லாபம், மற்றும் technical know-how அதனுடைய பீஸ் ஆகியவைகளின் பேரில் அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய பணம் 1964–65 ஆம் ஆண்டிலே இந்த 877 வெளிநாட்டுக் கம்பெனிகளிலே இருந்து 2,799 இலட்சம் ரூபாய் அனுப்பியிருக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு 1969–70 லே அனுப்பியது ரூ. 4,825 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

(முற்பகல் 11.50)

இது ரிசர்வ் பாங்க் சர்வே, ஆகவே, நமது நாட்டை வளர்க்கும் நண்பர் அல்ல பன்னாட்டு முதலாளி; நமது ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் ஓநாய்கள்—மல்டி நேஷனல் பொறுத்தவரை சொல்ல விரும்புகிறேன். அந்த ஓநாய்களைத் தமிழ் நாட்டுக்கு அழைப்பது என்பதுதான் அர்த்தம் — Treading the beaten track இந்த விஷயத்தில் ஏற்கெனவே கடந்த கால அரசாங்கங்கள் போய்க்கொண்டிருந்த பாதையில்தான், — பீட்டன்-ட்ராக்கில்—தோல்வியடைந்து கொண்டிருக்கும் பாதையில் தான் இந்த அரசும் போய்க்கொண்டிருக்கிறது.

இரண்டாவது, சமீபத்தில் தொழில்களில் முதலீடு செய்ய தமிழக தொழில் அதிபர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்று முதல்வர் அவர்கள் கூறினார்கள். அதற்குத் தொழில் அமைதி பிரதான காரணம், அந்த வகையில் தொழிற்சங்கத் தலைவர்கள் ஒத்துழைத்தார்கள் என்று எங்களைப் பாராட்டினார்கள், முதலாளிகள் முன்வந்தார்கள் என்பது உண்மை. சமீபத்தில் அவர்கள் அதிகமாக வருவதைப் பார்க்கும் போது அப்படித்தான் தெரிகிறது. அதிலே எங்களது ஒத்துழைப்பு சிறிதளவுதான் இருக்கிறது. ஆனால், நாங்கள் வேலை நிறுத்தங்களை நடத்திய போது அரசாங்கத்தின் செயல்பாடுகளைப் பார்த்துதான் முதலாளிகள் முன்வந்திருக்கிறார்கள் என்பதுதான் எங்கள் கணிப்பு. டி.வி.எஸ். தொழிலாளர்கள் போராட்டத்தை அரசாங்கம் சீர் குலைத்ததை முதலாளிகள் பார்த்தார்கள். டி.ஐ. சைக்கிள்

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

தொழிலாளர் போராட்டத்தை எட்டு மாத காலம் நீடிக்க வைத்து மூன்று லத்தி சார்ஜ், ஒரு பையரிங் நடத்தி அதை உடைத்ததை முதலாளிகள் பார்த்தார்கள். நாலரை மாத காலம் சிம்கோ தொழிலாளர் போராட்டத்தைச் சீர்குலைக்க முயற்சித்ததை முதலாளிகள் பார்த்தார்கள். அக்டோபர் 23-ம் தேதி, பந்த் திருச்சி நகர பந்த் ஆகியவற்றின்மீது இரும்புக்கர நடவடிக்கையை முதலாளிகள் பார்த்தார்கள். மூன்று மாதத்திற்குள் வேலை நிறுத்தங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பேன் என்று முதல்வர் அவர்கள் பேசியதை முதலாளிகள் படித்துப் பார்த்தார்கள். வேலை நிறுத்த தடை ஆர்டினன்சை உபயோகப்படுத்தவில்லையென்று சொன்னாலும் அரசாங்கம் என்ன விரும்புகிறது என்ற எண்ணத்தை முதலாளிகள் பார்த்தார்கள். அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளின் காரணமாக இங்கு தடையற்ற சுரண்டலை அனுமதிக்க இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்று கன்வின்ஸ் ஆன பிறகுதான் முதலாளிகள் முன் வந்திருக்கிறார்கள் என்பது எங்கள் கணிப்பு.

இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. சமீப காலத்தில் அரசாங்கம் போராட்டங்களை உடைத்ததானது உள்நாட்டு முதலாளிகளையும், பன்னாட்டு முதலாளிகளையும் ஆகர்ஷிக்க அரசு மேற்கொண்ட உணர்வு பூர்வமான கான்ஷியஸ் பாலிசி என்பது இதிலிருந்து புரிகிறது. ஆங்கிலத்தில் சொல்வதாக இருந்தால்—

Suppression of strikes was a conscious policy to appease and attract Indian and Foreign capital, as part of Tamil Nadu Governments industrial policy.

அப்படித்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்த தடை அவசரச் சட்டத்தைக் கைவிட்ட பிறகும் வேலை நிறுத்தங்களை தடை செய்யும் ஆசையை அரசு கைவிட்டதாகத் தெரியவில்லை. மேலவையில் ஒரு கேள்விக்கு டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் பதில் கூறுகையில் — டாக்சிகள் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுபவர்கள் வேலை நிறுத்தங்கள் செய்வதைத் தடை செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கோட்பாட்டை அரசு ஏற்றால் அந்தத் தடையை பஸ் போக்குவரத்துக்கு விஸ்தரிக்க எத்தனை நாழி ஆகும்? அதே கோட்பாட்டை அத்தியாவசியத் தொழில்கள் என்ற பெயரில் மற்றத் தொழில்களுக்கு விஸ்தரிக்கத் எத்தனை நாழி ஆகும்? ஸ்ட்ரைக் தடை செய்யும் சட்டத்தை 'பேக் டோர்' வழியாகக் கொண்டு வரக்கூடிய அந்த நிலை டிரான்ஸ் போர்ட் மினிஸ்டர் எடுத்திருக்கும் நிலை, 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியதாம்' என்று தமிழில் சொல்வார்கள். அப்படிப்பட்ட கதையாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நேற்று நான் மேலவையில் பேசியது பற்றிய விளக்கத்தை

எடுத்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, ஒருஅரசு மட்டுமே எல்லாத் தொழில்களையும் ஆரம்பித்துவிட முடியாது என்பதையும் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். பலமுறை பேசியிருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை, வங்காள முதலமைச்சர் அவர்கள் கூட பல தொழிலதிபர் கள் அங்கு வந்து தொழிலில் அக்கறை காட்டி தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட் டுள்ளார் என்பதை இந்தநேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எந்த நோக்கத்தில் அழைத்திருப்பார்களோ அந்த நோக்கத்திலேதான் நானும் சொல்லியிருப்பேன் என்பதை அவர் அவர்கள்நம்ப வேண்டும். அதோடு தொழிலாளர்களுக்கும் தொழி லதிபர்களுக்குமிடையில் உறவு ஏற்பட எந்தச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்பதைப்பற்றி மேலவையில் பேசியிருக்கிறேன். அதைப் பற்றியும் விளக்கம் தெரிவித்தால் நன்மையாக இருக்கும்.

திரு. ரா. உமாநாத் : இந்த மாநிலத்தில் தொழில் அதிபர் களைக் கூப்பிட்டுப் பேசுவது பற்றி ஆட்சேபிக்கவில்லை. மேற்கு வங்க முதலமைச்சர் அவ்வாறு பேசியிருக்கிறார். இரண்டுக் கும் இருக்கும்படியான வித்தியாசம் —மேற்கு வங்கத்தில் வேலை நிறுத்தத்தை உடைக்க குண்டர்களுக்கோ, போலீசுக்கோ இடம் கொடுக்காமல் பாதுகாப்பளித்து அதன் அடிப்படையில்தான், இந்த விஷயத்தை விட்டுக் கொடுக்க முடியாது, தொழிலாளர் களைப் பாதுகாத்துத்தான் தீருவோம் என்ற அடிப்படையில் தான் முதலாளிகளை அணுகியிருக்கிறார்கள். எங்களுடைய டிபரன்ஸே இந்த கவர்ன்மென்டோடு, இங்கே அந்த மாதிரி இல்லாமல் நான் ஏற்கெனவே லிஸ்ட் படித்தமாதிரி பல்வேறு போராட்டங்களை உடைத்ததின் அடிப்படையில் நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறீர்கள். எங்களுடைய கருத்து அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். சட்டங்களைப் பொறுத்தவரைக்கும் கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். 12 (3) ஒப்பந்தங்கள் ஏற்படுகிறபோது அது சம்பந்தமாக ஷரத்துக்களை தொழிலாளர்கள் முன் வைத்து பெருவாரியான தொழிலாளர்கள் எத்தனை சதவீதம் என்றல்ல, 50—க்கு மேலே எத்தனை சதவிதம் ஆனாலும்சரி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஷரத்துக்களை லேபர் டிபார்ட்மென்ட் செய்து 12 (3) ஆகவேண்டுமென்ற கருத்தோடு எங்களுக்கு ஒருமைப்பாடுதான், அதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் எங்களுக்குப் பிடிக்காத ஷரத்துக்களாக இருந்தாலும் தொழி லாளர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டால் அதற்கு நாங்கள் கட்டுப்படுவோம். அன்றைக்கே 10—வது மாடியிலே நடந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே தலைமை வகுத்த முதலமைச்சர் அவர்களிடம் நான் சொன்னேன். தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்த ஒப்பந்தத்தையும் நாங்கள் ஆதரித்து நிற்போம் என்று சொன்னேன். மற்றபடி வேறு எந்த டீடெய்ல் ஸையும் பத்திரிகையிலே பார்க்கவில்லை.....

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தபோல் வேலை நிறுத்தத்தைப் பற்றியும் முடிவு எடுக்கும்பொழுது அதே பெருவாரியான தொழிலாளர்களுடைய வாக்குகளைப் பெற்று அந்த முடிவுக்கு வரவேண்டுமென்பதைப் பற்றியும் லாக்அவுட் செய்வது பற்றியும் ஒரு நல்ல முடிவிற்கு வர சட்டம் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசுவிரும்புகிறது என்பதையும்தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அந்தத் தெளிவை நான் பத்திரிகையிலே பார்க்கவில்லை. ஆகவேதான் அதனுடைய டீடேய்ல்ஸை நான் சொல்லவில்லை. வேலை நிறுத்தத்தைப் பொறுத்த வரைக்கும் சாதாரணமாக கோரிக்கை வைத்து வேலை நிறுத்தம் செய்யும்போது பேலட் வைப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணையில்லை. பல யூனியன்களுடைய ரூல்ஸிலும் பேலட்டிற்கு இடம் உண்டு. பட் எல்லாம் பேலட் மூலமாக என்று சொல்லமுடியாது. ஏனென்றால் கடந்த காலச் சரித்திரத்தைப் பார்க்கும்போது திடீரென்று முதலாளிகள் புரவோக் பண்ணுவதன் மூலமாக தொழிலாளர் வேலை நிறுத்தம் நடக்கிறது. திடீரென்று தொழிலாளர்கள் குண்டர்களை வைத்து அடிக்கப்படுகிறார்கள். இதற்கு பேலட் வைத்துத்தான் ஸ்ட்ரை என்று சொன்னால் அது நடக்காது. பொலிட்டிகல் சென்ஸ் என்ற முறையிலே நடக்கும், அரசியல் வேலை நிறுத்தங்கள் புரட்டஸ்ட் என்ற முறையிலே நடக்கும், அகில இந்தியாவிலேயும் ஸ்ட்ரைக் நடந்தால் அதிலே பங்கு பெறவேண்டிய நிலைமை ஏற்படும். அந்த மாதிரியாக ஏற்படுகிறபோது இந்த மாதிரி பேலட் வராது. சாதாரணமாக தொழிற் சங்கம் டிமான்ட்ஸை வைத்துக் கொண்டு நடத்தக்கூடிய விஷயங்களில் பேலட்ஸ் என்பது இருக்கிறது. மற்ற டீடெய்ல்ஸ் வருகிறபோது நிச்சயமாக சொல்கிறேன். அதிலே எங்களுக்கு கருத்து உண்டு.

ஊழலை ஒழிப்பதைத்தான் தங்களுடைய பிரதான திட்டமாக வைத்து ஆட்சிக்கு வந்தார்கள் என்பது நமக்கு எல்லாம் தெரியும். அப்படியானால் ஊழல்களுக்கு யீல்ட் பண்ணும் விஷயத்தில் கடந்தகால அரசுகளைவிட மாற்று நடைமுறை இருக்கவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஊழல் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்தால் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுப்பதும் அதுவும் பெரிய புள்ளிகளாக இருந்தால் அதைவிட அதிலே ரொம்ப சுறுசுறுப்பாக அனுகவேண்டுமென்பதும் தான் நடைமுறையாக இருக்கவேண்டும், ஆனால் கடந்த கால அரசாங்கம் மாதிரியான முறையிலே இந்த அரசாங்கம் நடக்கிறது என்றுதான் சொல்ல முடியும். ஆகவே, அந்த மாதிரியான நடைமுறையை நாங்கள் இதுவரையில் இன்னும் பார்க்கவில்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் இலாகாவை மூன்று பிரிவுகளாகப் பிரித்து லஞ்சம் ஊழல் இவைகளைத் தடுப்பதற்கு ஒரு பிரிவு என்று வைக்கப்பட இருப்பதையும் அது செயல்படும் பொழுது எந்த அதிகாரியாக இருந்தாலும் யாராக இருந்தாலும், அவர்கள் நடவடிக்கை எடுக்க அதிகாரமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதையும் நான் தெரிவித்திருக்கிறேன். அன்று நான் பேசியதிலே அவ்வளவு தெளிவில்லை என்று இருக்குமாயின் அந்தத் தெளிவையும் இப்போது பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கனம் முதலமைச்சர் குறிப்பிட்டதைக் கவனித்தேன். அவரின் எண்ணத்தை நான் நம்புகிறேன். ஆனால் நடைமுறை எப்படி ஆகிறது என்பதை எல்லோரும்பார்ப்பார்கள். எப்படி நடைமுறை இருக்கிறது என்பதை இந்த ஹவுஸினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். போன வாரம் திருச்சியில் உள்ள ரீஜினல் எஞ்சினியரிங் காலேஜில் நடக்கிற ஊழல்கள் பற்றி நான் முதலமைச்சரிடம் ஏற்கெனவே மனு கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி குறிப்பிட்டேன். அந்த மனுவிலே உள்ள சில உதாரணங்களைச் சொன்னால் உண்மையில் பலரும் மலைத்து விடுவார்கள். அவ்வளவு துணிச்சலாக நடக்கிறதா என்று நினைப்பார்கள். பால்பிரதீப் குமார் என்ற ஒரு பையன், 1978 ஆம் ஆண்டிலே காலேஜிலே சேருவதற்கு அப்ளிகேஷன் போடுகிறார். மார்க் குறைவு என்று கவர்ன்மென்ட் நியமித்து இருக்கக்கூடிய போர்ட், அந்த செலக்ஷன் கமிட்டி அவரை நிராகரித்திருக்கிறார்கள்.

[நண்பகல் 12—00]

நிராகரித்த பிறகு, இப்படி செலக்ஷன் கமிட்டி நிராகரித்திருக்கக் கூடிய அந்தப் பையனை, கல்லூரி முதல்வர், புடக்காளி வழியாக அட்மிட் செய்து விட்டார். இப்பொழுதும் இருக்கிறார் அந்தக் கல்லூரியிலே, எப்படி என்று கேட்பீர்கள்? P. S. G. Institute of Technology-யிலே கொண்டுபோய் சேர்த்து, inter collegiate transfer என்ற பெயரால் கல்லூரி முதல்வர், தனக்கிருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, அந்தக் கல்லூரியிலேயிருந்த அந்தப் பையனை நான் டிரான்ஸ்பர் பண்ணுகிறேன் என்ற முறையிலே அந்தப் பையனை, அதாவது, செலக்ஷன் கமிட்டி ரிஜக்ட் பண்ணின பையனை, இந்த மாதிரி 'பாக்வார்ட் மெத்தட்'-டிலே சேர்க்கப் படுகிறார்கள் என்று நான் சொல்கிறேன். அதுவும் P. S. G. institute லே சேர்க்கப்பட்ட ஒரே வாரத்திலே Transfer to Regional Engineering College. Selection Committee நிராகரித்தவருக்கு ஏது தகுதி என்று கேட்பீர்கள். ஒரே தகுதி என்று சொன்னால், மார்க்கெல்லாம் கிடையாது. மத்திய அமைச்சரின் சமூக நல அமைச்ச

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

ரகத்தின் கூட்டுச் செயலாளர் திரு. எம். எம். ராஜேந்திரன் ஐ.ஏ.எஸ். ன் மகன் என்பதுதான் அவருடைய தகுதி. facts which nobody can challenge.

டி. சீனிவாசன், அதே 1978-லே, தமிழ்நாடு 'கோட்டா' வில் சேர மனு செய்தார். அவர் தேறியதே II class-ல் தான், previous examination-ல். ஆகவே தகுதியற்றவர் என்று செலக்ஷன் கமிட்டி நிராகரித்தது. ஆனால், கல்லூரி முதல்வர் அவரைச் சேர்த்து விட்டார். முதல் செமஸ் டரிலே, பெரும் பகுதி அவருக்கு—'ப்ரசன்சே' இல்லை—அப்படியும் சேர்த்துவிட்டார். அவர் தகுதி படைத்தவர் அல்ல, மார்க் இல்லை, ப்ரசன்ஸ் இல்லை. இன்றும் படித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய ஒரே தகுதி என்ன? அவர் திருச்சி பி.எச்.இ.எல். எக்சிக்யூடிவ் டைரக்டர் திரு. தீனதயாளன் மகன். செகன்ட் கிளாசிலே பாஸ் ஆனாலும், ரிஜெக்ட் பண்ணினாலும் அவருக்கு இடம் கிடைக்கிறது. இன் னொரு பையன், ஷியாம் சபாநாயகம்—செலக்ஷன் கமிட்டி நிராகரித்தது—புடக்காளி வழியாக சேர்க்கப்பட்டார். தகுதி என்ன? மத்திய அரசின் Education Secretary Mr. Sabhanayagam உடைய மகன்.

இந்தியாவின் 'மேப்'பில், பீகார் எங்கே இருக்கிறது? வடக்கே தானே இருக்கிறது? நாம் பார்த்த 'மேப்' பில். ஆனால், இங்கே இருக்கிற கல்லூரி முதல்வருக்கு தனி மேப் இருக்கும் போல் இருக்கிறது. அதிலே, பீகார், திருவெறும்பூருக்கு 30 கிலோ மீட்டருக்குள்ளே தான் இருக்கிறது என்று அவருடைய மேப்பில் தெரிகிறது போல் இருக்கிறது. ஏனென்றால், 'பார்ட் டைம் பி.இ. கோர்ஸ்' என்று ஒன்றிருக்கிறது. அதிலே, 30 கிலோ மீட்டருக்கு உட்பட்டு வசிக்கக்கூடியவர்களுக்குத்தான் அட்மிஷன் என்பது ஒரு 'கன்டிஷன்'. ஆனால், பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இந்த மாநிலத்திலே இல்லாத, யாதவ் என்பவரை அந்தக் கல்லூரியில் சேர்த்தார். ஏன்? அன்றைய Deputy Education Minister.

மத்திய சர்க்காரிலே அன்று இருந்தவர்—இவருக்கு வேண்டிய வர். பெயர், டி.பி. யாதவ்—இவர் யாதவ்—அவருக்கு வேண்டிய வர். யாதவ்—இந்த யாதவ். ஆகவே, அவரைக் கொண்டு வந்து இங்கே சேர்த்தார். இன்னும், நான் நிறையக் கொடுக்க முடியும். முதல்வருக்குக் கொடுத்த மகஜரிலே நிறைய இருக்கிறது. நான் 'சாம்பிள்' சொன்னேன்.

ஏன் இப்படி கல்லூரி முதல்வர் செய்கிறார் என்று சொன் னால், கல்லூரி முதல்வர் செய்திருக்கக்கூடிய பல்வேறு 'சீரியஸ்' ஸான பினான்சியல் இர்ரெகுலாரிட்டீஸ், மற்றவை இந்த மகஜரிலே கொடுத்திருக்கிறேன். இப்பொழுதாவது, அந்த மாதிரி Individual Complaint ஆகக் கொண்டு வரு கிறபொழுது, அதை மூடி மறைக்க, Wire – puee

பண்ண வேண்டாமா, இல்லையா? அதற்கு key position -ல் இருக்கக்கூடியவர்கள் தேவைப்படுமா, இல்லையா? அந்த 'கீ பொசிஷனி'ல் இருக்கக்கூடியவர்கள் இப்படித்தான் அட்மிஷன் மூலமாக விலைக்கு வாங்குவது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, கல்லூரி முதல்வர், பாக்கெட்டிலே, இந்த ஊர் ஐ.ஜி. அல்ல, இன்னொரு மாநிலத்தினுடைய ஐ.ஜி. அவர் பாக்கெட்டிலே இருக்கிறார், மகனைச் சேர்த்ததனால். இன்னொரு டிபார்ட்மெண்ட் செக்கரட்டரி, ஐ.ஏ.எஸ். ஆபீசர் இருக்கிறார், பல ஆபீசர்களை வைத்திருக்கிறார். எப்பொழுது, எப்பொழுது, எந்த, எந்த ஆபீசரை pawn மாதிரி யூஸ் பண்ண வேண்டுமோ, அப்பொழுது அவர் யூஸ் பண்ணு கிறார். ஆகவே, அந்த மாதிரி நிலைமை இருக்கிறது. நான் 'சார்ஜஸ்' கொடுத்து, ஒரு வருடம் ஆகிவிட்டது. இதுவரை, எந்த தஸ்தாவேஜும் பிடிக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏன்? சதுரங்க ஆட்ட போர்டில்—'செஸ் போர்டில்'—கல்லூரி முதல்வர் எந்தப் பகடைக்காயை நீக்கி உள்ளார். எந்த 'பான்'—ஐ நீக்கி உள்ளார் என்று தெரியவேண்டும். அந்தப் பகடைக் காய் இருந்திருந்தால், யார் அந்தப் பகடைக் காய்?

இவ்வளவு சீரியஸ் ஊழலில், அரசு ஏன் மெத்தனமாக இருக்கிறது? ஏன் இந்த சுணக்கம்? சுறுசுறுப்பு எங்கே? ரிக்கார்டுகளை எல்லாம் திருத்திய பிறகுதான் நாம் பிடிக்கப் போகிறோமா? ஊழல் பேர்வழிமீது ஏன் இந்தப் பரிவு? ஆகவேதான் நான் எக்சாம்பிள் சொன்னேன். இப்படி ஊழல் செய்தவர்கள் மீது பரிவு காட்டக் கூடியதும், ஊழலை அம்பலப்படுத்தியவர்களைப் பழி வாங்கியதுமான உதாரணங்கள் என்னிடம் இருக்கிறது, பலதும். இப்பொழுது, நேரம் இல்லாததாலே நான் அந்த விவரங்களைச் சொல்லவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, மாணவர்கள் சம்பந்தமாக. மாணவர்களைப் பற்றி பேசும்பொழுது நமது அரசுக்கு அவர்களை அரசியல்வாதிகள்தான் கெடுப்பதாக மனதில் அந்த ஒரு 'ட்ரென்'டைப் பொறுத்தவரைக்கும் அது மேலோங்கி இருக்கிறது. அவர்கள் போராட்டத்தில் இறங்குவதன் மூலம் படிப்பைக் கெடுக்கிறார்களே என்ற எண்ணம் மேலோங்கி இருக்கிறது. ஆனால், உண்மையிலே அவர்களுடைய படிப்பையும் குணங்களையும் கலாசாரத்தையும் அரித்துத் தின்னும் பயங்கரமான கரையானைப் பற்றி இந்த அரசு இன்னும் கவனிக்கவில்லை, அதைப்பற்றி இன்னும் கவலைப்படவில்லையென்று நான் சொல்கிறேன்.

சொல்கிறபோது சமீபத்தில் அதாவது ஒரு மாணவன் தன்னுடைய சமுதாயத்தைப் பற்றி கவலைப்படுகிறவன் ஒரு கடிதம் டெபுடி கமிஷனருக்கு போலீஸ் கமிஷனருக்கு, அனுப்பியிருக்கிறார். அதிலே எடுத்து எழுதியிருக்கிறார்.,

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

P. Ramesh, New College Hostel, Peters Road, Royapettah Madras-14 addresses the Deputy Commissioner, Southern Range Commissioner of Police Office, Egmore, Madras-8.

அவர் சொல்கிறார் அதிலே

"Brothel business is going on at Ganapathy Rooms at No.29, Peters Road, Royapettah, Madras-14. The owners of that are keeping many young girls in that lodge and doing brothel business every day and night and earning lot of black money daily. They have engaged many brokers to bring customers. One such broker is always seen near New College which is very near to that Lodge to pick up students to that Lodge. Many of my fellow students are going to that Lodge for girls every day and thus spoiling their money and health. You can also see that brandy and other local drinks are also being supplied to the customers in that Lodge

We request you to make a surprise ride in that lodge during evening to night 10, which is the peak business hour of that lodge. We also request you to put fellows conducting the business in jail and stop that brothel business in that lodge so that some of our College Students can be saved."

இப்படி தன்னுடைய மாணவ குலத்தின் மீது அக்கறை கொண்டு ஒருமாணவனாவது முன் வந்து போலீசில் நம்பிக்கை வைத்துக் கொண்டு கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால் அவருடைய அனுபவம் என்ன? ஒரு பதிலும் இல்லை, ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் அவர் எங்கள் தலைவர் சங்கரய்யா அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். மற்ற தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. அதிலே அவர் எழுதியிருக்கிறார் தன்னுடைய அனுபவத்தை.

"We brought this matter many times to the knowledge of the Commissioner, Chief Minister and Governor of Tamil Nadu. But the illegal business in that Lodge is going on without any hindrance under the very nose of the Royapettah Police Station. We do not know how to stop that business in that Lodge and save many of our fellow students who are falling victim every day.

ஆகவே அந்த லாட்ஜிலே பிறகு என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது." This is the average position going on.

ஆகவே அவர்களுடைய உடல் நலம், செல்வம், அறிவு எல்லாம் கெடுவதற்கு இப்படிப்பட்ட கறையான்கள்தான் நம்முடைய

[திரு. ரா. உமாநாத்] [1979 ஏப்ரல் 25

மாணவ சமுதாயத்தை கெடுக்கின்றன. அதை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று விரும்புகிறார் ஒரு நல்ல மாணவர். அவருக்கு கை கொடுத்தால்தானே அவருக்கு நல்ல தைரியம் பிறக்கும். அந்த முறைகளில் எல்லாம் அவர்களுக்கு உதவும் வகையில் போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் எடுக்கவில்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் மானியத்தின் மீது பேசுகிறபோது நான் சொன்னேன் அவர்களுக்கு தண்ணீர் வசதி கிடையாது, மின்சார வசதி கிடையாது, தனி மின்சார மீட்டர் இல்லை. அவர்களுக்கு சங்கம் வைக்கும் உரிமையை வழங்க வேண்டும் என்று கூறினேன். சங்கம் வைக்கும் அவசியமே இல்லாதபடி அவர்களுடைய குறைகளைத் தீர்ப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் என்ன ஆகியது? நம்முடைய முதல்வர் அவர்கள் கூறி இரண்டு நாட்களுக்குள் நேற்று என்று நினைக்கிறேன். பெண்கள் ஊர்வலம் ஒன்று போலீஸ் கமிஷனர் ஆபிசுக்கு சென்றது. யார் என்று பார்த்தால் புதுப்பேட்டை ரிசர்வ் போலீஸ் காலனியைச் சேர்ந்த போலீஸ்காரர்களின் மனைவி, தங்கை, தாயார் போன்றவர்கள் தான், ஊர்வலம் போயிருக்கிறார்கள். எதற்காக என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் வீட்டுக்கு தனி மின்சார மீட்டர்கள் கிடையாது, மின் வெட்டில் லாமல் அனுப்பப்படும் மின்சாரமும் காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரையில்தான். ஆனால் மின்சாரத்திற்கான பில் வந்திருக்கிறது 251 ரூபாய்க்கு. செப்பரேட் மீட்டர்கள் இல்லை, ஆகவே இப்படிப்பட்ட நிலைமை என்பதை விளக்க முத லமைச்சர் அவர்கள் வீட்டிலிருக்கிற பெண்கள் போலீஸ் கமிஷனர் ஆபிசுக்கு ஊர்வலம் வந்தார்கள். தீர்வு காண வில்லை என்றால் கோட்டைக்கும் நாங்கள் வருவோம் என்று பெண்கள் சொல்லி யிருப்பதாகத் தெரிகிறது. நான் அதற்காகத்தான் சொன்னேன். இந்த மாதிரி விவகாரம் உருவெடுத்து வருவதற்கு முன்பு அவர் களுடைய கிரீவன்ஸ் தீர்க்கப்பட வேண்டும் என்று கோட்டைக்கு அந்தப் பெண்கள் வந்தால் யாரை வைத்துக் கொண்டு தடுத்து நிறுத்துவீர்கள், யாரை வைத்துக்கொண்டு தடியடிப்பிரயோகம் செய்வீர்கள்? எப்படி அவர்களை தடுப்பீர்கள்? நிலைமை இப்படி சீரியஸாகப்போகிறது என்றால் சங்கம் இல்லாமல் குறைகள் தீர்க்கப்படும் என்று சொன்னதின் விளைவு இது.

அதற்கு அடுத்து இன்றையதினம் இந்த கவாத்தே பயிற்சியை பேரேடுகளை 45 வயதுக்கு மேற்பட்ட போலீஸ்காரர் களுக்கு கிடையாது என்று ஒரு அரசு ஆணை 455/53 தேதி 1959 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் நாளிலிருந்து அமுலில் இருக்கிறது. போன பட்ஜெட் பேச்சிலும் இதைச் சொன்னேன், இந்த பட்ஜெட் பேச்சிலும் சொன்னேன். அமுலில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய அந்த ஜி. ஓ. அமுல் படுத்தப்படவில்லை

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

என்ற நிலைமையை நான் சுட்டிக் காட்டியபோதும், இது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் இல்லை என்று சொல்கிற போது, சங்கம் வைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.

சங்கம் வைப்பது பற்றி என்ன தவறு இருக்கிறது? அதில் என்ன வந்துவிடப்போகிறது? ஐ.பி.எஸ். ஆபீசர்களுக்கு சங்கம் இருக்கிறது. இந்த போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு இருக்கக் கூடாதா? ஐ.பி.எஸ். ஆபீசர்கள் சங்கம் வைக்கலாம். இவர்கள் வைக்கக்கூடாது என்று சொன்னால், அவர்களுக்கு பொறுப்பு இருக்கிறது, பொறுப்புள்ளவர்கள், இவர்களுக்கு பொறுப்பில்லை என்று சொலகிறார்களா?

[பிற்பகல் 12—10]

ஐ. பி. எஸ். ஆபீசர்கள் பேரில் நம்பிக்கை இருக்கிறது. இவர்கள் பேரில் நம்பிக்கை இல்லையா ? வேற்றுமை இல்லாத, போலீசுக்குள்ளும் வர்க்க வேற்றுமை பாராட்டுவது ஆகாதா இந்த நிலைமை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இதை நான் எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் நிலைமை வேறு வகையில் போகக்கூடாது என்ற அக்கறையில் தான் அந்த யோசனையைச் சொன்னேன். சங்கம் இல்லாமல் அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால் நிலைமை வேறு வகையில் போய்க்கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய கிரீவன்சை எடுத்துச்சொல்வதற்கு அவர்களுக்கு இருக்கும் ஏராளமான பிரச்னைகளை எடுத்துச் சொல்வதற்கு-இன்று இடம் கிடையாது. முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு அனுபவம் உண்டு. முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்து இருந்தபோது அங்கே இருக்கும் பெண் போலீசைப் பற்றிச் சொன்னேன. ஒரு பெண் ஏ.எஸ்.ஐ. அழைத்து அவர் கேட்டார் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சுட்டிக்காட்டி கேட்டார், எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது என்று சொன்னார் அவரும். அப்படித்தான் போலீசில் சொல்வார்கள், மேல் அதிகாரிகள் கேட்டால் உண்மையைச் சொல்ல மாட்டார்கள். ஆனால் உள்ளுக்குள் கஷ்டம் புகைந்து கொண்டு இருக்கும். ஆகவே, அந்தப் பிரச்னையை அப்படியே விட்டு விடாமல், அவர்களுக்கு ஒரு வழி சர்க்காரிடம் அவர்களுடைய குறைகளை தெரிவித்து, தீர்வு காண்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எம். எல். ஏ-க்களுக்கு ஊதிய உயர்வு சம்பந்தமாக அக்கறை காட்டப்படுகிறது. சட்டமன்றத்திலும் ஸ்டாப் இருக்கிறார்கள். ஏராளமான குறைகள் அவர்களுக்கு இருக்கிறது. வருஷக்கணக்கில் அவர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். நாம் என்ன சொல்கிறோம், 170 நாள் வேலை பார்த்தால் பர்மனென்ட்.

சட்ட மனறம் 170 நாள் நடக்கிறதா—அப்படி என்று சொன்னால் அவர்கள் பர்மனென்ட் ஆக முடியாது என்று அர்த்தம், இந்த ஸ்டாண்டர்ட் இருந்தால், நாம் எப்படி சபையை நடத்துகிறோமோ அந்த அளவிற்கு அந்தக் கண்டிஷன் வைக்க வேண்டும் பர்மனென்ட் செய்வதற்கு. அப்படியில்லையென்றால் அவர்கள் ரிடையர் ஆகிறவரை டெம்பரரியாக இருக்க வேண்டி வரும். எம். எல். ஏக்களுக்கு பென்ஷன் பற்றி ஏற்பாடு செய்கிறோம். அவர்களுக்கு பெர்மனென்சி ஏற்பாடு படுத்த வேண்டாமா? காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணி வரையில் இங்கே ஸ்டாப் வேலை செய்கிறார்கள். எம். எல். ஏ.-க்களுக்கு 150 ரூ. காம்பன்சேட்டரி அலவன்சு கொடுக்க முடிவு எடுத்து இருக்கிறோம். இவர்களுக்கும் ஒரு ஸ்பெஷல் அலவன்சு கொடுக்க கூடாதா? அதையும் இந்த வாட்ச் அண்டு வார்டுக்கு இரண்டு ரூபாய் பாட்டா இருந்ததை உயர்த்தியது மாதிரி செய்யுங்கள். எம்.எல்.க்களுக்கு இந்தச் சபையில் பிரச்னை வருகிறபோது நிச்சயமாக அந்த ஸ்டாப் இந்தச் சபையின் ஒரு அங்கமாக, பகுதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் இந்த அரசு பரிசீலித்து இந்தச் சபையில் அதற்கான முடிவுகளை அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து ஆண்டு காலத்திற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு பஸ் பாஸ், ரயில்வே பாஸ் எல்லாம் கொடுக்கிறார்கள். இந்த சட்டமன்றம் நடக்கிறபோதாவது இங்கேயிருக்கிற ஆபீசர்ஸ் அண்டு ஸ்டாஃப்க்கு பஸ் பாஸ், ப்ரீ டிராவல் கன்சஷன் அட்லீஸ்ட் டூரிங் செசன் கொடுக்கக் கூடாதா? ஆகவே, இந்த மாதிரி விஷயங்களில் அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டசபை நிர்வாகத்தை பற்றி எனக்கு சில கருத்துக்கள் உண்டு. சட்டசபைக்கு அரசாங்கத்தின் மீது, எக்சிகியூடிவ் மீது கன்ட்ரோல் இருக்க வேண்டும். அது தான் பாபுலர் கன்ட்ரோல். அந்தப் பாபுலர் கன்ட்ரோல் முறையாக இருக்க வேண்டும் என்று சொன்னால் குறுகிய இடைவெளி விட்டு கூட்டங்கள் நடத்த வேண்டும். குறுகிய இடைவெளி என்றால் ஒரு வருடத்தில் 4 முறையாவது கூட்டங்கள் நடத்தப் படவேண்டும். ஒரு வருஷத்தில் எத்தனை கூட்டங்கள் நடத்த முடியுமோ அத்தனை கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். அப்படி நடத்துவதன் மூலம் மக்களிடையே இருக்கும் பிரச்னைகள் குறித்து இங்கே விவாதித்து முடிவுகளை ஷேப் செய்து அதை அமல் நடத்தும் முறையில் அமையும். அப்படி கூட்டங்கள் நடக்கிற போது கனம் முதலமைச்சர் தயவு செய்து இங்கே பிரசன்ட்டாக இருக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன். நான் அவரிடத்தில் நேரடியாகக் கூடச் சொல்லியிருக்கிறேன், தவிர்க்க முடியாத நேரங்களில் தவிர மற்ற எல்லா நாட்களிலும், குறிப்பாக, இந்தச் சபையில் உள்ள

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

அங்கீகரிக்கப்படாத ஜீரோ அவர் வரையில் கூடியவரையில் அவர்கள் பிரசன்ட்டாக இருக்க வேண்டும். முக்கியமான விவாதங்கள் வருகிறபோது முதலமைச்சர் அவர்கள் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் நாடாளுமன்றத்தில் கூட பார்த்து இருக்கிறேன். நேரு, லால்பகதூர் சாஸ்திரி, மிஸஸ் காந்தி, இப்போது பிரதம அமைச்சராக இருக்கும் மொரார்ஜி தேசாய் ஆகியோர் பாராளுமன்றத்தில் இந்த ஜீரோ அவர் வரை சபையில் இருப்பார்கள். இம்பார்ட்டென்ட் டிஸ்கஷன் இருக்கிறபோது சபையில் இருப்பார்கள். அப்படி இருந்தால் அவையே முழுமை பெற்ற அவையாக இருக்கும். அவைக்கே ஒரு ஒட்டு மொத்தமான தன்மை பெற்றது போல் இருக்கும். கலெக்டிவ் ரெஸ்பான்சிபிளிடி என்று சொன்னாலும் முதலமைச்சர் இருப்பது சபைக்கு பல்வேறு முக்கியமான பிரச்னைகளில் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் இல்லை என்றால், அமைச்சர்கள் பரிசீலிப்போம், பரிசீலிப்போம் என்ற ஒரே ரிப்ளையை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சபையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எக்ஸ்பஞ்ச் பண்ணுவது என்பதைப் பொறுத்தமட்டில், அது ஒரு பாலிசி. அதைப்பற்றி அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அது 'சென்சார் ஷிப்' மாதிரி மாறிவிடக் கூடாது. 'As a matter of policy, right of expunction should n t be converted as right of censorship cf the proceedings cf the House'.

அந்தமாதிரி போகக் கூடாது என்று நான் விரும்புகிறேன. என்னுடைய கருத்து, கிட்டத்தட்ட அது சென்சார்ஷிப்பாகத் தான் போகிறது. என்னுடைய கருத்து மட்டுமல்ல ; எங்களுடைய குரூப் கருத்தும் அதுதான். குறிப்பாக ஆளும் கட்சியினர் இந்த அவை எந்தப் பக்கம் போகலாம், எந்தப் பக்கம் போகக் கூடாது என்று விரும்புகிறார்களோ அதற்கு தகுந்தாற் போல கிட்டத்தட்ட போகிறது. நான் எதைப்பற்றியும், யாரை பற்றியும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிச் செய்ததாக எனக்கும் ஞாபகம் இல்லை ; பேரவைத் தலைவரும் அப்படி நடந்துகொள்ள வில்லை.

திரு. ரா. உமாநாத் : நான் எதையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை. இந்த டிசிஷன் அல்லது அந்த டிசிஷன் என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு 'ஜெனரல் ரிவியூ' என்ற முறையில் சொல்கிறேன். மற்ற நேரங்களில் அத்தகைய கருத்துக்கு நான் இடம் கொடுக்க விரும்பவில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது இந்த மன்றத்தினுடைய நடவடிக்கை ஆளும் கட்சி பக்கம் தான் போகிறது என்ற முறையில் சொல்கிறார்கள். இந்த மன்றம் ஆரம்பித்து ஏறத்தாழ $2\frac{1}{2}$ மாதம் நடைபெறுகிறது. ஆளும் கட்சியினரும், எதிர்கட்சியினரும் மன்றத்தின் நடவடிக்கைகளில் எந்த அளவுக்கு பங்குகொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால் எதிர்க்கட்சியினர்தான் அதிகமாக பங்குகொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். (அவர் அதைக் குறிப்பிடவில்லை— குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : ஆகவே, அந்தமாதிரி அது ஆகக்கூடாது. அப்படிச் செய்து விட்டால் பத்திரிகை நிருபர்களுக்கு இங்கே வேலை இல்லை. ஈவனிங்கில் 'ஹாண்ட் அவுட்ஸ்' கொடுத்து விட்டால் போதும். அந்தமாதிரி இருக்கக்கூடாது.

இன்னொரு முக்கியமான விஷயம். சபாநாயகரோ அல்லது துணைச் சபாநாயகரோ—நீங்கள் அந்த சீட்டில் உட்கார்ந்து கொண்டு கொடுத்திருக்கக்கூடிய முடிவுகளைப் பற்றி—வெளியே எடுக்கும் முடிவுகளைப் பற்றிச் சொல்லவில்லை. அந்த சீட்டிலிருந்து எடுக்கும் முடிவுகளைப் பற்றிச் சொல்கிறேன்.—பிரஸ் கான்பிரன்ஸ் நடத்துவது கூடாது என்பது என்னுடைய கருத்து.

That will lead to all sorts of controversies. The records are open. But the speaker or the Deputy Speaker should not hold Press conference directly or indirectly to interprete what was happened in the House, which were pronounced from their seats.

அவர்களுக்கு தேவைப்பட்டால் ரிக்கார்டு இருக்கிறது ; அதை அவர்கள் வெரிஃபை பண்ணிக்கொள்ளலாம். அதைத் தவிர சீட்டிலிருந்து எடுத்த முடிவை நீங்கள் அவர்களோடு டிஸ்கஸ் பண்ணக்கூடாது.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது தஞ்சை மாவட்டத்தைப் பற்றி. தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். எபக்டிவ் அட்மினிஸ்டிரேஷனுக்காகவும், ஜனங்களின் வசதிக்காகவும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது மக்களுடைய அவா. இப்போதே அங்கே இரண்டு சூப்பிரண்டு ஆப் பொலீஸ் இருக்கிறார்கள்; இரண்டு டி. இ. ஓ. இருக்கிறார்கள் இரண்டு ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடல் இருக்கிறது. இரண்டு டி. எம். ஓ. இருக்கிறார்கள் ; இரண்டு டிஸ்டிரிக்ட் செஷன்ஸ் ஜட்ஜ் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இரண்டு கலெக்டர்கள் இருந்தால் அட்மினிஸ்டிரேஷன் நல்ல முறையில் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. உமாநாத்]

அடுத்தபடியாக நாகப்பட்டினம் டவுன். அது ஒரு போர்ட் டவுன். அது சரக்குகள் வருகின்ற-போகின்ற ஒரு டவுன்: பிரயாணிகள் வருகின்ற ஒரு டவுன். வேளாங்கண்ணி, நாகூர்—நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வரக்கூடிய இடம் அவை—இருக்கக்கூடிய டவுன். அப்படிப்பட்ட ஒரு டவுனில் நல்ல ரோடுகள் இருக்க வேண்டும்; நல்ல குடிதண்ணீர் வசதி இருக்க வேண்டும்; சாக்கடை வசதி நன்றாக இருக்க வேண்டும்; தங்கும் வசதி இருக்க வேண்டும். இதையெல்லாம் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சனை என்ற முறையில் சொல்ல வில்லை. இந்த நாட்டில் அது ஒரு முக்கியமான, கேந்திரமான பகுதியாக இருக்கிறது என்பதை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான டவுனில் ரோடு, குடிதண்ணீர் வசதி எல்லாம் ஓர்ஸ்ட் கண்டிஷனில் இருக்கிறது. இதுமாதிரி வேறு எங்குமே இருக்காது. அதற்கெல்லாம் முனிசிபாலிடிதானே பொறுப்பு என்று சொன்னால், அந்த முனிசிபாலிடியினால் அவைகளைச் செய்ய முடியாது. காரணம் அதற்கு இருக்கிற 'லீன் ஃபினான்ஸ்'. ஆகையால் அரசாங்கமே பிளான் பண்ணி, அது ஒரு போர்ட் டவுன் என்ற முறையில், அது ஒரு டூரிஸ்ட் டவுன் என்ற முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகூர் உலக பிரசித்தி பெற்ற ஒரு டூரிஸ்ட் சென்டர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கு வருகிறார்கள். அங்கே ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டார்கள். பல அதிகாரிகள் தடுத்தும் கூட மாண்புமிகு முதலமைச்சர் அதற்கு சாங்ஷன் செய்ய தார்கள். அங்கே சுகாதாரம் ஓர்ஸ்டாக இருக்கிறது. தங்கும் இடங்கள் சுத்தமாக இல்லை. 2, 3 இலட்சம் முஸ்லீம்கள் வரக் கூடிய இடம் அது. அந்த நாகப்பட்டினம் முனிசிபாலிடியினரால் தண்ணீர் வசதியைக் கூட செய்துகொடுக்க முடியாத போது இந்தப் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்தால் என்ன செய்வார்கள்?

[பிற்பகல் 12.20]

ஆகவே, அந்த நிலைமையிலே அங்கே ஒரு டவுன்ஷிப் அல்லது வேறு என்ன அமைப்போ அதைக் கவனிப்பதற்குரிய முறையிலே அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக மீன்பிடி சென்டர் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். டீசல் இல்லாததன் காரணமாக கடந்த இரண்டு வாரமாக மீன்பிடிப் படகுகள் கடலுக்குப் போகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீன்களைப் பிடிக்க வேண்டிய வேலை நின்று விட்டது. அதனால் வியாபாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் ஆயிரக்கணக்கான பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அது குறித்து இன்னும் அவசரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அதை சீக்கிரம் கவனிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் பொதுவாகப் பல திட்டங்கள் மாநிலங்களின் பல பகுதி மக்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட குறிப்பாக சேலம் மாவட்டத்திற்கு எந்தவிதமான பெரிய திட்டங்களும் அறிவிக்கப்படாமல் விட்டுவிட்டார்கள் என்ற உண்மையை நான் இந்த மன்றத்திற்குத் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. பல ஆண்டுகளாக நானும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் மக்களுக்குத் தேவையான பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசினுடைய கவனத்திற்கு பல நேரங்களில் எடுத்து வைத்திருகின்றோம் ஆனால் என்ன காரணத்திற்காகவோ சேலம் மாவட்டம் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மிகவும் அதிகமாகப் புறக்கணிக்கப்பட்டு அது பிற்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக அதுவும் மிகவும் பிற்பட்ட மாவட்டமாக புதிதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு தொழில், தொழில் வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்துகொண்டிருந்த போது சில தொழில் கொள்கைகள் குறித்து அரசினுடைய விளக்கத்தைப் பெறலாம் என்று நினைத்திருந்தேன். என்ன காரணத்தினாலோ அன்றைக்கு திடீரென்று கில்லட்டின் என்ற ஒரு நிலை ஏற்பட்டு எங்களுக்கெல்லாம் புல்லட்டின் என்ற நிலை உருவாகி அதன் மூலமாக நாங்கள் பதில் பெற முடியவில்லை, அதுமட்டுமல்ல. முதலமைச்சரிடம் நாங்கள் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டோம்.

ஆகவே, இன்றையதினம் சேலம் மாவட்டம் மிகவும் பிற்பட்ட நிலையில் இந்த ஆண்டு நிதிநிலையில் ஆக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு என்ன காரணம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தப் பகுதி மக்கள் கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகாலமாக ஒரு கோரிக்கையினை வைத்துக்கொண்டு வருகிறார்கள், சேலம், தர்மபுரி மாவட்ட மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை அங்கே ஒரு மருத்துவ கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையினை பல நேரங்களில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோம்,

இரயில்வே செஸ் நிதியிலிருந்து $37\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் இருப்பதை என்ன செய்வது என்று சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தத் தொகையை எந்த காரியத்திற்கு பயன்படுத்துவது என்று அப்போது விவாதிக்கப்பட்ட நேரத்திலே சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுவதற்கு அந்தத் தொகையை பயன்படுத்தலாம் என்றும் அதற்கு முதலமைச்சரை அனைத்துக் கட்சி சட்டமன்ற

1979 ஏப்ரல் 25] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

உறுப்பினர்களும் சேர்ந்து சந்தித்து அவரிடமிருந்து இதற்கான அனுமதியைப் பெறுவது என்றும் முடிவு செய்தோம், சேலம், தர்மபுரி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி என்பது அங்குள்ள மக்களுக்கு நீண்ட நாளைய குறையாக இருந்து வருகிறது, மருத்துவக் கல்லூரி ஏற்படாததன் காரணத்தால் சேலம் மாவட்ட மருத்துவமனை விஸ்தரிக்கப்படாமலேயே இருந்து வருகிறது, அங்கே இருக்கக்கூடிய 56 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையில் கட்டிட வசதிகளே போதுமானதாக இல்லை, இன்றைக்கு 4 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் வரை வெளி நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள், அவர்கள் நிற்பதற்குக் கூட அங்கே இட வசதி கிடையாது. அதுமட்டுமல்ல, வரக்கூடிய வெளி நோயாளிகளுக்கேற்ப அங்கே மருத்துவர்கள் கிடையாது,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து தமிழ் வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற சித்த வைத்தியம் பற்றி நாம் வெகு அழகாகப் பேசுகிறோம், ஆனால், சித்த வைத்தியத்திற்கென்று ஒரு பிரிவு கூட எந்த ஒரு அரசு மருத்துவமனையிலேயும் ஏற்படுத்தப்படவில்லை. தமிழகம் முழுவதும் உள்ள எந்த மருத்துவமனையிலேயும் சித்த வைத்தியத்திற்கென்று ஒரு பிரிவுகூட ஏற்படுத்தப்படவில்லை. இதை எல்லாம் ஏற்படுத்துவதோடு சேலம் மாவட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், சேலம் நகரத்தில் இன்றைய தினம் $4\frac{1}{2}$ இலட்சம் ஜனத்தொகை இருக்கின்றது, சேலம் மாவட்டத்தில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ந்து நகரசபை கேட்டுக்கொண்டிருக்கிறது, ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை, சேலத்தைச் சேர்ந்த திரு. முத்துசாமி அவர்கள் இங்கே உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தார், அவருடைய காலத்திலேயும் நிறைவேற்றப்படவில்லை. சேலத்தைச் சேர்ந்த திரு, இராசாராம் அவர்கள் அமைச்சராக இருந்தார். அப்போதும் ஏற்படுத்தப்பட வில்லை. சேலத்தைச் சேர்ந்த ஒருவர் குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக இருந்தார், அவருடைய காலத்திலேயும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை, இப்போது எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருக்கிறார். ஆகவே, அவருடைய காலத்திலாவது பாதாள சாக்கடைத் திட்டத்தையும் மருத்துவக் கல்லூரியையும் நிச்சயமாக ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவார் என்ற திடமான நம்பிக்கையில் இன்றைய தினம் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு சேலம் மாவட்டத்தில் புதிதாக எந்தவிதமான தொழில்களும் துவங்கப்படவில்லை. சேலம் மாவட்டத்திலிருந்து ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய கறுப்பு கற்கள் நிறைய இருக்கின்றன. அது தனியாருக்குக்

குத்தகைக்கு விடப்பட்டு இன்றைக்கு வெளிநாடுகளுக்கு அந்தக் கற்களை ஏற்றுமதி செய்து ஏராளமாக அவர்கள் பணம் சம்பாதித்து இருக்கிறார்கள். இன்றைக்குச் சேலம் மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய கறுப்புக் கற்களை எடுத்து, அரசுத்துறையில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, புதிதாகத் தொழில்களைத் துவங்க வேண்டும் என்று அங்கே சிறுசிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று அழைப்பு விடுகிற நேரத்தில், சேலம் மாவட்டத்தில் 25 ஆண்டுகளாக நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வந்த அந்தக் கண்ணாடித் தொழிற்சாலை இன்று 28 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு முதல் அமைச்சர் அவர்களிடத்தில் பல நேரங்களில் முறையிட்டோம், இந்த ஆண்டாவது அந்தக் கண்ணாடித் தொழிற்சாலை திறக்கப்படும் என்ற நம்பிக்கை வைத்திருந்தோம், அந்த நம்பிக்கைக்கு ஏற்ப முதல்வர் அவர்களிடத்திலிருந்து அதைப் பற்றித் தகவல் கிடைக்காத காரணத்தால் அந்தக் கண்ணாடித் தொழிற்சாலையின் நிலை என்ன என்று தெரியவில்லை. இந்த ஆண்டாவது அந்தக் கண்ணாடித் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மெக்னசைட் கார்ப்பரேஷன் என்ற ஒரு புதிய கூட்டு நிறுவனம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது, அதை இன்னும் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய முறையில் அந்தத் தொழிற்சாலையை விரிவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்றையதினம் கொத்தடிமைகளை ஒழித்து விட்டார்கள் என்று அரசாங்க துறைகளில் பல நேரங்களில் சொல்லப்பட்டது. நம்முடைய அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 8 நிமிடங்கள் ஆகிவிட்டன. இப்படி பேசிக்கொண்டே போனால் நேரம் போதாது. 2 நிமிடங்கள் தருகிறேன், அதற்குள் முடியுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். பல இடங்களில் கொத்தடிமைகள் இருக்கிறார்கள், அதுவும் காவல் துறையைச் சார்ந்த ஒரு பிரிவில் ''ஆர்டர்லி'' கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள், இந்த நிலையை அரசு கண்டிப்பாக ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இன்னும் கொஞ்சம் சொல்ல வெட்கப் படுகிறேன், சில இடங்களில் அவர்கள் மஞ்சள் அரைக்கிறார்கள். மொத்தத்தில் இந்தக் கொத்தடிமை முறைகளை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகிற விடுதியை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அந்த விடுதிக்கு முன்னால் உள்ள இடம் ஒரு பொட்டைக் காடாக காட்சி அளிக்கிறது. நல்ல பூங்காக்களை அமைத்துத் தரவேண்டும், இந்தியாவில் பல மாநிலங்களில் எப்படி சட்டமன்ற விடுதிகள் இருக்கக்கூடிய இடம் சோலையாக இருக்கிறது என்பதைப் பார்த்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். இங்கே இருக்கக்கூடிய நிலைமை பாலைவனமாகக் காட்சி அளிக்கிறது. உறுப்பினர்கள் குடும்பத்தோடு தங்குவதற்கு குடியிருப்புகள் இல்லை. அதற்கான புதிய குடியிருப்புகளைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இந்தியாவிலே பல மாநிலங்களிலே இவ்வாறு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் சொந்தமாக கார் வைத்திருந்தால், அந்தக் கார்களை நிறுத்துவதற்கு காரேஜ் இல்லை. அது இல்லாததினால், இரவு நேரங்களில் அந்த காரில் உள்ள விலையுயர்ந்த பொருள்கள், ஹார்ன் போன்றவைகள் திருடுபோகின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சொந்தமாக கார் வைத்திருப்பவர்களுக்கு, அங்கே காரேஜ் கட்டிக் கொடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்,

அங்கே பணியாளர்கள் 10 ஆண்டு காலமாக தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், நிரந்தரமாக வேலைக்கு எடுக்கும்போது, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர்களுக்கான சம்பளம் உடனுக்குடன் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த சட்டமன்றத்தில் அரசியல் கட்சிகள் செயல்படுவதற்கு இன்றைக்கு இடம் ஒதுக்குவதில் பாகுபாடு செய்யப்படுகின்றது, எல்லோருக்கும் நல்ல முறையிலே இடம் ஒதுக்கப்பட்டது, ஆனால் எங்கள் கட்சிக்கு மோசமான ஒரு இடத்தை ஒதுக்கி, அங்கே இருக்க வேண்டும் என்று எங்களை அவர்கள் வற்புறுத்துகிறார்கள்,

[பிற்பகல் 12-30]

இது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன், அரசியல் கட்சி அலுவலகங்களுக்கு எல்லாம் அரசாங்கத் தரப்பில் தொலைபேசி வைத்துத் தர வேண்டும், சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளிலும் நேரடி தொலைபேசி வசதி வேண்டும், விடுதியில் இருப்பவர்களுக்கு தொலைபேசி வசதியிருப்பது போல், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்க வீடுகளில் இருப்பவர்களுக்கும் அந்த தொலைபேசி வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில், தரமான உணவு கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும், இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய உடல்நிலை

பாதிக்கப்பட்டு அவர்களுக்கு சுகாதாரக் கேடான நிலைமை ஏற்பட்டு விடும், ஆகவே, இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பொறுத்த வரையில், சென்னை. பீட்டர்ஸ் காலனியில் அவர்களுக்கு 35 வீடுகள் (மணியடிக் கப்பட்டு திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசுவதற்கு அழைக் கப்பட்டார்).

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் எல்லா மானியங்களையும் ஒனறாக இணைத்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு தங்களுக்கு நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தில் பல்வேறு கருத் துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் நானும் ஆளும் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர் என்கின்ற முறையில், ஒரு சில உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். பொதுவாக உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் பல்வேறு நிலைமைகளை எடுத்துக் காட்டி பேசியிருக்கிறார்கள். நேற் றைய தினம் மாண்புமிகு லத்திப் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒட்டுமொத்தமாக இந்த மன்றம் அவர் பக்கத்தில் இருப்பதாக வும், ஆளும் கட்சியினர், எதிர்கட்சியினர் அனைவரும் அவருக்கு துணையாக இருப்பதாகவும் அவரது பேச்சில் கோடிட்டு காட்டி னார்கள். ஆனால் மன்றத்தில் இருக்கின்ற ஆளும் கட்சி உறுப் பினர் என்ற வகையில் இன்றைக்கு எங்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்க்கிற நேரத்தில், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தின் நிலைமையை மாற்ற வேண்டும் என்று நாங்கள் கேட்ட நேரத்தில் எங்களுடைய அமைச்சர் அவர்கள் மிகுந்த பரிவோடு எங்களுடைய நிலைமையை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களிடம் அனுமதியைப் பெற்று எங்களுக்கு சம்பளத்தோடு 200 ரூபாய் அதிகப்படுத்துவதாக சொன்னார்கள். அப்படி சொல்லப்பட்ட நேரத்தில், நானே அதே நேரத்தில் மன்றத்தில் பார்த்தேன், அதை அரசியல் பிரச்னையாக ஆக்க வேண்டும் என்று யார் யார் என்னென்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரியும்.

நமது புரட்சித் தலைவர் இதுபோன்ற காரியங்களை மிகவும் சாதுரியமாக நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த ஓராண்டு காலமாக நிறுத்தப்பட்டு, அது பரிசீலனையில் இருந்து வந்தது. எந்த எதிர்கட்சிகள் இந்த சம்பள உயர்வு வேண்டாம், என்று பேசினார்களோ அவர்கள் எல்லாம் கூட வராண்டாவில், ''என்ன, அந்தப் பணம் வரமாட்டேன் என்கிறதே, வருமா வராதா '' என்று கேட்டுக் கொண்டிருப்பதும் எனக்குத்

தெரியும். ஆனால் இங்கே பேசுகின்ற நேரத்தில் அரசியலுக்காக சொல்ல வேண்டும் என்பதற்காக அது வெளியில் பயன்படுத்தப் பட்ட வார்த்தையாக அமைய வேண்டும் என்பதற்காக "நாங்களா உயர்த்த வேண்டும் என்று கேட்கிறோம்? ஏழை எளியவர்களுக்கு அல்லவா நாங்கள் இருக்கிறோம், என்று கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஏழை எளியவர்களுக்காக வக்காலத்து வாங்குகிற பல பேர்களை, எனக்குத் தெரியும். அவர்கள் ஏழை எளியவர் என்பது ஒரு கேலிப் பொருளாக ஆக்கிக் கொண்டு எதற்கெடுத்தாலும் ஏழை எளியவர்கள் என்று எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதோடு, கடைசியில் சட்டமன்ற உறுப்பினர்களின் வாழ்க்கையிலும் வந்து விளையாடினார்கள். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நாங்கள், ஓராண்டு காலமாக—எங்களுக்கு ஓராண்டு காலமாக உள்ள பாக்கியைத் தருகிறோம் என்று சொன்னால் நாங்கள் வாங்கியிருக்கிற கடனுக்கு 2,400 ரூபாய் கிடைக்கிறது என்றால் எங்களுக்கு ஒரு வகையில் மகிழ்ச்சிதான், ஆனால் வேண்டாம் என்று சொன்னவர்கள் யாராவது இதை வாங்காமல் இருப்பார்களா என்பது எங்களுக்குத் தெரியாது. ஒரு வேளை அவர்கள் முதலமைச்சர் நிதிக்கு தந்து விடுகிறோம் என்று சொல்லி, அந்தப் பணத்தை நாங்கள் வாங்கப் போவதில்லை என்று எதிர்கட்சியினர் யாராவது சொல்லுவார்களேயானால் அவர்களது பில் தான் முதல் பில்லாக இருக்குமே தவிர, சற்று காலதாமதம் ஆனாலும் நாங்கள் பெறுவதற்கு முன்னாலேயே அவர்கள் பில்லை வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள்.

<u>திரு. கு. ரமணி</u> : மதிப்பிற்குரிய இராதா அவர்கள் எதிர் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் யாராவது இது வாங்க மாட்டோம் என்று சொன்னால் அந்தப் பணத்தை முதலமைச்சர் அவர்களுடைய நிதிக்கு கொடுத்துவிடலாம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவர்கள் எதிர்கட்சிகள் என்று சொல்லும்போது, ஏகமாக சேர்த்து சொல்லுகிறார்கள். எங்களைப் பார்த்துக் கொண்டே சொல்லுகிறார். ஏதோ வளைத்து உள்ளேபோட்டால் இது சேரட்டும் என்று பேசுகிறார். அது சரியல்ல. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்த வரையில் ஸ்பெஷல் அலவன்ஸ் என்று உள்ளதில் ஒரு காசு நாங்கள் வாங்கப் போவதில்லை. அது அரசாங்கத்தினுடைய கஜானாவில் இருக்கும். அது மக்களுக்காக செலவாகும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்தப் பிரச்சினையை உங்கள் தலைவர் அளிக்க இருக்கிறார்கள். தாங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரமணி அவர்கள் மிகுந்த அவசரத்தோடு குறிப்பிட்டார்கள். நான் முன்னாலே வார்த்தைகள் போடும்போது, நிதானமாகப் போட்டேன். கோடிக்கணக்கான பணம் சேர்த்து வைத்துக் கொண்டு, ஏழைகளுக்காகப் பேசுகிறோம் என்று சொல்லும்போது, ரமணியைக் குறிக்கவில்லை. நான் அப்படி அவர்களைச் சொல்ல மாட்டேன் ; சொல்லவும் கூடாது என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய நிலைமை தெரியும் ; அந்த நிலைமையைப் பற்றி விமர்சிக்கவில்லை. இந்தப் பிரச்னையிலே, ஏழைகளுக்காக வாதாடுகிறோம் என்று சொல்லி, 550-லிருந்து 750 ஆக உயர்த்தச் சொல்லுகின்ற நேரத்தில், ஏதோ இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பெரிய முதலாளிகளாகப் போகிறார்கள் அல்லது இந்தப் பணம் அவர்களுக்கு ஒரு பெரிய தொகை என்ற உணர்வை ஏற்படுத்தப் போகிறது என்ற கருத்திலே குறிப்பிட்டேனே தவிர, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்தப் பிரச்னையில் சம்பந்தம் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் அதை விமர்சிக்கத் தயாராக இல்லை. கட்சி முடிவுகளைச் சொல்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், நாங்கள் எங்களுடைய நிலைமைக்காக வாதாடுகிறோமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறோமே தவிர, இது ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. நான் இதை இந்த மன்றத்திலே சொல்கிறபோது, பழைய பாக்கிகள் கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு லத்தீப் அவர்கள் நேற்றைக்குப் பேசும்போது, ஒட்டு மொத்தமாக ஒன்றைச் சொன்னார்கள். மன்றத்திலே இருக்கின்ற எல்லோரும் ஆதரிக்கிறார்கள், இந்த 35 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக உயர்த்துவதற்கு என்று. நான் அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 200 ரூபாய் உயர்வுக்கு எவ்வளவு அரசியல் விளையாடிற்று என்று லத்தீப் அவர்களுக்குத் தெரியும். இதை எதிர்க்கிறேன் என்று சொல்லியிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். அதைச் சொல்லாத காரணத்தினால், இதை விட்டுவிட்டு இந்த 35 ரூபாயை 50 ரூபாயாக உயர்த்துவதற்கு ஆளும் கட்சியும் அதை ஆதரிக்கிறார்கள். என்று சொன்னால், அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், வெளியே உள்ளவர்கள் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள்....

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான உறுப்பினர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி பேசுகிறேன் என்று சொன்னால், யாருக்காகப் பேசுகிறேன் என்று அர்த்தம் ? ஆகவே இன்றைக்கு இதிலே வேறு அரசியல் காரணங்கள் எதுவும் இல்லை. அரசியல் காரணம் என்று சொன்னால், அதை நான்

1979 ஏப்ரல் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஏற்றுக் கொள்ள வில்லை. அதை நான் கண்டிக்கிறேன். இது ராதா அவர்களின் கருத்தாக இருக்குமே தவிர, இந்த மன்றத்தின் கருத்தல்ல என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். அரசியல் காரணங்களுக்காக இதை யாரும் எதிர்க்கவில்லை. நான் அதை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அதைக் கண்டிக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

திரு. எஸ். ஆர். இராதா : ரொம்ப மகிழ்ச்சி. கண்டித் திருக்கிறீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : கண்டிக்கக் கூடியதை நான் யாராக இருந்தாலும் கண்டிப்பேன். வெகு நாட்களாக இது என் பழக்கம். இப்போது கண்டிக்கிறேன் என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : இன்றைக்கு கண்டிக்கின்ற நேரம் வந்திருக்கிறது. அவர்கள் இதைக் கண்டித்திருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்த உயர்வு கொடுக்கப் பட்டிருக்கின்றதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 2,000-க்கான ரயில்வே கூப்பன்கள் கொடுக்கிறார்கள். அதை இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். எங்கள் முதல் அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் நாட்டிலே இருக்கின்ற நிலைமையைக் கருதி, யார் யாருக்கு என்னென்ன தர வேண்டும் என்பதிலே மிகுந்த எச்சரிக்கையோடு இருந்து, யார் யாருக்கு நேரம் பார்த்துத் தரவேண்டுமோ, அதை நிச்சயமாகத் தருவார்கள். அந்த வகையிலே இன்றைக்கு கொடுத்திருக்கின்ற ரயில்வே கூப்பனிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று; பாராட்டக் கூடிய ஒன்று. இதுவரையில் 2,000-கான கூப்பனில் முதல் வகுப்பில் செல்ல வேண்டுமென்ற நிலையைக் கொஞ்சம் மாற்றி, இரண்டாம் வகுப்பிலும் செல்லலாம்; கூட யாரையாவது அழைத்துக் கொண்டு போகலாம் என்று மாற்றத்தைச் செய் திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதற்காக நாங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பிற்பகல் 12-40)

அதே போல இந்த மன்றத்திலே சில நண்பர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த மன்றக் கட்டிடம் எப்படி இருக்கிறது என்று. நான் சென்ற ஆண்டில் பேசும்போது சொன்னேன். மன்றக் கட்டிடம் மாற்றப்பட வேண்டும். எழில்மிகு தோற்றத் தோடு இருக்கிற சட்டமன்றக் கட்டிடமாக மாற வேண்டுமென்று

வலியுறுத்திக் கூறினேன். ஆனால் அன்றைக்கு இதற்கு ஒரு பெரிய காரணத்தைக் காட்டினார்கள். இதனுடைய பழமை அழிந்துவிடும் என்று அன்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் உள்ளபடியே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—புதுமையை வரவேற்றாக வேண்டும். ஏற்றுக் கொண்டாக வேண்டும். புதுமையை உண்டாக்கினால்தான் நாடு இருக்கும் வரை உங்கள் பெயர் வழங்கும் என்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் யார் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் கவனமாகப், பார்த்து புதுமையை உண்டாக்க வேண்டுமென்ற வகையில் இதைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள் வேன்.

அதேபோல் இந்த மன்றத்திலே இருக்கிற பல்வேறு சூழ் நிலைகளைச் சொல்லுகிற நேரத்தில், அதிகாரிகளைப் பொறுத்த வரையிலும் இன்றைக்கு எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்கிற நேரத்தில் போலீசானாலும் மற்ற அதிகாரிகளானாலும் 1971-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல பேர் இன்றைக்கு ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறவர்களாக இருக் கிறார்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். அவர்களை மாற்ற முடியுமா முடியாதா என்று சொன்னால் காலத்தின் கட்டாயத்தில்தான் அவர்களை மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அருமை அண்ணன் உமாநாத் அவர்கள் சிரித்துக் கொண்டே உங்களையும் எங்களையும் சம்பந்தப்படுத்தி ஒரு வார்த்தையை இங்கே கூறியிருக்கிறார்கள். சிரித்துக் கொண்டே சொன்னார்கள். அதிலே மிகுந்த அர்த்தம் இருக்கும். கோபமாகச் சொன்னால் பரிசீலிக்க வேண்டியதில்லை. சபாநாயகர் ஆளுங்கட்சி பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறார் என்ற வகையிலே சொல்லி அடிக்கடி எக்ஸ்பஞ்ச் பண்ணுவதைக் காரணமாகக் காட்டுவார். உமாநாத் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்—அவர்கள் பேரவைத் தலைவரை எந்தெந்த நேரத்தில் பாராட்டியிருக்கிறார்கள் என்பதற்குக் குறிப்பு இருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எப்படி எல்லாம் நடந்து கொண்டார்கள் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு என்பதை மாண்புமிகு அண்ணன் உமாநாத் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டிய அவர்களே, சபாநாயகர் அப்படி நடந்து கொள்ளுகிறார் என்று சொல்லுவது, அதிலே எங்களைச் சம் பந்தப்படுத்தி ஆளுங் கட்சிக்குச் சலுகை கொடுக்கிறார்கள் என்று சொல்லுவது உள்ளபடியே மிகுந்த வேதனையைத் தருகிறது.

1979 ஏப்ரல் 25]

திரு. ரா. உமாநாத் : ஆளுங் கட்சிக்குச் சலுகை காட்டுவதாக நான் சொல்லவில்லை. — policy of expunction என்றால் அதனுடைய Total result பற்றி என்ன இம்ப்ரஷன் வரும் என்றால் ஆளும் கட்சி விரும்புகிற அந்த நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். மற்றப்படி பாராட்டுகின்ற விஷயங்களை நான் எப்போதும் பாராட்டுவேன், இப்போதும் பாராட்டுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள். மற்றவர்களைக் குறிப்பிட்டுப் பேசாதீர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : சபாநாயகர் எந்தெந்த நேரத்தில் அமைச்சர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள், அமைச்சர்கள் சொன்னதை எந்தெந்த நேரங்களில் தாங்கள் நீக்கியிருக்கிறீர்கள் என்பதெல்லாம் இந்த மன்றத்திற்குத் தெரியும்,

உமாநாத் அவர்கள் ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள், அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன்—பழைய ஊழல்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, புதிய ஊழல்களைப் பற்றி அவர்கள் சொல்லுகிறார்கள், ஊழலற்ற அரசை உண்டாக்க வேண்டுமென்பதை மனதில் வைத்துக் கொண்டுதான் இந்த அரசு செயலாற்றி வருகிறது, இதற்கு முன்னால் பல்வேறு ஊழல்களைச் செய்தவர்களை நீங்கள் கண்டிக்க வேண்டும், அப்படி ஊழல் செய்தவர்கள் இன்றைக்கு பெரிய தந்திரக்காரர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள், அந்த ஊழல்களைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் நீங்கள் தீவிரமாக இருந்து ஆதரித்தால்தான் நிச்சயமாக ஊழலை ஒழிக்க முடியுமே தவிர, இன்றைக்கு புதிய ஊழல்களைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இன்றைக்கு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை ஊழலை ஒழிப்பதில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்கெல்லாம் தெரியும், பழைய ஊழல்களைச் செய்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

கடைசியாக நிதியமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், இந்த ஆண்டு கும்பகோணத்தில் மகாமகம் வரப் போகிறது, முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் நடைபெற்றது, அந்த மகாமகம் இன்றைக்கு புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கும் இந்த நேரத்தில் வருகிறது, மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் மனோகரன் அவர்கள் அதிலே கொஞ்சம் துணையாக இருந்து மகாமகம் சிறப்படைய தேவை

யான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அண்ணா அவர்கள் காலத்தில் மாகமகத்தின்போது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் போல் இன்னும் சிறப்பாக இப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்ற பெயரை எடுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, ...

திரு. எஸ். ஜே. இராமசாமி : மாகமகக் குளத்திலே முதல் அமைச்சரையும் நிதியமைச்சரையும் குளிக்கச் சொல்லுகிறாரா அல்லது தலைமை வகிக்கச் சொல்கிறாரா ? என்ன காரணத்தால் அதைச் சொல்கிறார் என்று தெரியவில்லை, அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பெரியவர் திரு. ராமசாமி அவர்கள் இதைக் கேட்டிருக்கக்கூடாது. நாம் ஆட்சியிலே இருக்கின்ற காரணத்தால் மகாமகக் குளத்திலே குளிக்க வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். திரு. ராமசாமி அவர்கள் வந்து குளிக்க வேண்டுமென்று நான் அவரை அழைக்கமாட்டேன். வருகின்ற பக்தர்களுக்கு வேண்டியவைகளைச் சிறப்பாக செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்றுதான் கேட்டேனே தவிர அங்கே குளிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, மகாமகக் குளத்தைப்பற்றிச் சொல்கிற போது திரு. ராதா அவர்கள் ஏதோ ஒரு அபன்ஸ் மாதிரி குளிப்பது தவறு என்ற முறையிலே சொல்வதாகத் தெரிகிறது. திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் மக்களுக்காக அதைச் செய்து தர வேண்டுமென்றுதான் அரசை அவர் கேட்டுக் கொண்டார். வேறு ஒன்றும் இல்லை.

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, நேற்றைய தினம் நான் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிப் பேசலாம் என்று நினைத்து இருந்தேன். இன்றைக்கு சுதந்திரமாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றிருக்க வேண்டுமென்று, மத்திய அரசும் 3 மாதம் சிறைத்தண்டனை பெற்றிருக்க வேண்டுமென்று

மாநில அரசும் பென்ஷன் ஸ்கீமை வைத்திருக்கிறார்கள். ஆனால் ஆந்திரா மாநிலத்திலே தண்டனை காலவரையறையைக் கணக்கிலே எடுத்துக் கொள்வதில்லை. எந்தக் காரியத்திற்காக அவர்கள் ஈடுபட்டார்கள்? சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் மானியம் தரலாம் என்ற முறையிலே வைத்திருக்கிறார்கள். ஜெயில் தண்டனை என்பது மாஜிஸ்டிரேட்டினுடைய டிஸ்கிரிஷனைப் பொறுத்தது, 6 மாதம் கொடுக்கலாம் என்று இருந்தாலும் 6 நாட்கள் கூட கொடுக்கலாம். அதே நேரத்திலே அதிகமாகவும் கொடுக்கலாம். ஆகவே பிரீடம் பைட்டர்ஸ் பென்ஷன் ஸ்கீமைப் பொறுத்தவரையில் மத்திய அரசு 6 மாதம் என்றும் மாநில அரசு 3 மாதம் என்றும் நிர்ணயித்திருப்பதை எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் விவசாயிகள் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இங்கே உணவுப் பொருட்களுடைய விலை மிகக் குறைவாக இருக்கின்றது. அதற்கு மத்திய அரசாங்கத்தை நாம் சுட்டிக் காட்டவேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். இந்த அரசாங்கம் இஷ்யூ பிரைசை அதிகமாக்கி அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதன்முதல் இந்த அரசாங்கம் ஆட்சி அமைக்கிறபோது பயிர் இன்ஷுரன்ஸ் ஸ்கீம் அமுல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டம் இதுவரையில் அமல் படுத்தப்படவில்லை. அறிவிப்பைத் தான் தந்திருக்கிறார்கள். ஆகவே அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சாரம் சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் பெரு விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு யார் சிறு விவசாயிகள் என்று அடையாளம் இல்லாத காரணத்தினால் சிறு விவசாயிகளிடமிருந்தும் 14 பைசா வசூலிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதுவும் விவசாயப் போராட்டத்திற்கான காரணமாக அமைந்திருக்கிறது. ஆகவே உடனடியாக கிராமங்கள் தோறும் ஒரு சர்வே எடுத்து எவர் எவர்கள் சிறு விவசாயிகள் என்ற அறிவிப்பைத் தருவீர்களானால் இந்த அரசாங்கம் அறிவித்த நாளிலிருந்து அவர்களிடமிருந்து 12 பைசா வீதம் வசூலித்துக் கொள்ளலாம்.

பாலாறு பேசின் ரெஸ்ட்ரிக்ஷன் ரூல் என்று வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிறது. அங்கே $7\frac{1}{2}$ ஹார்ஸ் பவர் வரைக்கும்தான் பம்புசெட் வைத்துக் கொள்ளலாம். அதற்குத் தான் ஒப்புதல் அளிக்கலாம் என்று இந்த அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிறார்கள். ஏற்கெனவே 5 ஹார்ஸ் பவர் பம்புசெட்டு போட்டிருக்கிறார்கள் என்றால் மேற்கொண்டு இரண்டரை

ஹார்ஸ் போடுவதற்குத்தான் சட்டத்திலே இடம் இருக்கிறது. ஆனால் 3, 5, 10, H. P. பம்ப்செட் தான் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

(பிற்பகல் 12-50)

இந்த ப்ராக்டிக்கல் டிபிக்கல்டீசை அனுசரித்து, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய கலெக்டர் ஏறக்குறைய $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்பாக $7\frac{1}{2}$ ஹார்ஸ் பவரை, 8 ஹார்ஸ் பவராக மாற்றுங்கள், அல்லது 10 ஹார்ஸ் பவராக மாற்றுங்கள் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார். அதையும் இந்த அரசாங்கம் உடனடியாகத் தீர்த்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அணைக்கட்டுகள் திட்டத்தைப் பற்றி சொல்லும்போது, இந்த பட்ஜெட்டிலே புதிதாக அணைக் கட்டுகள் கட்டுகின்ற திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்பட வில்லை, எதிரிலே அமர்ந்திருக்கிற விவசாயத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், வட ஆற்காடு மாவட்டத் திற்கு ஏற்கனவே முதலாவதாக செண்பகதோப்பு திட்டத்தை அறிவித்தார்கள், ஆனால், கைவிட்டு விட்டார்கள். ஆனால் நீங்கள் கட்டுகிற—அணைக்கட்டு பகுதியிலே கட்டுகின்ற கோவில் மலைத் திட்டத்தையாவது, இந்த அரசு உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், குடிமராமத்து இருக்கிறது. ஏரிகளுக்கு தண்ணீர் வருகின்ற கால்வாய்களுக்கு தூர் எடுக்கின்ற முறையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். வடிகாலை மட்டும் சீர்திருத்தினால் போதாது. அந்த ஏரிக்குத் தண்ணீர் வருகின்ற வரத்துக்களையும் சீர்திருத்த வேண்டும்.

கிராமங்கள் தோறும் சுடுகாட்டுக்குப் பாதை என்று சொல்லும்போது, அரசாங்கமே சர்வே எடுத்து, எந்த எந்தக் கிராமங்களுக்கு இல்லையோ, அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் சுடு காட்டுப் பாதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுப் பணித் துறையிலே கான்ட்ராக்ட் விடுகிறார்கள். எஸ்டிமேட் தொகைக்குக் குறைவாக டெண்டர் கொடுக்கிறவர்களுக்கு கான்ட்ராக்ட் கொடுக்கப்படுகிறது. எஸ்டிமேட்டுக்குக் குறைவாக, டெண்டர் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அந்த கான்ட்ராக்ட் எடுத்தவர் எப்படி. குறிப்பிட்ட அந்த நேரத்திலே, கான்ட்ராக்ட் பணத்திலே வேலையைச் செய்து விட முடியும்? ஆகவே, எஸ்டிமேட்டுக்கு அதிகமாக டெண்டர் வருமேயானால், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதைத்தான் ஏற்று, அவர்களுக்கு வேலை தரப்பட வேண்டும்,

1979 ஏப்ரல் 25] [திரு. ரா. மார்க்கபந்து]

அடுத்து, மெடிக்கல் காலேஜ். இன்ஜினீயரிங் காலேஜ்களில், தகுதி திறமை அடிப்படையிலேயே அட்மிஷன் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி வைத்திருப்பதன் காரணமாக, கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்கு அதிகமாக இடம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, நகர்ப் பகுதியிலே இருக்கிற மாணவர்களுக்கு 100 மார்க்குகள் என்று நிர்ணயித்தால், கிராமப் பகுதியிலேயிருந்து வருகிற மாணவர்களுக்கு 75 மார்க் என்று நிர்ணயிப்பதன் மூலமாக, அந்தக் கிராமப்புற பகுதி மக்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். அதே நேரத்திலே, டிஸ்ட்ரிக்ட் வாரியாக கோட்டா நிர்ணயிக்க வேண்டும். குடும்பத்திலே ஒருவர் டாக்டராக இருந்தால், அடுத்தவருக்கு மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் இல்லையென்று வைத்தால்தான் சராசரியாக எல்லோருக்கும் கிடைக்கும் முறையிலே பங்கீடு சரியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதித் துறையிலே பேசும்பொழுது சொன்னேன், ஒருவன் கொலை செய்யப்படுகிறான் என்று சொன்னால், அந்தக் குடும்பம் சீர்குலைந்து விடுகிற நிலைமை இருக்கிறது, மற்றவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு தருகிற வகையிலே நிதியைத் தருகிறோம், ஆனால், கொலை செய்யப்படுகிறான் என்றால், அந்தக் குடும்பத்திற்கு எந்தவிதமான பாதுகாப்பும் தருவதில்லை. ஆகவே, கொலை செய்யப்பட்டு நிர்க்கதியாக இருக்கிற குடும்பத்திற்கும் நீங்கள் உதவிப் பணம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்று அவையின் முன்பு விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மசோதாவில் பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக, என்னுடைய கருத்துக்களைச் சுருக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று, முதன் முதலாக, மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள் சொன்னதைப் போல், பிற்பட்ட மிகவும், தாழ்த்தப்பட்ட கடை நிலை சமுதாயத்தில் இருக்கிற மக்களுக்கு சமுதாய எண்ணிக்கையின் In proportion to the population என்று நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் நாம் செய்ய விரும்புவது சமுதாய சமநீதி social Justice that should be equitably done to all sections of people என்ற கருத்தை மாண்புமிகு அவை முன்னவர் இருக்கிறார்கள், அவர்கள் மூலமாக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மைனாரிட்டியாக இருக்கக் கூடிய சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும் கூட, அதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் கருத்தில் நான் பல விஷயங்களில் வேறுபாடுடையவனாக இருந்தாலும் அவர்கள் மரணத்திற்கு முன்னால் குறிப்பிடுகிறபொழுது இதற்கு முந்தைய அரசு பிற்பட்ட வகுப்பினருக்கு நன்மை செய்தாலும் கூட சில மைனாரிட்டி ஜாதிகள்

தங்களுக்குள் கட்டுப்பாடாக இருந்ததன் காரணமாக, விழிப்பாக இருந்ததன் காரணமாக, பிற்பட்ட ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

அதுவும் சமுதாயத்தில் பிற்பட்ட சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு அவைகளை எப்படியும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்று பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், நான் அவர்கள் மரணம் அடையக்கூடிய நேரத்தில் இருந்தபோது தமது இறுதிக் காலத்தில் மிகவும் மனம்நொந்து சொன்ன இந்த கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி சமுதாயத்தில் பிற்பட்டவர்களுக்கு அவர்களுக்கு உண்டானதை செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். From within the backward communities there is an exploitation going on ஆகவே அந்த எக்ஸ்பிளாயிட்டேஷனுக்கு இடம் கொடுக்காமல், கிராமங்களிலேயிருந்து படிக்காத, ஏழைகளின் குழந்தைகளுக்கு, சமுதாயத்தில் .பிற்பட்டவர்களின் குழந்தைகளுக்கு, அவர்கள் படிக்க வந்தால், அவர்களுக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களை வைத்து தேர்ந்தெடுக்காமல் அவர்களுடைய பேமலி பேக்கிரவுண்ட்ஸ் போன்றவைகளைப் பார்த்து, அவர்களுடைய சமுதாய பொருளாதார நிலைமைகளின் அடிப்படைகளில், அவர்கள் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும்கூட, ஒரல் viva-voce என்ற நிலைமையை ஏற்படுத்தி அவர்களுக்கு மார்க்குகள் அதிகமாக கொடுத்தும், மேலும் சமுதாயத்தில் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய எல்லா நியாயமான வசதிகளையும் அவர்களுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லைப்ரரி, இங்கே இருக்கிற எம்.எல்.ஏ.க்களுக்கு என்று தனியாக ஒரு லைப்ரரி இருக்கிறது. அங்கே நிறைய நல்ல புத்தகங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உட்கார்ந்து படிப்பதற்கு வசதி எப்படியிருக்கிறது என்கிறீர்கள்? உட்கார்ந்து படிப்பதற்கு அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாற்காலிகள் கூட கிடையாது. அங்கே இருட்டில் உட்கார்ந்து கொண்டுதான் சட்டமன்ற உறுப்பினர்கள் புத்தகங்கள் பார்க்க வேண்டும். தூசியும் தும்பும் நூலாம்படைகளும் மிகுந்திருக்கின்றன. அந்த இடம் மிகவும் ஹைஜீன் ஆக ஆக்கப்பட வேண்டும். ஈஸ்ட் இண்டியா கம்பெனியில் வேலை செய்கிறபோது சொல்வார்கள், டார்க், டக் அண்டு டன்ஜன் என்று சொல்வார்கள், அது போல், டார்க்காக, டன்ஜனாக இருக்கிறது. அந்த இடத்தில் உட்கார்ந்து படித்தால் சட்டமன்ற உறுப்பினர்களின் உடல் நலம் நிச்சயமாகக் கெடும். நமக்கு மட்டும் அல்ல அங்கே இருக்கிற ஊழியர்கள் உடல் நலமும் பாதிக்கப்படும். ஆகையால் அந்த இடங்களை சுத்தப்படுத்தி, நன்றாக மாற்ற வேண்டும், இல்லையென்றால் வேறு கட்டிடத்திற்கு மாற்றி வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. கே. கந்தசாமி]

அடுத்து, எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் தொலைபேசி எக்ஸ்சேஞ்ச் வைத்திருக்கிறீர்கள். அங்கே எப்போது போனை எடுத்தாலும், ஊம், ஊம் என்றே சத்தம் வந்துக் கொண்டிருக்கிறது. கேட்டால் நாங்கள் என்ன பண்ணுவது என்று டெக்னிகலாக எக்ஸ்பெளியன் பண்ணுகிறார்கள். ஆகவே இதை விரிவு படுத்தி லைன்களை எக்ஸ்டண்ட் செய்து, அது நல்ல முறையில் உண்மையாகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பயன் உள்ளதாக ஆக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கார் காரேஜ். நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வைத்திருக்கிறார்கள். எனக்கு கார் இல்லை. ஆனால் வாடகை காரை பேசிக்கொண்டு 4 நாட்கள் வைத்திருந்தால் அதை பாதுகாக்க வேண்டும். அதற்கு இடம் வேண்டும். மற்ற மாநிலங்களிலுள்ள சட்டமன்ற விடுதிகளிலெல்லாம் எல்லா விதப் பாதுகாப்பும் உண்டு. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் காரேஜ் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்குப் பார்த்தாலும் வனமகோத்சவம் கொண்டாடுகிறார்கள். அந்த வார்த்தைகளை நாம் உபயோகப் படுத்தாவிட்டாலும், மரங்கள் நடவேண்டும் என்பதில் எல்லோருக்கும் விருப்பம் உண்டு. சட்டமன்ற விடுதியின் முன் பக்கத்தில் பார்த்தால் ஒரே பொட்டல் காடாக, டெசர்ட்ட் ஏரியாவாக இருக்கிறது. அதற்கு கார்டனர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்று தெரியவில்லை. நல்ல பசுமையான நிழல் தரக் கூடிய மரங்களை அங்கே வளர்க்க வேண்டும். உறுப்பினர்கள் மீது நம்பிக்கையிருந்தால் பழம் தரும் மரங்களையும் வைத்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சாப்பாடு மிகவும் மோசம். சட்டமன்ற விடுதியில் இருக்கும் உணவுக் கூடங்களில் சாப்பாடு படுமோசம். இங்கே கூட்டம் முடிந்து நேரம் கழித்து செல்கிறபோது அங்கே ஐயரிடம்போய் கேட்டால் உப்பில்லை, மிளகாய் இல்லை, அந்த உணவு நன்றாகவே இருப்பது இல்லை. இரண்டு உணவு விடுதிகள் இருக்கின்றன. இரண்டும் படுமோசம். அந்த ஆந்திரா உணவு விடுதியில் ஒரே காரம். இதையெல்லாம் கூட்டுறவு முறையில் ஒரு நல்ல உணவு விடுதி அமைக்கக்கூடாதா? அதை ஏன் உறுப்பினர்களுக்கு ஊக்குவிக்கும் அளவிற்கு நல்ல உணவாக கொடுக்க ஏற்பாடு செய்ய கூடாது? மாண்புமிகு முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். என்னுடைய உள் எண்ணத்தை புரிந்து பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 1-00)

கூட்டுறவை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்கிற போது, அந்த நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுகிற வகையில், அங்கே ஒரு கூட்டுறவு சங்கத்தை நிறுவி, அதன் மூலம் அங்கே

அந்த விடுதி நடத்தினால் நல்லது. அதற்கு ஒரு கூட்டுறவு தனி அதிகாரியையே போட்டு நடத்தலாம். பொருள்களை கூட்டுறவு மூலம் வாங்கி செய்தால் எல்லோருக்கும் நல்ல பொருளும், சாப்பாடும் கிடைக்கும். லாபகரமாகவும் நடக்கும். அந்த வகையில் உறுப்பினர்களுக்கு ஒரு கூட்டுறவுச்சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கேரளா, வங்காளம் போன்ற மாநிலங்களில் கன்சல்டேடிவ் கமிட்டிகளை அரசு வைத்து இருப்பதாக அறிகிறேன். அப்படி இங்கேயும் இருந்தால் ஒவ்வொரு அமைச்சருக்கும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு விவரங்களை எங்களைப்போன்ற உறுப்பினர்கள் அந்தக் கமிட்டியோடு தொடர்புகொண்டு அறிந்து கொள்ளமுடியும். இங்கே காலையில் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் மார்க்கபந்து, லத்தீப் எங்களுக்கு டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் தெளிவாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு நிலைமைகள் இல்லாமல், விவரங்களை, அரசின் உண்மைநிலையை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்; அது அரசு தெரிவித்து, தெரியவேண்டியது இல்லை. ஒரு என்கொயரி கமிஷன் என்று சொன்னாலே அதற்கு டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் உண்டு. அது தான் ஏ. பி. சி. டி.

திரு. கே. கந்தசாமி: டெர்ம்ஸ் ஆம் ரெபரன்ஸ் உண்டு என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அதை நான் சொல்லவில்லை. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, அரசுக்கு உதவிகரமாக இருக்கும் அளவிற்கு கன்சல்டேடிவ் கமிட்டிகளை ஏற்படுத்த வேண்டும்.

பல பெட்டிஷன்களை மக்கள் கொடுக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை அரசு எடுத்தது என்று தெரியவில்லை. ஆகவே, பெட்டிஷன் கமிட்டி என்று அமைக்கப்பட்டால் நாங்கள் கொடுத்த மனுக்கள் என்ன ஆயிற்று என்று அந்தக் கமிட்டி மூலமாக அதிகாரிகளை கூப்பிட்டுக் கேட்கவும் துரித நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பாக இருக்கும்.

பல மாநிலங்களில் லைப்ரரி கமிட்டி வைத்து இருக்கிறார்கள். அதைப்போல் நம்முடைய மாநிலத்தில் ஒரு லைப்ரரி கமிட்டி அமைக்க வேண்டும்.

இங்கே ரெபரென்ஸ் அன்ட் ரிசர்ச் செக்ஷன் வைத்து இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் அங்கே நடக்கிறது என்னவென்றால் 'இஸ்யூ ஆப் பாசஸ்' என்ற அளவுக்கு இருக்கிறது. அங்கே ரிசர்ச் வொர்க் நடக்கிறதா என்றால், எனக்குத்

1979 ஏப்ரல் 25] [திரு. கே. கந்தசாமி]

தெரிந்த வரையில் இல்லை. That is meant and indended only to issue passes to the members ரிசர்ச் நடந்தால் தான் மெம்பர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சில விவரங்களை சொல்லமுடியும். அந்த வகையில் ஆராயச்சி செய்வது பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலில் சொன்னதுபோல் பிற்பட்டவர்கள் என்கிற நிலை வருகிறபோது படித்து விட்டு இன்னும் வேலை வாய்ப்பு இல்லாது புறக்கணிக்கப்பட்டு இருக்கிறவர்கள், விவசாயக் கல்லூரி, மெடிகல், இன்ஜீனிரிங், குரூப் 1, குரூப் 2 என்று அப்படிப்பட்ட பதவிகளுக்கு வருவதற்கு நமது சமுதாயத்தின் பின்னணியை வைத்து, அந்த சமுதாயத்தின் சோசியோ எகனாமிக் கல்சுரல் கண்டிஷன் வைத்து விவரங்களை சேகரித்து வாயப்பு கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டு இருக்கின்ற நிதி ஒதுக்க மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்னதாக, நேற்றைய தினம் திடீரென்று மார் அடைப்பால் மரணம் அடைந்த திரு. பாங்கோ அவர்களின் மறைவுக்கு ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே இரங்கலைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவரோடு சேர்ந்து நானும், நான் சார்ந்து இருக்கின்ற ஜனதா கட்சியின் சார்பில் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நிறைந்த பண்புள்ளவர்கள், ஏழைகளுக்கு இருக்கும் பிரச்னைகளை தீர்க்கும் வகையில் மிகுந்த அக்கரை எடுத்து ஒரு சிறந்த செயலாளராக செயல்பட்டார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, நிதி ஒதுக்க மசோதா மீது சில கருத்துக்களைக் கூறும் போது தமிழ்நாட்டிற்காக மத்திய அரசு பெருமளவில் நிதி உதவி செய்திருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்காக, தமிழ்நாட்டின்மீது மத்திய அரசு எந்த அளவுக்கு அக்கரை கொண்டிருக்கிறது என்பதை கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற, பல்வேறு கணக்குகளில் ஒதுக்கியிருக்கிற நிதியைப் பார்க்கும்போது தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஒருவேளை இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாமல் இருந்தாலும் மக்கள் நன்றாக அறிவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு 139 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக்காக பல்வேறு துறைகளில் கொடுத்திருக்கிறது மத்திய அரசு. அதைப் போன்று 1978-79-ல் கூட திட்ட உதவிக்காக 96 கோடி ரூபாயை

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 25

யும், 1977 ஆம் ஆண்டில் இங்கே ஏற்பட்ட புயல் திட்ட உதவிக்காக 24·51 கோடி ரூபாயையும், மலைப்பிரதேச அபிவிருத்திக்காக 3.67 கோடி ரூபாயையும், இன்னும் திட்ட உதவிக்கு முன்பணமாக 35·35 கோடி ரூபாயையும், ஆக மொத்தம் 158·86 கோடி ரூபாயை தமிழ்நாட்டுக்காக மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்னும் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவை மத்திய அரசால் மாநிலத்திற்காக செயல்படுத்தப்படுபவை. ஆனால் பல்வேறு திட்டங்களை மாநில அரசு ஏற்று நடத்தாதன் காரணமாக நமக்கு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக. 'ஃபுட் ஃபார் ஒர்க்' என்ற திட்டத்தின் அடிப்படையில் சென்ற ஆண்டு மத்திய அரசு 2,04,580 மெட்ரிக் டன் கோதுமை செலவு செய்திருக்கிறது, ஆனால் கடந்த ஆண்டு இந்தத் திட்டம் நமது மாநிலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன், கடந்த ஆண்டு என்று கூறும்போது 1977–78-ல்.

அதைப்போல 1978–79 ஆம் ஆண்டு மத்திய அரசு 16,24,200 மெட்ரிக் டன் கோதுமை செலவு செய்திருக்கிறது, அதுமட்டுமல்ல, 11,86,250 மெட்ரிக் டன் அரிசியும் செலவு செய்திருக்கிறது, ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளும் தமிழ்நாடு அதை ஏற்றுச் செயல்படுத்தாதன் காரணமாக இந்தத் தொகையில், மத்திய அரசு கொடுக்கக்கூடிய பங்குத் தொகையை நாம் இழந்திருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்த அரசின் செயலற்ற முறையினால் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள பல்வேறு திட்ட உதவி கிடைக்காமல் போய்விட்டது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

அடுத்தபடியாக. 'அடல்ட் எஜுகேஷனுக்குக்காக' 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அதுகூட கடந்த ஆண்டு செலவிடப்படவில்லை, அதுமட்டுமல்ல, சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையையும் மாநில அரசு பயன்படுத்தவில்லை என்பதை கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்,

ஆக, இந்த அளவுக்கு மத்திய அரசு இவ்வளவு அக்கறையோடு தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் செயல்பட்டாலும்கூட இங்கே இருக்கிற அரசு மத்திய அரசுக்கு எதிராக ஒரு போர்க்கொடியை உயர்த்திக்கொண்டிருப்பது தமிழ்நாட்டுக்கு நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 25] [திரு. ஜெ. ஜேம்ஸ்]

அதுமட்டுமல்ல, அரசியல் மேடைகளில் வேண்டுமானால் மத்திய அரசை தாக்கிப் பேசலாம்; மத்திய அமைச்சர்களை தாக்கிப் பேசலாம், அதைப்பற்றி நான் வருத்தப்பட வில்லை, ஆனால் இந்த மாமன்றத்திலே பேசுகிறவர்கள்கூட மத்திய அரசையும் மத்திய அமைச்சர்களையும் தாக்கிப் பேசுகிறார்கள் என்றால் தமிழ்நாட்டுக்கு நன்மை உண்டா என்பதை நிச்சயமாக இந்த அரசு சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

எந்த அளவுக்கு தாக்கிப் பேசுகிறார்கள் என்பதை எல்லாம் எடுத்துக்கூற சமயம் போதாது என்பதால் இத்தோடு அதை விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, எதற்கெடுத்தாலும் எந்தப் பிரச்சனை வந்தாலும் மத்திய அரசை கைகாட்டுகிறீர்கள், உணவுப் பிரச்சனை என்றாலும் மத்திய அரசை கைகாட்டுகிறீர்கள். விவசாயிகளுக்கு விலை குறைந்தாலும் மத்திய அரசை கை காட்டுகிறீர்கள், விவசாயிகள் பிரச்சனை என்றாலும் மத்திய அரசை கைகாட்டுகிறீர்கள்,

சர்க்கரை கொள்கையைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் இங்கே கூறினார்கள், மத்திய அரசில் நிலையற்றக் கொள்கையால் இங்கே சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள், மத்திய அரசின் சர்க்கரை கொள்கையில் ஒரு நிரந்தரமான தன்மை இருப்பதினால்தான் இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்கள் எல்லாம் இன்றைக்கு சுலபமாக சர்க்கரை வாங்க முடிகிறது. ஏற்கெனவே கிலோவுக்கு 6 ரூபாய் கொடுத்தாலும் சர்க்கரை கிடைக்காமல் இருந்தது, இப்போது மூலை முடுக்குகளில் எல்லாம் சர்க்கரை தாராளமாக. குறைந்த விலையில் கிடைக்கும் நிலைமை இந்தக் கொள்கை யினால் ஏற்பட்டிருக்கிறது என்பதை கூறிக்கொள்ள விரும்பு கிறேன்,

(பிற்பகல் 1.10)

அதுமட்டுமல்லாமல் இன்றையதினம் ஏழைகள் பாதிக்கப் படாமல் எளிதில் வாங்கக்கூடிய நிலையில் அரிசி கிடைக்கின்றது என்று சொன்னால் மத்திய அரசு இந்த நாட்டில் சேப்டியாக இருப்பதுதான் அதற்குக் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆகவே மத்திய அரசைக் குறை கூற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு குறை கூறுகிறார்களே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கெரோசின் ஆயில் பிரச்சினை, இன்றைக்கு 3 ரூபாய் $2\frac{1}{2}$ ரூபாய் என்ற அளவில் கருப்பு சந்தையில் கிடைக் கின்றது, இந்த கெரோசின் ஆயில் எங்கே இருந்து வருகிறது?

அரபு நாடுகளிலிருந்து வருகிறதா? ஆகவே கொடுக்கப்படுகின்ற கெரோசின் சரியான அளவில் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் இந்த அரசின் திறமையின்மைதான் அதற்குக் காரணம், அதனால்தான் இங்கே இந்தப் பிரச்சினை இன்றையதினம் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகள் பிரச்சினை, விவசாயிகளைப் பொறுத்தமட்டில் இந்த நாட்டில் இருக்கின்ற 50 சத வீதம் விவசாயிகள் ஏழை விவசாயத் தொழிலாளியாக இருக்கின்றார்கள். உங்களுடைய கொள்கையால் ஏழை விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை, உண்மையிலேயே உங்கள் கொள்கையால் யார் நன்மை அடைகிறார்கள்? ஆகவே, ஏழை விவசாயிகள் நன்மை அடைகின்ற வகையிலே உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து பாசனத்தைப் பொறுத்தவரையில் தென் மாநில முதலமைச்சர்களை நம்முடைய மாநில முதலமைச்சர் கூட்டி மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கிழக்கு நோக்கித் திருப்பி விடுவது சம்பந்தமாகப் பேசினார், அது குறித்துப் பெரிய விளம்பரங்கள் எல்லாம் செய்தார்கள்........

மாண்புமிகு திரு, ப, குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளை கிழக்கு நோக்கித் திருப்பி விட வேண்டும் என்று பாரதப் பிரதமர் தேசாய் அவர்களே ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சொல்கிறாரா என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பாரதப் பிரதமர் தேசாயியின் உதவி இருந்தால்தான் உங்களுக்குக் கிடைக்கும் என்பதை உணர்ந்திருக்கிறீர்களே, அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், அடுத்து என்னுடைய பகுதியில்........

மாண்புமிகு திரு, ப, குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, எப்படிப்பட்ட திட்டமாக இருந்தாலும் மக்களுடைய உதவி இல்லை என்று சொன்னால் எந்தத் திட்டமும் நிறைவேறாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடுத்து என்னுடைய தொகுதியில் நீண்ட நாட்களாக ஒரு கால்வாய் அமைப்பதற்குரிய இன்வெஸ்டி கேஷன் எல்லாம் முடிந்து அது செயல்படுத்த வேண்டிய நிலை யில் இருக்கிறது. எனவே இந்த ஆண்டு செயல்படுத்துகின்ற திட்டங்களில் அதைச் சேர்த்துக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஆகவே, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்றைய தினம் இங்கே ஏதோ 5 மணி நேரம் உரையாற்ற இருப்பதாகக் கேள்விப் பட்டு எதிர்பார்த்திருந்தோம். ஆனால் 1 மணிக்கு திடீ ரென்று பேச்சை நிறுத்திவிட்டு மணியைப் பார்த்தபோது எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. நாட்டிலே இருக்கின்ற மக்களை ஏமாற்றுகின்ற நிலையிலே இருந்தது. மீதியை மேலவையிலே பேசுவேன், அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறியது பொருத்தமானதாக இல்லை. இதுபோன்றெல்லாம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடி யாது. குற்றச்சாட்டுகளைச் சொல்லுகின்றபோது அதற்குப் பதிலளிப்பதற்கு வகையில்லாமல் ஏதோ கில்லட்டின் என்று சொல்லி நேரம் ஆகிவிட்டது ஆகவே இங்கே பேச முடியவில்லை; மேலவையிலே சொல்கிறேன், அங்கே வாருங்கள் என்று சொல் வது ஏதோ இந்த அவையிலே இருக்கின்ற அங்கத்தினர்களை அவமதிப்பது போல் இருக்கின்றது என்று கருதுகிறேன்.

தருமபுரியில் கறுப்புக்கல் வெட்டுவதில் பெரும் ஊழல் ஏற் பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு பதிலளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார். கட்டாயமாக அது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வனத்துறையில் நான் உரையாற்றுகின்றபோது சில கருத்துக்களைக் கூறினேன். அதாவது கன்னியாகுமரி அரசு ரப்பர் தோட்டத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டினேன். அது சம்பந்த மாக பதில் சொல்லப்படவில்லை. நான் கூறிய அந்த ஊழல் சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று சொன்னேன். ஆனால் அன்றைய தினம் பதிலளிக்கையில் மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்கள் ''இதனை உடனே நீங்கள் என்னிடம் சொல்லியிருந்தால் நடவடிக்கை எடுத்திருப் பேனே'' என்று கூறினார். ஆனால் எந்த அதிகாரியின் மீது நான் என்னென்ன குற்றச்சாட்டுகளை கொடுத்திருந்தேனோ அந்தக் குற்றச்சாட்டுகளை தெளிவில்லாமல் ஆக்குவதற்கான முயற்சி கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அது குறித்து விசாரணை நடத்தினால் நிச்சயமாக அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபணம் ஆகும். அந்த ஊழல் தவிர்க்கப்பட வேண்டும், இல்லை என்று

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 25

சொன்னால் நான் இந்த ஊழல்களை மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து குடியரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஊழலில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படும் ஒரு அதிகாரி, வனத்துறை இலாக்கா பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சருக்கு சொந்தம் என்பது மட்டுமல்ல; ஏற்கனவே அவர் மீது ஒரு விஜிலென்ஸ் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே, இன்னும் எத்தனையோ ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; மஸ்டர் ரோல் ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றிச் சொன்னேன்; இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்களுக்கு உண்மையிலேயே நல்லெண்ணம் இருந்து இருக்குமானால், யாரையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலிருந்திருக்குமானால், இந்த விஷயத்தில் தேவையான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து விவசாயிகள் போராட்டம். ஏதோ, அங்கே யார் தலைமையிலோ நடந்தது. அப்பாவி ஏழைகள் பல கிராமங்களிலே போலீசாரால் சித்தரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விவாதிப்பதற்கு நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நாளை பேசுகிறேன்.

இன்று, தமிழ்ப் பகுதிகள் தாயகத்தோடு சேர வேண்டும் என்று பாடுபட்டு, உயிர்நீத்த தியாகிகளுக்கு பென்ஷன் வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்தார்கள். அது சம்பந்தமாக மேல் நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லை. நாங்கள் ஊருக்குச் செல்லுகின்றபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வழங்குவதாக அறிவித்த பென்ஷனை நீங்கள் வாங்கிக்கொண்டு வரவில்லையா என்று அவர்கள் கேட்பார்கள். அப்போது எங்கள் நிலை என்ன?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கூட்டத் தொடரிலே பேசியதையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். புதியதாக ஏதாவது பேசினால் நல்லது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: மதுரைப் பல்கலைக் கழகத்தில் 100 தற்காலிக கிளார்க்குகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். புதிதாக வேறு சில ஆட்களை அங்கே நியமித்திருக்கிறார்கள். ஏற்கனவே பாதிக்கப்பட்ட அந்த கிளார்க்கு

1979 ஏப்ரல் 25] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கள் போராட்டம் நடத்தி, இன்று ஜெயிலிலே இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களிடம் சொன்னேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இது நியாயமா என்று அரசு சற்று சிந்திக்க வேண் டும்.

அடுத்து, இந்த குரோம்பேட்டை லெதர் பாக்டரி மூடப் பட்டு, கேட்பார் அற்ற நிலையில் இருக்கிறது. இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்.ஜி.ஜி.ஓ.-க்கள் சம்பந்தமாக இன்று பல போராட்டங்கள் நடந்துகொண்டிருக் கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பை கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் கொடுக்க வில்லை. ஒரு வேளை இந்த இரண்டு நாட்களுக்குள் தேவை யான அறிவிப்பைக் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். வில்லேஜ் ஆபீசர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அந்தப் பிரச்னையும் தீர்க்கப்பட வேண்டும். அதோடு, பி.டபிள்யூ.டீ.-யிலே பணிபுரிகின்றவர்கள் இன் றைக்கு அந்த அலுவலகத்திற்கு முன்பு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்பார் அற்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு அவர்களை உதாசீனம் செய்யக்கூடாது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, இங்கே சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு வார்த்தையைக் கூறி முடித்துக்கொள்ள லாம் என்று கருதுகிறேன். இங்கே சில நாட்களாக ஒழுங்காக காரியங்கள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது இதை குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் ஒழுங்காக செயல்படுவதற்கு உதவிபுரியவில்லை என்று கூறுகிறேன். விதி 86-ஐ தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஏதாவது ஒரு அங்கத்தினர் முதல் முறை யாக தவறு செய்தால், அவரை அன்றைக்கு மட்டும் வெளி யேற்ற வேண்டும். இரண்டாவது தடவை மீண்டும் தவறை செய்தால், 'ரெஸ்ட் ஆப் தி செஷன்' முழுவதும் வெளியேற்ற வேண்டும் என்று 86-வது விதி தெளிவாக இருக்கின்றது. ஆனால், ஆளும் கட்சியினருக்கு மிகுந்த பலம் இருக்கின்ற காரணத் தால், இங்கே எதிர் கட்சியிலே இருக்கின்றவர்கள் அனை வரும் செயல்படக் கூடாது என்ற முறையில், முதல் தடவையாக செய்த குற்றத்திற்கே, ஒரு தீர்மானத்தைப் போட்டு வெளி யேற்றுவது நிச்சயமாக நல்லதல்ல; இந்த விதி முறைக்கும் உகந்தது அல்ல. அரசியல் காரணமாக எதிர் கட்சியினர் இந்த அவையில் செயல்பட்டால், ஆளுகின்றவர்களுக்கு வசதி குறைவு இருக்கிறது என்ற காரணத்திற்காக, நீங்கள் செய்திருக் கின்றீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, இந்த விதி 86-க்கு எதிராக எதிர்கட்சியைச் சார்ந்த 3 அங்கத்தினர்களை வெளி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 25

யேற்றியது முறையல்ல என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்து, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

[பிற்பகல் 1-20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில் வனத் துறையைப் பற்றி ஏதோ சில விவரங் களைக் குறிப்பிட்டு மானியக் கோரிக்கை விவாதத்தில், கன்னியா குமரி மாவட்டத்தில் சில குறைகளை எடுத்து வைத்ததாகவும், அதற்கு பதில் அளித்த போது, இதை தனியாக தந்திருக்கலாமே, இப்போது நீங்கள் பேசியதனால் அதற்கான தடயங்கள் அழித்து விடக்கூடும் என்று நான் அப்போது சொன்னதையும் குறிப்பிட்டு, அது அதிகாரிகளுக்கே அனுப்பி இப்போது அந்தக் குற்றங்களி லிருந்து தப்பிக் கொள்ள நான் உதவி செய்திருக்கிறேன் என்கிற குற்றச்சாட்டையும், அந்த அதிகாரி எனக்கு உறவினர் என்ற உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டையும் சொல்லி, இதை நீங்கள் கவனிக்கவில்லை, முதலமைச்சர் கவனிக்கவில்லை என்றால் இதைக் குடியரசுத் தலைவருக்கு அல்லது பிரதம அமைச்சருக்கு அனுப்பி வைப்பேன் என்ற அப்படிப்பட்ட ஒரு நிலைமையையும் எடுத்துச் சொன்னார்கள். நான் இரண்டுக்கும் விளக்கம் அளிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அதிகாரிகள் அன்றைக்கும் இங்கே உட்கார்ந்து கொண்டிருந் தார்கள். உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்து இருக்கிறேன். அதிகாரிகளைப் பற்றி குற்றச் சாட்டுக்கள் வந்தால் உயர் அதிகாரிகள் மூலமாகத்தான் நடவடிக்கை எடுப்பார்கள். விஜிலென்ஸ்-க்கு போனால் அதற்கு காலதாமதம் ஆகும். உடனே வந்துவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களை இன்றைக்கும் கேட்டுக் கொள்வேன். அவர்களிடம் ஆதாரங்கள் இருந்தால், அவற்றை உடனடியாகக் கொடுத்தால், அதை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். அவரே வந்து நிரூபிக்கட்டும். அது ஒன்று.

இரண்டாவது, நான் ஏதோ அவர்களுக்கு ஆதரவாக இருக் கிறேன் என்ற அந்தக் குற்றச்சாட்டையும், நான் மறுக்கிறேன். யாரோ எனக்கு உறவினராக இருக்கிறார் என்று சொல்லு கிறார். இந்த மாநிலத்தில் அரசுப் பொறுப்பில், அதிகாரிகள் பொறுப்பில் எந்த உறவினரும் கிடையாது. அப்படிப்பட்ட பாக்கியத்தை நான் பெறவில்லை. மாண்புமிகு ஜேம்ஸ் அவர் களுக்கெல்லாம் இருக்கலாம். எனக்கு உறவினர் என்றால், இந்த அமைச்சரவை, இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் தானே தவிர வேறு யாரும் எந்த அதிகாரியும் கிடையாது. ஆகவே அவர்கள் இதை தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அதை நிரூபிக்கின்ற பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1979 ஏப்ரல் 25]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அங்கே டி. எஃப். ஓ. வாக இருக்கின்ற ரத்தினசாமி அவர்கள் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுடைய உறவினர் என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்கு கிடைத்த தகவலைச் சொன்னேன். அங்கேயுள்ள ரத்தினசாமி அவர்களுக்கு எந்தவித உறவினரும் அல்ல என்று அவர் சொன்னால் அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர் உறவினர் இல்லை என்று சொன்னதற்கான பொறுப்பை அவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இல்லை என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு எனக்கு மிகவும் உதவி புரிந்த இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் பேச ஆரம்பித்து இருந்தால், மணி இரண்டைத் தாண்டி அதற்கு பிறகு நானும் பேசி, அதற்குப் பிறகு ஒரு மசோதாவையும் நிறைவேற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கிற போது, இப்படிப் பட்ட உறுப்பினர்கள் சில சந்தர்ப்பங்களில் மட்டுமல்ல, நெருக்கடியான சங்கடங்களில் எப்படி உதவுகிறார்கள் என்பதற்கு மாரிமுத்து அவர்கள் இலக்கணமாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இலக்கியமாக அமைகிறது என்பதால் நான் அவருக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.

இங்கே வந்திருக்கின்ற நிதி ஒதுக்கல் மசோதா மீது உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ கடந்த இரண்டு மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த தொடர் கூட்டம் இன்னும் இரண்டொரு நாட்களில் முடிய விருக்கிறது. இந்த இரண்டு மாதங்களுக்கிடையில் கனம் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை நான் பேரவைக்கு நிதி நிலை அறிக்கையை என்றைக்கு சமர்ப்பித்தேனோ அன்றிலிருந்து மானியக் கோரிக்கைகளின் மீதும் தீர்மானங்களின் மீதும் ஒத்தி வைப்புப் பிரேரணைகள் மீதும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதும் தங்களது முழுமையான கருத்துக்களை பேசக் கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் அதிகமாகப் பேச விரும்பவில்லை. விரும்பாத

தற்குக் காரணம் பேச வேண்டிய அனைத்தையும் நான் பேசி விட்டேன். பேசியே தீருவது என்ற பிடிவாத குணம் எனக்கு இல்லை.

பேசியதையே திருப்பித் திருப்பிப் பேசுகிறீர்கள் என்று சபாநாயகர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதிலே எனக்கு அக்கறை உண்டு. ஒரு முறை பேசியதை திருப்பித் திருப்பிப் பேசியே தீரவேண்டும், எனக்கு அப்படிப் பேசாமல் இருந்தால் தலை வெடித்து விடும் என்று கருதுகிற கடமை உணர்வுள்ள உறுப்பினர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கருத்துக்களைத் தெரிவித்தவர்களில், குறிப்பாக, இறுதியாக பேசிய ஜேம்ஸ் அவர்கள் ஏதோ இங்கே இருக்கிற அரசு மத்திய அரசுக்கு எதிராக போர்க் கொடி தூக்க கூடிய நிலையில் இந்த அரசு இருக்கின்றதென்றும், எப்போது பார்த்தாலும் மத்திய அரசை இந்த அரசு தாக்கிப் பேசுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது என்றும் ஒரு அபாண்டமான பழியை இந்த அரசின் மேலே சுமத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு முன்னாலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நம் முறுக்கு மீசைக்காரர் அம்பிகாபதி அவர்கள் பேசுகின்ற சந்தர்ப்பங்களிலே எல்லாம், இதை எதிர்த்து மத்திய அரசோடு போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடாதா என்று கேட்காத நாளே இல்லை....

திரு. ரா. உமாநாத் : இப்படி முறுக்கு மீசை என்று ஆரம்பித்தால், நாளைக்கு இந்தச் சபையிலே பலர் அங்கங்களைச் சித்தரிக்க ஆரம்பித்து விடுவார்கள். அது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவு செய்து உமாநாத் அவர்களுக்கு அது இல்லை என்பதற்காக நான் அவரைக் குறைத்து மதிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பேசிய ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, இந்திரா காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு பிரச்சினை வரும்போதெல்லாம், அது கரும்பு பிரச்சினையாக இருந்தாலும், விலை நிர்ணய பிரச்சினையாக இருந்தாலும், மொழிப் பிரச்சினையாக இருந்தாலும் வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேசும்போது மத்திய அரசை எதிர்த்து நாம் ஏன் போராட்டம் ஆரம்பிக்கக் கூடாது, நாங்கள் துணை நிற்போம் என்று ஒவ்வொரு முறையும் பேசும் போதெல்லாம், இந்த அவையிலே முதலமைச்சர் ஆனாலும் சரி, நான் ஆனாலும் சரி, அமைச்சர் பெருமக்கள் ஆனாலும் சரி, பேசியே காரியங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும் நிலை இருக்கும் போது, எதற்குப் போராட்டம் என்று பேசி யிருக்கிறோமே தவிர, போராட

1979 ஏப்ரல் 25] [திரு. கி. மனோகரன்]

வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தான் நாங்கள் தெரிவித்திருக்கிறோம் என்பதை அருமை மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. அந்தப் பொறுப்புணர்ச்சியோடு, பொறுப்போடு நடந்து கொள்கிற அரசாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அவருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் இருக்கின்ற உறவு மிகவும் அருமையான உறவாக இருக்கின்றது எனபதை ஜேம்ஸ் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் இங்கே இருந்து கொண்டு, எதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் இங்கேயும் இருந்து கொண்டு, அங்கேயும் இருந்து கொண்டு பிரச்சினைகளைப் பார்க்கின்ற காரணத்தால், இருக்கிற நாட்டு நிலைமைகளை ஜேம்ஸ் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன. ஒரு நாள் விமானத்திலே விரைந்து சென்று, டெல்லியிலே நான்கு பேர்களைச் சந்தித்து விட்டு, இங்கே வந்து இப்படி ஜேம்ஸ் அவர்கள் பேசுவது லாபமில்லை. நான் ஜேம்ஸ் போன்றவர்களைக் கேட்டுக் கொள்வது, இருக்கின்ற சுமூகமான உறவுகளை மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலே விவாதங்கள் பயன்பட வேண்டுமே தவிர, இருக்கின்ற உறவைக் குறைக்கின்ற நிலையை தயவு செய்து உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சியை எடுத்துக் கொண்டால், இந்த முயற்சியில் நீங்கள் நிச்சயமாகத் தோல்வியுறுவீர்களே தவிர, நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ, திரு.ஜேம்ஸ் அவர்களுக்கு பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களும், மற்ற அமைச்சர்களும் நமது முதலமைச்சர் அவர்களிடம் அன்பாக இருப்பது பிடிக்கவில்லையோ, என்னவோ தெரியவில்லை. ஆனால் அவர்களிடையே இருக்கின்ற அன்பைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், பிரதம மந்திரி அவர்கள் கலந்து கொண்ட ஒரு விழாவிலே, நமது முதல் அமைச்சர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதை அவர்களுக்கு நினைவு படுத்துகிறேன். கொஞ்ச நேரம், காலம் தாழ்ந்து முதலமைச்சர் வந்து விட்டார்கள் என்பதை நினைத்து வருந்தி, முதல் அமைச்சர் பேசும் போது, 'அண்ணன் இங்கே உட்கார்ந்திருக்கிறார்' அண்ணனை வரவேற்க வேண்டிய தம்பி காலந்தாழ்ந்து வந்ததற்கு வருந்துகிறேன்' என்று சொன்னதை எண்ணி எணணி, பெருமைப் பட்ட நிகழ்ச்சியை அவருக்கு நினைவூட்டுகிறேன்.

[பிற்பகல் 1–30]

பிரிப்பதற்கு முயற்சிக்காதீர்கள், அது நடக்காது, எங்களுக்குள்ளே இருக்கின்ற உறவு, மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் பெடரல்—சமஷ்டி அமைப்பில் இருக்கின்ற

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 25

உறவு அருமையான உறவு. ஆனாலும், மத்திய சர்க்கார் தவறி ழைக்குமானால். அநீதி இழைக்குமானால் தட்டிக் கேட்பதற்கு இந்த மாநில அரசு தயங்காது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதுமட்டுமல்ல, இன் னொன்றையும் அவர் குறிப்பிட்டார், மத்திய சர்க்கார் ஏராள மாகப் பணம் வழங்குகிறது என்றும், அதற்கு நாங்கள் எல்லாம் நன்றி இல்லாதவர்களாக இருப்பது போன்ற உணர்வை உருவாக் குகின்ற முறையில் ஜேம்ஸ் அவர்கள் பேச்சு அமைந்தது. நான் எனது நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டேன்—பக்கம் 36— அந்த நிதிநிலை அறிக்கை ஜேம்ஸ் அவர்கள் கைவசம் இருக்காது, அதிலே குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.—

" ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களின் பங்கு 35,160 கோடி ரூபாய். மத்திய அரசின் பங்கு 34,220 கோடி ரூபாய் என்ற அடிப்படையில் ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டம் உருவாக் கப்பட்டது, முதன் முறையாக மாநிலங்களின் பங்கு. மத்திய அரசின் பங்கை விட அதிகமாக அமைய இருப்பதும். நாட்டு வளர்ச்சியில் மாநில அரசுகள் ஏற்றுள்ள அதிகப்படியான பொறுப் புகளை மத்திய அரசும். மத்திய திட்டக் குழுவும் இவ்வாறு உணர்ந்து செயல்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும், 2,000 கோடி ரூபாய் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்கிலிருந்து (Centrally spons red schemes) மாநில அரசுத் திட்டங்களுக்கு (state plan) மாற்றப்படுவதன் மூலம். ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலத் திட்டங்களின் பங்கு 37,160 கோடி ரூபாயாகவும், மத்திய அரசின் பங்கு 32,220 கோடி ரூபாயாகவும் அமையும். இந்தப் போக்கு இனியும் தொடர்ந்து, மாநில அரசுகளின் பங்கு வருங்காலத்தில் இன்னும் வளரவேண்டும் என்பதே தமிழக அரசின் ஆவலாகும்" என்று கூறி மத்திய அர சின் போக்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் எந்த அளவுக்கு மாநில அரசுக்கு உதவ வேண்டுமென்று மத்திய அரசு எண்ணுகிறது இதயபூர்வமாக என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டி எனது நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லியதற்குப் பிறகும் அருமை ஜேம்ஸ் அவர்கள் அப்படிச் சொன்னது எனக்கு மிகவும் கவலையைத் தருகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள் "புட் பார் ஓர்க்" என்பதற்காக மத்திய சர்க்கார் தந்த உதவி யைப் பயன்படுத்தவில்லை எஸ். எஃப். டி. ஏ. வுக்கு மத்திய அரசு உதவியை முழுமையாகப் பயன்படுத்தத் தவறிவிட்டதாகக் கூறினார்கள். 'ஃபுட் பார் ஓர்க்'–இந்த ஆண்டில்தான் 1979–80–ல் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்ற

முன்பு கோதுமைக்கு மட்டுமே அந்த உதவியைப் பயன்படுத்த வேண்டுமென்ற நிலைமை இருந்தது. மாறி அரிசி, கோதுமை இரண்டையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வாய்ப்பு தற்போது அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நமது மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், எஸ். எப். டி. ஏ. நிதி ஒதுக்கீட்டையும் பயன்படுத்திக் கொள்வதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுதான அரிசி வழங்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். 1978-79 ஆம் ஆண்டில் கூட மத்திய அரசு 1,86,250 மெட்ரிக் டன் அரிசி இந்த வகைக்காகச் செலவு செய்து இருக்கிறது. கோதுமைக்கு வழங்கியிருந்தால்கூட அதைப் பெற்றாவது பட்டினியாக இருக்கும் ஏழை மக்களுக்கு உதவி இருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். திரு. ஜேம்ஸ் போன்ற நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—கோதுமை என்றால் காத தூரத்திற்கு ஓடுகின்ற அளவுக்கு நமது மக்கள் இருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து மறந்துவிடக் கூடாது. ஆகையால் தான் அதை மத்திய சர்க்காருக்கு எடுத்துக் காட்டி ''நீங்கள் கோதுமை வழங்குவதற்குப் பதிலாக அரிசி உணவில் பழக்கப்பட்ட மக்களுக்கு அரிசி வழங்குவதுதான் உதவியாக இருக்கும்'' என்று சொன்னபோது மத்திய அரசு—மனம் இரங்கி என்று சொல்வதைவிட, நிலைமையைப் புரிந்து ஏற்றுக் கொண்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசு உதவி நன்றாகச் செயல்படுகிறது என்பதை நான் ஜேம்ஸ் அவர்களுக்குச் சொன்னாலும், அவருக்கு என் மீது நம்பிக்கை இல்லையென்றால் அதற்கு நான் பொறுப்பாளியாக இருக்க விரும்பவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அருமை உமாநாத் அவர்கள் பேசும்போது—நான் அப்போது இல்லை, இங்கே என்னிடம் குறிப்பைத் தந்திருக்கிறார்கள். ''மாணவர்கள் கெடுக்கப்படுகிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?'' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மாணவர்கள் எப்படி எப்படிக் கெடுக்கப்பட்டார்கள் என்பதைப்பற்றி அவர்கள் என்ன பேசினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், கிடைத்த தகவலின்படி நான் கற்பனை செய்துக் கொள்கிறேன். சில விடுதிகளில், சில ஓட்டல்களில் தவறான காரியங்கள் நடைபெறுகின்றன, பெண்கள் அழைத்து வரப்படுகிறார்கள் அல்லது பெண்களை அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதற்கு உரியவர்கள் அந்தக் காரியத்தில்

ஈடுபடுகிறார்கள். அந்த விடுதியின் உரிமையாளர்மேல் நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களா, மாணவர்கள் எல்லாம் கெட்டுப் போகிறார்களே என்று அவர் கேட்டார் என்று நான் கருதுகிறேன், N.P. நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டில் ரமேஷ் என்ற மாணவரிடமிருந்து கடிதம் வந்ததாகத் தெரியவில்லை, அவர் ரமேஷ் என்ற மாணவரிடமிருந்து கடிதம் வந்ததாகச் சொன்னதாக நான் கேள்விப்படுகிறேன், ஆனால், காவல் துறை, கணபதி லாட்ஜிலே அது 29, பீட்டர்ஸ் சாலை, யிலே இருக்கிறது; அந்த லாட்ஜிலே இந்தத் தொழில் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டு வருவதாக அரசுக்குச் செய்திகள் கிடைத்தன. அதையொட்டி, 6—1—1979 20—1—1979 3—2—1979. 22—2—1979. 9—3—1979. 24—3—1979. 4—4—1979 ஆகிய நாட்களில் அந்த ஓட்டல் ரெய்ட் செய்யப்பட்டது. இது வரையில் 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 11 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். உடந்தையாக இருந்த குற்றத்திற்காக 2 ஆண்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், 13 வழக்குகளில் 11 இல் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. 4—4—1979 இல் கைது செய்யப்பட்ட இரண்டு பெண்கள் மீது குற்ற எண். 218, 219 இல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடைபெறுகின்றன. அது ரெகுலர் லாட்ஜ் இல்லை, ஆகவே, அதற்கு என்று தனி உரிமம் இல்லை. அங்கே மாதாந்திர வாடகைக்குத்தான் தங்குகிறார்கள். ஒருவர் அந்த லாட்ஜை குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். குத்தகை எடுத்தவர் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்து நல்ல உயர்ந்த உள்ளத்தோடு எதிர்கால மாணவர்களின் நல்வாழ்விற்காக அந்தச் சேதியை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்த திரு. உமாநாத் அவர்களுக்கு நான் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு திரு. உமாநாத் அவர்கள் இயற்கையிலேயே ஏழை எளியவர்களுக்காக கடைநிலை ஊழியர்களுக்காக சதா சிந்திப்பவர் என்பது மட்டும் அல்லாமல் அவர் பணியாற்றுகின்ற கட்சியில் ஒரு முக்கியமான உறுப்பினர் என்ற முறையில் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். சட்டமன்றத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கு அவை நடைபெறுகிற காலத்திலாவது அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கக் கூடாதா என்று வேதனையோடு அவர்கள் கேட்டார்கள். அவரது இதய உணர்வை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்வதோடு போதுமா என்று அவர் கேட்பாரானால் நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன், நிச்சயம் பஸ் பாஸ் வழங்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேஜை தட்டும் ஒலி).

அதற்குப் பிறகு அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் பேசும்பொழுது ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு கருத்து

1979 ஏப்ரல் 25] [திரு. கி. மனோகரன்]

கமிட்டிகள் அமைக்க வேண்டுமென்பது, கன்சல்டேட்டிவ் கமிட்டிகள் அமைக்க வேண்டும் என்பது. அதே கருத்தை பெரியவர் திரு. கந்தசாமி அவர்கள் வலியுறுத்தினார்கள். அதே கருத்தை அதற்குப் பிறகு பேசிய சில பேச்சாளர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும். மூன்று முக்கியமான கமிட்டிகள் அமைக்க வேண்டுமென்று திரு. விஜயராகவன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஒன்று கமிட்டி ஆன் பெட்டிஷன்ஸ், இரண்டு, கமிட்டி ஆன் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் அன்ட் டிரைப்ஸ். மூன்றாவது கமிட்டி ஆன் லைப்ரரி என்று குறிப்பிட்டார்கள். இது நல்ல யோசனை. இந்த யோசனைகளை உடனடியாக ஏற்று இந்த அரசு நிறைவேற்றும் என்று சொல்ல முடியாத நிலையில் நான் இப்போது நிற்பதற்குக் காரணம் அதற்குரிய முறையிலே விதிகளைத் திருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினரின் இந்த யோசனை நிச்சயமாக அரசின் பரிசிலனையில் இருக்கும் என்ற உறுதியை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1. 40)

அதற்குப் பிறகு விஜயராகவன் அவர்கள்தான் பேசியதாக எனக்கு நினைவு, ஒரு புதிய சட்டமன்றம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். இப்பொழுது இருக்கிற சட்டமன்றம் எப்படி இருக்கிறது என்பதை நண்பர்கள் அறிவார்கள். எந்த அளவிற்குக் காற்று வர முடியாதோ அந்த அளவிற்குச் சட்டமன்றம் அற்புதமாக அமைந்திருப்பதும் இங்கே உட்கார்ந்திருக்கிற நண்பர்கள் இந்த வெயில் காலத்தில் எந்த அளவிற்குக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதும் ஆனால், ஒரு வகையில் அந்தக் கொடுமையிலேயிருந்து அவர்கள் தற்காலிகமாக தப்பித்துக் கொள்கிற அளவிற்கு நிலைமைகள் இருப்பதை நான் பார்க்கிறேன். ஏனென்றால், திடீரென்று அதிகமாக வியர்வை கொட்டி அந்த வியர்வை தாங்காமல் துடித்து அதற்குப் பிறகு அந்த வியர்வையே குளிர்மையாக ஆகி கொஞ்சத்திற்கு கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டு எப்படியோ காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை நான் முதலமைச்சரிடம் இந்த மாமன்றத்திலே அடியெடுத்து வைத்த நாளிலேயிருந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். நமக்கென்று ஒரு புதிய நவீன வசதிகளோடு கூடிய ஒரு சட்டமன்றத்தைக் கட்ட நாம் முயற்சிக்க வேண்டும். இன்றைக்கு பெங்களூருக்குச் சென்றால்—ஆரம்பத்திலே எதிர்த்தார்கள். இதெல்லாம் தேவை தானாவென்று கூடக் கேட்டார்கள். ஆனால், விதான் சௌதா இன்றைக்கும் அனுமந்தையாவினுடைய பெயரை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இப்பேர்ப்பட்ட ஒரு அருமையான சட்டமன்றத்தைப் போன்ற சட்ட மன்றம் நமக்கு அமையுமானால் அது மிக அருமையாக இருக்காதா என்று நான் முதல்

அமைச்சரிடம் நேற்றைக்குப் பேசியபோது, அருமையான யோசனை இது நிச்சயம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்று நீங்கள் தாராளமாக அவைக்குச் சொல்லலாம் என்று சொன்ன கருத்தை இந்த நேரத்தில் நண்பர் விஜயராகவன் அவர்களுக்கும் மற்றைய நண்பர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகள் எல்லாம் செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதிலே நம்மிடையே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்காது என்று நான் மனதார நம்புகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே பேசிய நண்பர்கள் அமைச்சர்களுககு பியூன் ஆக இருப்பவர்கள், சோப்தார் போன்ற நிலையிலே இருப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் கொஞ்சம் கூடுதல் ஊதியம் தரக் கூடாதா? ரூ. 25 வாங்குகிறார்கள், கூடுதலாக இன்னும் ரூ. 25 கொடுக்கக் கூடாதா? அவர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்களே என்றெல்லாம் கேட்டார்கள், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது அமைச்சர்கள் வந்து இறங்குகிறபொழுது வழிமேல் விழி வைத்து காத்திருப்பவர்களாக அவர்கள் நின்று கொண்டு, அமைச்சர்கள் வந்தவுடன் அவர்கள் கொண்டு வருகின்ற பைல் கட்டுகளை மட்டும் அல்லாமல் சாப்பாடு சாதனங்கள் இருந்தால் அவைகளையும் தூக்கிக்கொண்டு வந்து அமைச்சர்கள் எங்கே வைக்கச் சொல்கிறார்களோ அங்கே வைத்துவிட்டு அதற்குப் பிறகு அமைச்சர்கள் அதை எடுத்து வரச் சொன்னால், எடுத்துக் கொண்டு வந்து அதற்குப் பிறகு அமைச்சர்கள் போகிற வரை அவர் பக்கமே நின்று அமைச்சர் போவது இரவு 10 மணி ஆனால் அதுவரை காத்திருந்து, இவ்வளவு தொல்லைப்படுவர்களுக்கு ரூ, 25 கூட்டி கொடுக்கக் கூடாதா என்றால் இயலாமைக்காக வருந்துகிறேன் என்று.... ஒரு வேளை உங்களிலே யாராவது கருதினால் நான் தெரிவிக்க விரும்புகிறேன், அவர்களுக்கு ரூ. 25 உயர்த்தித் தரப்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு உமாநாத் அவர்கள் பேசும்பொழுது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமைச்சருடைய உதவியாளர்களுக்குச் சொன்னீர்கள், எங்களைப் பற்றியும் இணைத்துச் சொன்னால் (சிரிப்பு).......

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:—அது சபாநாயகர் ஆசனத்திலே இருந்து அதைக் கேட்கக் கூடாது, (சிரிப்பு) தனியாக எனது அறைக்கு வருமாறு அவரை நான் கேட்டுக்கொள்கிறேன், (பலத்த சிரிப்பு).

திரு. ஜே. ஜேம்ஸ்: பாய்ன்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சபாநாயகரை நிதியமைச்சருடைய அறைக்குக் கூப்பிட்டது உண்மையிலே பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். He should have some sense of humour எனக்குத் தெரியாதா சபாநாயகரின் உரிமை, அவருக்கு இருக்கிற தகுதி, அவருக்கிருக்கிற ஆற்றல், அவருக்கிருக்கிற ஆட்டிப்படைக்கும் அளவுக்கு இருக்கிற அத்தனை உரிமைகளும் தெரிந்தும் ஒரு சிரிப்புக்காகப் பேசுவதை இவ்வளவு சீரியஸ்ஸாக எடுத்துக் கொண்டு பேசுவது கஷ்டமாக இருக்கிறது, உங்களோடு எப்படித்தான் காலம் கடத்தப் போகிறேனோ, எனக்குப் புரியவில்லை. (பலத்த சிரிப்பு.)

எனக்கு நன்றாகத் தெரியும். பத்திரிகைகளில் குறிப்பாக, இங்கே வந்திருக்கிற, அத்தனை பத்திரிகைக்காரர்களையும் ஒருவர் கூட விடாமல், நான் நேரிலே தெரிந்து வைத்திருப்பவன், அவர்களுக்கிருக்கிற அந்த Sense of humour-ல் ஒரு 50 percent you must have கடைசியாக, நமது திரு. உமாநாத் அவர்கள் ஒன்றைச் சொல்லி, ஆமாம், என்.ஜி.ஓ.க்களைப் பற்றி அறிக்கை தருவதாகச் சொன்னீர்கள். வருமா என்று சந்தேகத்தோடு கேட்டார்கள்.

ஒரு முறை இந்த அரசு அதுவும் இந்த அவையில் இறுதியான ஒரு வகை உறுதியை தந்ததற்குப் பிறகு அந்த வகை உறுதியில் இருந்து பிறழுவோம் என்ற நம்பிக்கையை மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் வளர்த்துக் கொள்வது கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு அந்த அறிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

அரசிதழ் பதிவுறா அலுவலர் சங்கம் (NGGO Union) சென்ற சில வாரங்களாக தனது கோரிக்கைகளை அரசின் முன் வைத்து, போராட்ட ரீதியில் அதனை வலியுறுத்தி வந்துள்ளது, C & D ஊழியர் சங்கம், தலைமைச் செயலக சங்கம் போன்ற பல சங்கங்கள் போராட்ட ரீதியில் செயல்படாமல், தங்கள் கோரிக்கைகளை அரசின் முன் வைத்து ஆக்க பூர்வமாக வாதாடி வந்துள்ளன, தமிழ்நாடு அரசிதழ் பதிவுறா அலுவலர் சங்கம் (NGGO Union) 14 கோரிக்கைகளையும், C & D அலுவலர் சங்கம் 16 கோரிக்கைகளையும், தலைமைச் செயலக சங்கம் 7 கோரிக்கைகளையும் அளித்தன. இதுபற்றி நிதிச் செயலாளருடனும், தலைமைச் செயலாளருடனும், பின்னர் (என்னுடனும்) முதலமைச்சருடனும் சங்கங்கள் விரிவாகப் பேசி தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தன. அலுவலர் சங்கங்ளுடன் 22ஆம் தேதி பேசியபோது அரசின் முடிவுகளை இன்று அவையில் அறிவிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரித்தார்கள். அதனையொட்டி அரசு எடுத்துள்ள முடிவுகளை அவைக்கு விளக்க விரும்புகிறேன்.

2. கோரிக்கைகளில் பல, ஊதியக் குழு விரிவாக ஆராய்ந்து தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில், அரசு எடுத்த முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற வகையில்

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 25

எழுப்பப்பட்டன. சில கோரிக்கைகள் நிர்வாக முறைகள் பற்றி ஆணைகள் பிறப்பிக்க வேண்டிய தன்மையன, நேரடி நிதிச் செலவு ஏற்படுத்தக் கூடிய வகையில் பல கோரிக்கைகளும் அத்தகைய நேரடிச் செலவு ஏற்படாத வண்ணம் சில கோரிக்கைகளும் எழுப்பப்பட்டன.

3. அரசிதழ் பதிவுறா அலுவலர் சங்கம் கொடுத்த 14 கோரிக்கைகளில் முக்கியமானவை. ஊதிய ஆணைக்குழு பரிந்துரைகளை மாற்றியமைக்கும் தன்மையில் அமைந்தன. குறைந்த அளவு அடிப்படைச் சம்பளத்தை ரூ. 250-லிருந்து ரூ. 323 ஆக உயர்த்த வேண்டும் என்ற அவர்களது கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என்றால் அதற்காக மட்டும் ஆண்டுக்கு சுமார் 55 கோடி ரூபாய் வரை செலவாகும். இந்தக் கோரிக்கையை ஆராய்ந்த ஊதியக்குழு இதனை ஏற்பதற்கில்லை என தனது அறிக்கையின் ஐந்தாவது, ஆறாவது அத்தியாயங்களில் குறிப்பிட்டுள்ளது.

4. இந்தச் சங்கத்தின் மற்றொரு கோரிக்கை புதிய ஊதிய விகிதங்கள் செயல்படுவதற்கு முன் மத்திய அரசு அகவிலைப்படிக்கும் மாநில அரசு அளித்து வந்த அகவிலைப்படிக்கும் இடையில் இருந்த வேறுபாட்டை நீக்கும் வகையில் மாநில அரசு அகவிலைப்படி தந்திருக்க வேண்டும் என்றும் அதற்கீடாக பாக்கித் தொகைகள் தரப்பட வேண்டும் என்பதாகும். இதற்கு உத்தேசச் செலவு சுமார் 40 கோடி ரூபாய் ஆகக்கூடும் என்று மதிப்பிடப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்பதற்கில்லை என ஊதியக்குழு தனது அறிக்கையில் 94ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளது. அலுவலர் அனைவரிடமும் மாதம் 10 ரூபாய் பெற்றுக்கொண்டு, ஓய்வு பெறுபவர் ஒவ்வொருவருக்கும். அவரது பணிக்காலம் எவ்வளவு என்று கருதிப்பாராமல், மொத்தம் ரூ, 10,000 வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. இதன்படி ஒரு மாதம் பணிபுரிபவராயினும் ரூ. 10,000 தர வேண்டும் என்பது கோரிக்கை ஆகும். இதனை ஏற்றால் பின்னால் ஓய்வு பெறுபவர் தரும் பணத்தை எடுத்து முதலில் ஓய்வு பெறுபவருக்கு தந்து, அதற்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டிவரும், இதற்காக அரசின் பொறுப்பு ஆண்டுக்கு சுமார் ரூ. 10 கோடியாக அமையும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

5. மற்றொரு கோரிக்கை. எல்லோருக்கும் ஒரு மாத போனஸ் தரவேண்டும் என்பதாகும். இதற்கு ஆகும் செலவு ஆண்டுக்கு ரூ. 32 கோடியாக அமையும். இந்த கோரிக்கையை நன்கு பரிசீலித்து ஊதியக்குழு இதனை ஏற்பதற்கில்லை என, தனது அறிக்கையின் 99 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளது.

6. மாதாந்திர மருத்துவப்படி வழங்கிடவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றால் அதன் விளைவாக ஆண்டுச் செலவு ரூ, 27 கோடி ஏற்படும். இத்தகைய முறை அரசுக்கு பெருஞ் செலவை ஏற்படுத்தும் என்பதோடன்றி, நோய்வாய்ப்பட்டு

1979 ஏப்ரல் 25] [திரு. கி. மனோகரன்]

அல்லலுறும் நேரத்தில் தேவையான மருத்துவ வசதியை இழக்கச் செய்வதாக அமைந்துவிடும். ஊதியக்குழு தனது அறிக்கையின் 99ஆவது அத்தியாயத்தில் இதுபற்றி விவாதித்து, இதனை ஏற்க வேண்டியதில்லை என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

7. விடுப்பின்போது வெளியூர் செல்ல பயணப்படி தர வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையும் ஊதியக்குழு நிராகரித்ததாகும். இதற்கு ஆண்டுக்கு சுமார் ரூ. 10 கோடி செலவாகும்.

8. மேற்கூறிய கோரிக்கைகளை ஏற்பதென்றால் மொத்தம் ஆண்டுக்கு கூடுதல் செலவு ரூ. 172 கோடி ஆகும். தமிழ் நாட்டு அரசின் வருவாய் ரூ. 850 கோடியாகவும் தற்போது அலுவலர் ஆசிரியர் ஊதியங்களுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 385 கோடி ஆகவும் (45 சதவிகிதம்) உள்ள இன்றைய நிலையில், இந்த உயர்வு எவ்வளவு பிரமாண்டமானது என்பதையும், இதனை ஏற்பதென்றால் அரசின் நிதி ஆதாரங்கள் எந்த அளவுக்கு பெருக்கப்பட வேண்டும் என்பதும், பொதுமக்கள் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதிச் செய்யப் படும் பல்வேறு திட்டங்கள் எவ்வளவு தூரம் சீர்குலைந்துவிடும் என்பதும் எண்ணிப்பார்க்கும்போது, கோரிக்கைகளின் நியாயமற்ற தன்மை அனைவருக்கும் தெளிவாகும்.

9. சி. அண்டு டி. அலுவலர் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளில் முக்கியமான சில ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூ. 10,000 தரவேண்டியது என்பதும், ஆண்டுதோறும் ரூ. 100 போனஸ் வழங்கவேண்டுமென்பதும், ஈட்டிய விடுப்பை உயர்த்த வேண்டுமென்பதும் ஆகும். இவற்றுக்கு கூடுதல் செலவு ஆண்டுக்கு சுமார் 21 கோடி ரூபாய் செலவாகும்.

10. தலைமைச் செயலக சங்கம் கூடுதல் பதவிகளை ஏற்படுத்துதல், செயலக ஊழியர் சம்பள விகிதங்களை மாற்றுதல் ஆகிய கோரிக்கைகளை முக்கிய கோரிக்கைகளாக அரசின் முன் வைத்தனர். இதற்கு கூடுதல் செலவு சுமார் ரூ. 25 இலட்சம் ஆகும்.

[பிற்பகல் 1-50.]

11. பல்வேறு கோரிக்கைகளையும் கலந்து பேசி நன்கு ஆராய்ந்தபின், அலுவலர்களுக்கு நன்மை பயக்கும் கீழ்க்கண்ட முடிவுகளை அரசு எடுத்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வருங்காலத்தில், மாநில அரசு அலுவலர்களுக்கு மத்திய அரசு கைக்கொள்ளும் முறையை ஒட்டி, மாநில அரசின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு, ஆண்டுக்கு ஒருமுறை அகவிலைப்படி பற்றி முடிவு எடுக்கவேண்டும் என்று ஊதியக்குழு பரிந்துரைத்தது. எல்லா அலுவலர் சங்கங்களும், மத்திய அரசு அண்மையில் அளித்த அகவிலைப்படியை

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 25

ஒட்டி தமிழக அரசும் அகவிலைப்படி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளன. இதனையேற்று, அரசு 1—4—79 முதல் அரசு அவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்க்கு அகவிலைப்படி அளிக்க முடி செய்துள்ளது. மத்திய அரசு, வாழ்க்கைச் செலவுப் புள்ளி 200-ஐ அடிப்படையாகக் கொண்டு, 4 சதவிகிதம், 3 சத விகிதம் என்ற முறையில் அகவிலைப்படி அண்மையில் அளித் துள்ளது. நமது ஊதிய விகிதங்கள், வாழ்க்கைச் செலவு புள்ளி 320-ஐ அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், ரூ. 650 வரை சம்பளம் பெறுவோர்க்கு 2.5 சதவிகிதம் அகவிலைப்படியும், ரூ. 650 முதல் ரூ. 1,600 வரை சம்பளம் பெறுவோர்க்கு 1.875 சதவிகித அகவிலைப்படியும், ரூ. 1,600-க்கு மேற்பட்டு சம்பளம் பெறுவோர்க்கு ரூ. 1,600 சம்பளம் பெறுபவருக்கு தரப்படும் அதே அளவு அகவிலைப் படியும் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி குறைந்த அளவு மாத அகவிலைப்படி ரூ. 6 ஆகவும், உயர்ந்த அளவு ரூ. 30 ஆகவும் அமையும். இந்த அகவிலைப்படி 1—4—79 முதல் கணக்கிடப்பட்டு வழங்கப்படும், ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் வரும் மே மாதம் பெறும்போது, இந்த அகவிலைப் படியும் பெறலாம்.

12. ஓய்வு ஊதியம் பெறுவோர்க்கு ரூ. 3 முதல் ரூ. 12 வரையில், தக்க முறையில் அகவிலைப்படி வழங்கப்படும். இதுவும் இதே தேதியிலிருந்து ஓய்வு ஊதியத்துடன் அளிக்கப்படும்.

13. பழைய அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவிகிதம் உயர்வு பெற்று, புதிய சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயம் செய்து கொள்ளுவதற்கான வாய்ப்பு 1—4—78 அன்று மட்டுமே அளிக்கப் பட்டு வந்தது. சங்கங்களது வேண்டுகோளுக்கு இணங்க, இந்தச் சலுகையை 31—3—79 வரை நீட்டிக்க அரசு முடிவு செய் துள்ளது.

14. அரசு குடியிருப்புகளில் வசிக்கும் அலுவலர்களிடமிருந்து நியாயமான வீட்டுவாடகை பிடித்தம் செய்வதை ஆராய அமைக் கப்பட்ட அலுவலர் குழு, தனது அறிக்கையை அண்மையில் அரசிடம் அளித்துள்ளது. அரசு இதுபற்றிய ஆணைகள் விரைவில் பிறப்பிக்கும்.

15. மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை செலுத்தி, ஓய்வு பெறும்போது மொத்தத் தொகை பெறுவதற்கு ஏற்ற மாற்றுத் திட்டங்களைத் தருமாறு, கூடிப் பேசிய எல்லா அலுவலர் சங்கங்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டன. முறையான மாற்றுத் திட்டம் இருப்பின், அதனை அரசுக்கு சங்கங்கள் அனுப்பினால், அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கத் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. கி. மனோகரன்]

16. பவானிசாகர் அலுவலர் பயிற்சிப் பள்ளியில் நடைபெற்ற போராட்ட நாட்கள் பணிக்காலமாகக் கருதப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்க இயலவில்லை. எனினும் அந்த நாட்கள் ஏற்ற விடுப்பாகக் கருதப்படும், இடையில் பயிற்சிக்கு வராத நாட்கள் பணி முறிவாகக் (Break in Service) கருதப் படமாட்டாது. இதற்கான அரசு ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

17. அரசு ஊழியர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாக சங்கங் கள் முறையிட்டன. பொதுவாக மூன்றாண்டுகட்கு முன்னால் ஓரிடத்திலிருந்து அலுவலர்கள் மாற்றப்பட மாட்டார்கள். மூன் றாண்டுகட்கு பின் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்ற விதி செயல்படும்போது குறிப்பாக விதிவிலக்கு பெறத் தேவையுள்ள போது, அதனை அரசு அனுதாபத்துடன் கவனித்திடும்.

18. மிதி வண்டி (Cycle) வாங்குவதற்கென அரசு அலுவலர்களுக்குத் தரப்படும் முன்பணம், அண்மையில் ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டது. புதிய மிதி வண்டிகள் வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் இதனை ரூ. 600 ஆக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை அரசு, அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அரசு ஏற்றுள்ள இந்த முடிவுகளின் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 12 கோடி செலவாகும்.

19. ஊதியக் குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு எடுத்த முடிவுகளில் சிலவற்றை மாற்ற வேண்டும் என அலுவலர் சங்கங்கள் கோரியுள்ளன. அலுவலர் சங்கங்கள் வேண்டுகோட்களுக்கு இணங்க, முதன்முறையாக நீதிபதி ஒருவர் தலைமையிலான ஊதியக்குழு பரிந்துரைகள் செய்து, அதனை அரசு ஏற்றுள்ள நிலையில், மீண்டும் அவற்றை மாற்று வது சரியல்ல என அரசு முடிவு செய்துள்ளது. இது பற்றிய விவரங்களை அரசு அலுவலர் சங்கங்களுக்கு அறிவிக்கும்.

20. ஓய்வு பெறும் வயதை உயர்த்த வேண்டும் என்று ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது அலுவலர் சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளுள் ஒன்று. அரசு, இந்தக் கோரிக்கையை ஏற்க முடிவு செய்துள்ளது. தற்போது 55 வயதில் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ள தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும், இனிமேல் 58 வயதில் ஓய்வு பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

21. சங்கங்கள் ஏதும் கோராத முக்கிய முடிவு ஒன்றை அரசு அறிவிக்க விரும்புகிறது. தற்போது ஓய்வு ஊதியம் வழங்கும் முன் Accountant General சரிபார்க்க வேண்டும் என்ற முறையில்

ஒரு சில மாதங்கள் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனை மாற்றி பொதுவாக மாவட்ட மட்டத்திலேயே ஓய்வு ஊதியம் வழங்க அதிகாரம் அளிக்கப்படும். இதன் வாயிலாக ஓய்வுபெறும் அதே நாளில், ஓய்வு ஊதிய உத்தரவுகளை அலுவலர்கள் பெற வகை ஏற்படும். அலுவலர்கள் அனைவருக்கும் பலனளிக்கும் இந்த நிர்வாகச் சீர்திருத்தத்தை உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.

22. அரசு இயந்திரம், பொது மக்கள் அனைவருக்கும் பயன் தரும் வகையில் இயங்க வேண்டும் என்ற குறிக்கோளை செயல் படுத்தும் பெரும் பொறுப்பினை நிறைவேற்றும் அரசு அலுவலர் கள், அரசின் நிலை உணர்ந்து, அறிவிக்கப்பட்ட இந்த முடிவுகளை ஏற்று, சமுதாயத்தின் பல்வேறு நிலையிலுள்ளவர்களுக்கும், குறிப்பாகக் கீழ்த்தட்டிலுள்ளவர்களுக்கும் பயனளிப்பதற்காக அரசு தீட்டியுள்ள திட்டங்களை ஆர்வமுடன் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேச்சு வார்த்தைகள் மூலம் அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள் ளுவதற்கு அரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்பதை மீண் டும் அலுவலர்கட்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். தற்காலிக மாகப் போராட்டத்தை நிறுத்தி வைத்துள்ள அரசிதழ் பதிவுறா அலுவலர் சங்கம், அரசின் இந்த நன் முடிவுகளை ஏற்று போராட்ட மனப்பான்மையை முற்றிலும் கைவிட வேண்டும் என்றும் மற்ற அரசு அலுவலர் சங்கங்களும், அலுவலர்கள் அனைவரும் அரசுக்கு ஊற்றுழி உதவும் செயல் வீரர்களாகப் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையோடு நான் எனது பேச்சை முடித்து, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரை யும் கேட்டு, அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவை முன் னுள்ள கேள்வி—''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு கி. மனோகரன் : துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்".
என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஐ. நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுனவடிவு 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

[பிற்பகல் 2-00].

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்"
என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஓ. நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன் வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 31/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

*1979, ஏப்ரல் 24 ஆம் நாள் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

[திரு, கி, மனோகரன்] [1979 ஏப்ரல் 25

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 31/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு 1979

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1979) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

ஓ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

என்று மொழிகிறேன்.

*திரு. என். சங்கரையயா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் இப்போது முன் மொழியப்பட்ட சம்பளம் வழங்கல் திருத்த சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன் வடிவு பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்களுடைய நிலையைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

சமீப காலத்திற்கு முன்பு இந்த சட்டப் பேரவையில் இருக்கக் கூடிய கட்சிகளோடு தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அவரிடத்திலே

*1979, ஏப்ரல் 24 ஆம் நாள் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

கூறினேன். உறுப்பினர்கள் தொகுதிகளிலே வேலை செய்வதற்கும் மக்களுடைய பிரச்சினைகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் தேவைப்படக் கூடிய வசதிகள் செய்து கொடுப்பது பொருத்தமாக இருக்கும். ஆனால் அவர்களுடைய ஊதியத்தை எந்த வகையிலேயும் உயர்த்துவது இன்றைய சூழ்நிலையிலே பொருத்தமாக இருக்காது என்று நான் ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இப்போது கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய சட்டத்திலே இரயில்வே பயணத்திலே ஏறத்தாழ எல்லா வகுப்பிலேயும் பயணம் செய்வது என்ற ஒரு மாற்றத்தைத் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே பிரச்சினை இல்லை.

அதே போல் உறுப்பினர்களுக்கு டெலிபோன் சம்பந்தமாகவும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பது போல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக ஒன்றும் பணம் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளிலே அரசாங்கமே அவர்களுக்கென்று டெலிபோன் ஏற்பாடு செய்து ஆண்டு ஒன்றுக்கு இலவசமாக 5,400 லோக்கல் கால்ஸ் போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த மாதிரி ஏற்பாட்டைச் செய்தாலே போதுமானதாக இருக்கும். மக்களுடைய பிரச்சினைகளை இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அது உதவியாக இருக்கும். ரொக்கமாக கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை என்று கூறினோம். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அது மத்திய அரசிடத்திலே பேசி ஏற்பாடு செய்ய வேண்டிய விஷயம், என்றும் ஆகவே இப்போது இருக்கக் கூடிய அளவிலே மேலும் 50 ரூபாய் உயர்த்தலாம் என்றும் இது நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டார்கள்.

ஆகவே, டெலிபோன் அலவன்சு சம்பந்தப்பட்ட வரை நீங்கள் வற்புறுத்தி மத்திய சர்க்காருடன் பேசி 5,400 லோகல் கால்கள் இலவசமாக ஏற்பாடு செய்கின்ற இந்த இடைக்காலத்தில் 50 ரூபாய் உயர்த்தி யிருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால், பிரத்தியேகமான இந்த சட்டத்தின் அம்சம் காம்பன்சேடரி அலவன்ஸ் 200 என்பதை 350 ஆக உயர்த்துவதற்கு இந்த மசோதா வசதி செய்கிறது. இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அளவிற்கு சம்பளம் உயர்த்த வேண்டுமென்றால், அது ஒரு பொதுவான பிரச்சினை அல்ல. மாநிலத்திலே இருக்கக்கூடிய பொருளாதார நிலைமையை, இந்த மாநிலத்திலே இருக்கக் கூடிய 4 கோடி மக்களில் பெரும்பாலானவர்கள் எப்படி பொருளாதார வசதியற்று வாழ்கிறார்கள் என்பதை பார்த்து, சட்டமன்ற உறுப்பினர்களுடைய வாழ்க்கைத் தரம் இருக்க வேண்டும் என்பது ஒரு ஜனநாயக மரபாகும்

அப்படிப் பார்க்கும் போது, இந்த மாநிலத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்கு, கிழக்குத் தஞ்சையிலே இருக்கக்கூடியவர்களுக்கு ரூ. 7.20 கொண்டு வருவதற்கு முயற்சித்திருக்கிறோம். மற்ற மாவட்டங்களிலே இதை விட நிலைமை மோசமாக இருக்கிறது. இந்த நிலையில் சாதாரண மக்கள் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது, அவர்களுக்கு அதை ஈடு கட்டிக் கொள்வதற்கு எந்தவிதமான வசதியும் செய்ய முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், ரூ. 200 லிருந்து ரூ. 350 ஆக உயர்த்துவது, பொது மக்கள் இது எந்த வகையில் நியாயம் என்று கருதுவதற்கு ஏதுவாகும்? ஆகவே, இன்றைக்கு அந்த ஷரத்துத் தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் இந்த ஷரத்தைக் கைவிடவில்லை என்றாலும், நாங்கள் இந்த ஷரத்தை எதிர்க்கிறோம். இந்த ஷரத்து இந்த மசோதாவிலே பிரதான அம்சமாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்த மசோதாவை நாங்கள் எதிர்க்கிறோம். இந்த காம்பென்சேடரி அலவன்சை இன்றைக்கு நாங்கள் ஏற்றுக் கொள்ளாத நிலைமையிலே இருக்கிறோம். ஏற்கனவே, எங்களுடைய உறுப்பினர்கள் பல தடவை எடுத்துச் சொன்னாலும், எங்கள் நிலைமையைப் பொறுத்த வரையில், இந்த 200 லிருந்து 350 ரூபாய் என்று ஆக்குவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதைப் பற்றி தகுந்த அதிகாரிகளுக்கு தெரிவித்துக் கொள்வோம் என்பதைக் கூறிக் கொண்டு, இந்த மசோதாவின் பிரதான ஷரத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறோம் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மிக சுருக்கமாக நான் சில கருத்துக்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்சார்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரய்யா அவர்கள்அந்த காம்பன்சேடரி அலவன்ஸ்-ஐ தமது கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்கள், மற்ற எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன என்று நான் நம்புகிறேன். ஆகவே, நான் அவர்களை மறுபரிசிலனை செய்து, இதை ஏற்றுக்கொள்ள முயற்சி எடுப்பார். எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொன்னது சில வசதிகளை (பெசிலிடிஸ்) கொஞ்சம் பெருக்கிக் கொடுப்பதை சரியாகாது என்று குறிப்பிட்டார்கள். நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஓராண்டுக்கு முன் அறிவித்ததை, ஏன் நிறைவேற்றாமல் இருக்கின்றீர்கள் என்று தினம் தினமும் சந்திக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் என்னைத் துளைத்துக் கொண்டிருந்தார்கள் எறுபடியும் இந்தக் கூட்டத் தொடரில் நிறைவேற்றி விடுவேன் என்று உறுதிமொழி வழங்கினேன். அவர்கள் இன்றைக்கு

1979 ஏப்ரல் 25] (திரு. கி. மனோகரன்)

மொத்தமாகப் பெறுகின்ற சம்பளம் ரூ. 250 தான். மொத்த மாக இதன்மூலம் பெறப்போவது ரூ. 750. ஒருசணம் சிந்திக்கக் கேட்டுக் கொள்கிறேன். 750 ரூபாயை வைத்துக் கொண்டு அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும் என்பதை அருள்கூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தொகுதியிலே இருநது வருபவர்களையும் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு ஆகின்ற செலவு களையும் அவர்கள் ஏற்காவிட்டால், இவர்கள் தொகுதிக்குப் போகும் போது அவர்கள் இவர்களை என்ன செய்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமை இருந்த காரணத்தினால் தான் குறைந்த அளவுக்கு மாற்றப்பட்டது. மற்ற மாநிலங்களை எலலாம் எடுத்துக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இது மிகவும் குறைச்சல் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 2-10]

அதற்கடுத்தாற்போல், அவர்கள் கேட்டது, அரசு செலவி லேயே அங்கத்தினர்களுக்கு தொலைபேசி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விட்டார்கள். நான் இப்போது இந்த அவையில் இந்த அறிவிப்பைத் தர விரும்புகிறேன்.

1959-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கும் சட்டம் செக்ஷன் 12-(4)பி-யின் கீழ் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 100 டெலிபோன் அலவன்ஸ் என்று கொடுக்கப்படும் என்பதை மாற்றி டெலிபோன் அலவன்ஸ் மாதம் ரூபாய் 150 என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது. இது அங்கத்தினர்களின் டெலிபோன் செலவை ஈடுசெய்யும் என்று நம்புகிறேன். இது தவிர அங்கத்தினர்கள் தங்கள் இல்லங்களில் அல்லது இருப்பிடத்தில் தொலைபேசி அமைக்கும் செலவு அதிகமாகிறது-இன்ஸ்டலேஷன் சார்ஜ் அதை நாங்கள் ஏற்பது இயலாது என்று கருதுகிறார்கள். அரசு தீவிரமாக இதை ஆலோசித்து முதன்முதலில் டெலிபோன்-தொலைபேசி அமைக்கும் செலவை தொடரரச் செலவை— கேப்பிடல் எக்ஸ்பெண்டிச்சர்ரை அரசே ஏற்பது என்று முடிவு செய்திருக்கிறது. டெலிபோன் அமைக்கும் செலவை முதன் முதலில் அமைக்கும்போது டெப்பாசிட் ஏதாவது இருந்தால் அதையும் அரசே ஏற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த தேர்தலில் வேறொரு உறுப்பினர் அந்தத் தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படுவாரேயானால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருடைய இல்லத்திற்கு இணைப்புக் கொடுப்பதற்கான செலவையும் அரசே ஏற்று அந்த தொலை பேசி அந்த அங்கத்தினருக்கு மாற்றப்படும். மேலும் தொலை பேசிக்குக் கட்டவேண்டிய தொடர் செலவுக்காக கால் ச டிரங்கால் சார்ஜ் ரெண்டல் சார்ஜ் டெலிபோன் இலாகா அ போது, அனுப்பும் பில்லையும் அந்த அங்கத்தினரே கட்டிவிட்டு மாதாமாதம் அரசாங்கம் வழங்கும் தொலைபேசி அலவன்ஸ்

(திரு. கி. மனோகரன்) [1979 ஏப்ரல் 25

150 ரூபாயை அங்கத்தினர்கள் பெற்றுக்கொள்வார்கள். சென்னையில் .ஓ.ஒய்.டி. சிஸ்டத்தில் டெலிபோன் ஒவ்வொன்றுக்கும் இணைப்புக்கு ரூபாய் 5,000 டெப்பாசிட்டாக கட்ட வேண்டியிருக்கிறது. மற்ற இடங்களில் டெலிபோன் இணைப்புக்கு ரூபாய் 800, 1,000 என்று மாறுபடுகிறது. அருகிலுள்ள டெலிபோன் அலுவலகத்திலிருந்து உறுப்பினர்களின் இல்லத்திற்கு இணைப்புத் தருவதற்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் என்பதை சொல்லி அதே நேரத்தில் கனம் உறுப்பினர்களின கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது இந்தத் தொலைபேசிக்கு தொடக்க டெப்பாசிட் ரூபாய் 5,000, "தொலைபேசி இலாகா, இணைப்புக்குக் கட்டணம் ரூபாய் 100-ஐ தனியாக வசூலித்துக் கொள்ளுகிறது. ஆண்டு வாடகை ரூபாய் 600-ல் ஒரு பகுதி, அதாவது காலாண்டுக்கு ரூபாய் 60 வீதம் ஆண்டுக்கு ரூ. 240 ம், சேவைக் கட்டணம் ஆண்டுக்குரூபாய் 10 ம் ஆக சேர்த்து ரூபாய் 250ஐ இந்த டிபாசிட் தொகை ரூபாய் 5,000 லிருந்து கழித்துக் கொண்டே வந்து 20 ஆண்டுகளில் சரிகட்டி விடுகிறது. இதனால் முதல்20 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு காலாண்டிலும் ரெண்டல்சார்ஜ் ரூபாய் 150-க்குப் பதிலாக, ரூபாய் 90-க்கும், கால் சார்ஜ், டிரங் கால் சார்ஜ் இத்யாதிகளுக்காகவும் டெலிபோன் இலாகா பட்டியல் அனுப்பும்" என்று டெலிபோன் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.....

திரு எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த மசோதா எவ்வளவு, வேகமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நாடும் நன்றாக தெரிந்திருக்கிறது. நாமும் நன்றாக தெரிந்திருக்கிறோம். இங்கு ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்திய கோரிக்கைகளுக்கு நிதி அமைச்சர் அவர்கள் எதுவும் அறிவிக்கவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. சிறிது நேரத்திற்கு முன்னால் முதலமைச்சர் அவர்களை சந்தித்து பேசிக்கொண்டிருந்தபோது, 35 ரூபாய் அலவன்ஸ் என்பதை 50 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினேன். அவர்களும் அதை ஒப்புக்கொண்டு இதுபற்றி அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். அதே போன்று ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் ஒரு முறை எம்.எல்.ஏ வாக இருந்தாலும் அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி அறிவிப்பார்கள் என்று என்னிடத்தில் சொன்னார்கள். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் இதுவரையிலும் அதைப்பற்றி எதுவும் அறிவிக்கவில்லை. இந்த சலுகை வேண்டுமென்று கேட்பதின் நோக்கமே, நாம் எல்லாம் இங்கே பெருத்த தியாகம் செய்து கொண்டுதான் இங்கே வநது உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு வக்கீல் என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கிருந்து செங்கற்பட்டுக்கு ஒரு தடவை செஷன்ஸ்கோர்ட்டுக்குப் போனால், "டே காஸ்டு"

1979 ஏப்ரல் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்ற முறையில் எனக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறைவில்லாமல் நான் போகமாட்டேன். அதே நேரத்தில் இங்கே உட்கார்ந்து கொண்டு ஒரு ஆபீஸ் நடத்தவேண்டியிருக்கிறது. தனியாக போன் வைத்துக்கொண்டிருக்கிறோம். வேலைக்கு தனியாக ஒரு ஆள் வைக்கவேண்டியிருக்கிறது. அதற்கு சம்பளம் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பல செலவினங்களை நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பெருத்த தியாகத்தோடு நான் செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே தான் 35 ரூபாய் என்றிருப்பதை 50 ரூபாய் என்று உயர்த்தி கொடுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறேன். விலைவாசிகள் எல்லாம் அந்த அளவுக்கு ஏறியிருக்கிறது. இந்த நிலைமையில் இதை உயர்த்துவதற்கு ஏன் தயக்கம் என்று தெரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏன் இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏதோ அரசியல் காரணங்களுக்காக சில எதிர்க்கட்சிகள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இதை விட்டுவிடுவது சரியாக இராது

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, யாரோ ஒரு அரசியல் கட்சி எதிர்க்கின்றார்கள் என்று மாண்புமிகு லத்தீப் அவர்கள் கூறக்கூடாது. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை. அதற்கான லட்சியம் இருக்கின்றது. அந்த அடிப்படையிலே முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எம்.ஏ. லத்தீப்: தயவுசெய்து யாரையும் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. பொதுவான நோக்கத்தோடு சொல்லு கிறேன். இந்த மாதிரி பேசும்போது ராதா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் காரணத்திற்காக கொடுப்பது தவறு; அது ஒரு அரசியல் காரணமாகும். தயவுசெய்து, நான் இப்போது சொல்லுகிறேன். முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது, நிதி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். எனவே, தயவு செய்து இதை நீங்கள் அறிவிக்க.......

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. லத்தீப் அவர்கள் என்னை மிரட்டக்கூடாது.

திரு ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எம்.எல்.ஏ. ஆஸ்டலில் போன் இருக்கின்றது. லோகல் கால்களை இலவசமாகப் பண்ணுகிறார்கள். ஆனால், குவாட்டர்சிலே போன் இருந்தால் அதற்கு லோகல் சார்ஜ், ரெண்டல் சார்ஜ் எல்லாம் வாங்குகிறார்கள். ஆஸ்டலிலே தங்குகின்ற காலத்திலே எப்படி லோகல் கால்களுக்கு இலவசமாக அனுமதிக்கப்படுகின்றதோ, அதைப்போல் குவாட்டர்சிலே தனித் தனியாக இருக்கும் போன்களுக்கும் லோகல் சார்ஜ் போன்றவைகளை இலவசமாக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நேரம் ஆக ஆக கோரிக்கைகள் அதிகமாகும் என்று அஞ்சுகின்றேன். ஆக, சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். திரு. லத்தீப் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களோடு பேசியதாகவும், முதல் அமைச்சர் அவர்கள் தினப் படி ரூ. 35 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தித் தரப்படும் என்று கூறியதாகவும் சொன்னார்கள். அதுபோல் ஒரு முறை ஐந்தாண்டுக் காலம் தொடர்ந்து இந்த அவையிலே அங்கத்தினர்களாக இருந்தவர்களுக்கு பென்ஷன் தரலாம் என்ற கருத்தினை முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று அவர்கள் சொல்வதை நான் நம்புகிறேன். மாண்புமிகு லத்தீப் அவர்கள் உண்மையே பேசிப் பழக்கப்பட்டவர் என்ற காரணத்தினால், உண்மையைத்தான் பேசிஇருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால், திரு.லத்தீப் அவர்கள் வழக்கறிஞர். வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தினால், நான் சொல்வதைப் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். இங்கே கொண்டு வந்த இந்த மசோதாவில் நீங்கள் சொல்லுகின்றவைகள் சேர்க்கப்படவில்லை. ஆகவே புதிய மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் நல்லது. கொள்கை அளவில் இதை ஏற்றுக்கொள்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: இதற்கு மசோதா தேவையில்லை எக்சிக்யூட்டிவ் ஆர்டரிலேயே போடலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். திரு. லத்தீப் அவர்களின் உணர்வை நான் புரிந்துகொள்ளாமல் இல்லை காலையிலே பேசும்போது சொன்னார்கள். சென்னையிலே இருந்து செங்கற்பட்டுக்கு போய்விட்டு வந்தால் நான் ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் சம்பாதிக்கிறேன், வழக்கறிஞர் தொழிலிலே என்று குறிப்பிட்டார்கள், அவ்வளவு தலைசிறந்த வழக்கறிஞரை இந்த மாமன்றம் பெற்றிருப்பதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன், அவருக்கு ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் என்றால். மாதத்திற்கு 30,000 ரூபாய், சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகள் போனாலும். மாதம் 25,000 ரூபாய் வரும், இப்பொழுது கொடுக்கின்ற தொகை 750 போதாது. இதையெல்லாம் ஈடுகட்டித் தருவதற்கு இந்த அரசு இல்லை. திரு லத்தீப் அவர்கள் ஒரு எச்சிகியூடிவ் ஆர்டரிலே நிறைவேற்றலாம் என்று குறிப்பிட்டார்கள், நாம் மக்கள் மன்றத்திலே இருக்கிறோம். சட்ட மன்றத்திலே இருக்கிறோம். அதனால். சட்ட மன்றத்திலே மசோதாவாகக் கொண்டுவந்து, சட்டமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, இதைச் சட்டமாக ஆக்கினால், ஜனநாயக அடிப்படையிலே அமைந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

விதியைத் திருத்தி, இதை எக்சிகியூடிவ் ஆர்டரிலே போடலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நான் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதை நம்பி 35 ரூபாய் தினப்படியை, 50 ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்ற அறிவிப்பை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 2–20]

அதோடு ஒரு முறை ஐந்தாண்டுக் காலம் தொடர்ந்து உறுப்பினராக இருந்தவர்களுக்கு பென்ஷன் உண்டு என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஐந்து வருஷம் என்று இருப்பதை ஒரு முறை என்று மாற்ற வேண்டும். இரண்டு மூன்று ஆண்டில் இறந்துவிட்டால் என்ன செய்வது ? ' ஒரு டர்ம் ' என்று போடவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னிக்க வேண்டும், மங்களகரமான சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட அமங்கலமான வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தக் கூடாது. ' ஒன் டர்ம் ' என்று குறிப்பிடுகிறேன். வாசகத்தைப் பொறுத்தவரை அதற்கு தனி மசோதா வேண்டுமென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இவ்வளவும் சொன்ன பிறகும் திரு. ஆறுமுகத்திற்குத் திருப்தி ஏற்படவில்லை என்றால் ஆண்டவனால் கூட உங்களுக்குத் திருப்தி உண்டாக்க முடியாது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஐந்து வருஷத்திற்குள் சட்டசபை கலைக்கப்பட்டு விட்டால்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் திருப்பியும் சொல்கிறேன், ' ஒன் டர்ம்' என்று குறிப்பிட்டேன். அசெம்பிளி டிசால்வ் ஆனாலும் அது ஒரு டர்ம்தான், இன்னும் ஒன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன், அவ்வளவு சுலபமாக இது கலைக்கப்படமாட்டாது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி :—

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல 25

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 8.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—பிரிவு 8 இச்சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தரப்பில் கீழ்க்கண்ட திருத்தத்தை நான் மொழிகிறேன்,

"In clause 8, after the words 'either singly or with his or her spouse' insert the words 'or any other relative'".

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தினப்படி 35 ரூபாயாக இருந்ததை 50 ரூபாயாக உயர்த்திடுமென்று அறிவித்திருக்கிறார்கள், அதுவும் தேவையில்லை. சரியானது அல்ல, தமிழ்நாடு ஜனங்கள் அதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் அதைச் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்ற முறையில் சொல்கிறார்கள். அது இந்த அவைக் குறிப்பேட்டில் நிச்சயம் இடம் பெறும் என்ற நம்பிக்கையோடு அவர் இருக்கலாம்.

In clause 8, after the words 'either singly or with his or her spouse'

என்று இருப்பதில்—இது லத்தீப் அவர்களுக்கு பிடிக்கும் என்று கருதுகிறேன்,—

insert the words 'or any other relative'.

' ரிலேட்டிவ் ' ஆகத்தான் நீங்கள் எடுத்துக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன், சொந்தக்காரர்கள் என்று சொல்லும்போது எல்லோரும் சொந்தக்காரர்கள்தான்.

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படியானால் நான் ஒரு முஸ்லீம். முஸ்லீமைத்தான் கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று வரும். முஸ்லீம் அல்லாத பிரண்ட்சும் எனக்கு இருக்கிறார்கள்.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னிக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை இந்து என்றோ, முஸ்லீம் என்றோ, கிறித்தவர் என்றோ பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு நாமெல்லாம் சகோதரர்களாக வாழ்கிறோம். திருலத்தீப் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு போனாலும் நான் அவர் ரிலேட்டிவ் ஆகத்தான் கருதப்படுவேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'In clause 8, after the words 'either singly or with his or her spouse' *insert* the words 'or any other relative'

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது,

பிரிவு 8 திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 9 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது,

பிரிவு 1. முகப்புரை. நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன,

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே. "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1979) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்'' என மொழிகிறேன், இல்லை என்று சொல்கிற உரிமை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்கு உண்டு. இல்லை என்று சொல்கிறபோது எழுப்புகின்ற ஓசையிலே இதயத்திற்குக் கோளாறு ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே. அமைச்சர்கள் பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பையும் அறிவிக்கவில்லை. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது பற்றி அறிவிக்க வேண்டும். எங்களைவிட அவர்களுக்குப் பலவிதக் கஷ்டங்கள் இருக்கின்றன.

(பதில் இல்லை).

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப் பெற்றபடி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

152. திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையிலுள்ள கேரள அரசின் மர விற்பனை நிலையம் தனது மர விற்பனை மீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 5—3—1979 ஆம் தேதி யிடப்பெற்ற அரசாணை எண். 243-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 193. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

* 194. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1979).

* 23-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

1979 ஏப்ரல் 25]

** 195, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 30/1979).

** 196. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5.) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1979).

இணைப்பு I.

[343-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 815-க்கான விடையைக் காண்க.]

திருச்சிராப்பள்ளியில் 25—4—1978 அன்று நடந்த மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு,

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அவைக் கூட்டத்தில் 25—4—1978 அன்று காலை 10 மணிக்கு மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும். அக்குழுவின் தலைவருமான திரு. எஸ். இராகவானந்தம் அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கீழ்க்காணும் உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்தனர்,

1, திரு. ச. ராமச்சந்திரன்,
அரசுச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை,
சென்னை-9.

2, திரு. எஸ். நரசிம்மன்,
தொழிலாளர் நலத்துறை ஆணையாளர், செயலாளர்,
சென்னை-5.

3, திரு. ஹரி ஈஸ்வரன்.
தலைவர்,
தென்னிந்திய தொழிலதிபர்கள் கூட்டமைப்பு.
சென்னை-1.

** 24-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

4. திரு. எம். தங்கவேலு,
தலைவர்,
தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் சங்கம்,
குன்னூர்-1.

5. திரு. கே. டி. கே. தங்கமணி,
பொதுச் செயலாளர்,
அனைத்திந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ்,
11 ஏ, பெருமாள் மேஸ்திரி மேற்குத் தெரு,
மதுரை.

6. திரு. ஏ. நல்லசிவன்,
பொதுச் செயலாளர்,
இந்தியத் தொழிற் சங்க மையம்,
விவேகானந்தர் தெரு,
கே. சாலைப்புதூர்.
மதுரை-18.

7. திரு. எம். எஸ். இராமச்சந்திரன்,
இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ்,
தமிழ்நாடு கிளை,
107, புதிய சிறைச்சாலை,
மதுரை-10.

8. திரு. வி. பெருமாள்,
பொதுச் செயலாளர்,
அண்ணா தொழிற்சங்கப் பேரவை,
156. லாயிட்ஸ் சாலை,
சென்னை-14.

9. திரு. கே. எஸ். நாராயணன்,
பொதுச் செயலாளர்.
தமிழ்நாடு தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ்,
'சத்தியமூர்த்திபவன்'
54, ஜெனரல் பேட்டர்ஸ் சாலை,
சென்னை-2.

10. திரு. கே. கோபால்,
பொதுச் செயலாளர்,
தொழிலாளர் முன்னேற்றக் கூட்டமைப்பு:
அறிவகம்,
24. சூரியநாராயண செட்டித் தெரு.
இராயபுரம், சென்னை-13.

1979 ஏப்ரல் 25]

11. திரு. கு. ரமணி, எம்.எல்.ஏ.,
13 ஏ, அன்னபூர்ணா லே அவுட் (Lay out ,
புது சித்தப்புதூர்,
கோயம்புத்தூர்-18.

12. திரு. அருள்தரும் பெருமாள்,
கைத்தறி துணி ஆலைகள் இணைச் செயலாளர்,
சென்னை-1.

13. திரு. என். கண்ணன்,
தென் பிராந்திய இந்தியப் பொறியியல் தொழிற் சாலைச் சங்கப் பிரதிநிதி, சென்னை-1.

சிறப்பு அழைப்புப் பெற்றவர்கள் :

1. திரு. வி. லக்ஷ்மிரத்தன்,
சர்க்கரை ஆலை இயக்குநர்,
சென்னை-35.

2. திரு. கே. துரைசாமி,
சின்கோனா இயக்குநர்,
உதகமண்டலம்.

3. திரு. எம். பி. குத்தாலம்,
புள்ளி விவரத் துறை துணை இயக்குநர்,
சென்னை,

சென்னை, அனைத்து இந்திய பொருள் தயாரிப்பாளர்கள் நிறுவனப் பிரதிநிதி திரு. என். வேங்கடரமணி, கூட்டத்திற்கு வர இயலாமை குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார்,

மேற்படிக்குழுவின் செயலாளரான தொழிலாளர் நலத்துறை ஆணையர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரையும் அக்குழுவின் உறுப்பினர்களையும் வரவேற்று அக்குழுவின் தலைவரை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்.

முதற்கண் தலைவர், மேன்மை பொருந்திய இந்த அவையில் உறுப்பினர்கள்மாட்டு தனக்குள்ள பெருமதிப்பைத் தெரிவித்துக் கொண்டதுடன், இந்த அவை தெரிவித்த கருத்துக்கள் இயன்ற அளவுக்கு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதற்கும் உறுதியளித்தார், மேலும் அவர் இக்குழு இனிமேல் இயன்ற வகையில் அடிக்கடி எவ்வாறாயினும் மூன்று திங்களுக்கு ஒருமுறை யாவது கூட்டம் நிகழ்த்தும் என்றும் கூறினார். எல்லா வகையான தொழிலாளர் சட்டங்களையும் திருத்தி அமைப்பது குறித்து ஆலோசனை கூறும் பொருட்டுத் தொழிலதிபர்கள்,

தொழிலாளர்களின் உயர்மட்டத் தலைவர்கள் கொண்ட முத்தரப்புக் குழு ஒன்றை, விரைவில் அரசு நிறுவும் என்றும் அவர் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். இம்மாநிலத்தில் தொழிலமைதியை நிலை நாட்ட தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகிய இருதரப்பைச் சார்ந்த உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பை வேண்டினார். மேலும் அவர் நிகழ்ச்சிக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் பற்றி அவர்களது மேலான கருத்துக்களைத் தெரிவிக்கும்படி உறுப்பினர்களைப் கேட்டுக் கொண்டார்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னர், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஹரி ஈஸ்வரன், திரு. கே. கோபால். திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., திரு. ஏ. நல்லசிவன், திரு. எம்.எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் வாரியததின் கூட்டம் கூட்டப்பட்டதை வரவேற்றுப் பேசினார்கள். கூட்டத்தின் விவாதம் மேல் மட்டத்தில் நடத்தப்பட வேண்டுமென்று பொதுவான கருத்தைச் சொன்னார்கள். இதற்காக அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். தனிப்பட்ட தொழிற்சாலை அல்லது தலைவர்கள் அல்லது தகராறுகள் தொடர்பான விவகாரங்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படக்கூடாது, கூட்டம் பற்றி உறுப்பினர்களுக்குப் போதிய அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும், கூட்ட நடவடிக்கைக் குறிப்பு குறித்து முன்கூட்டியே உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். விவாதிக்கப்பட வேண்டுமென உறுப்பினர்கள் தெரிவிக்கும் பொருள்கள் அனைத்தும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டும். விவாதத்தில் வாரியத்திற்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக அவர்கள் கூறினார்கள்.

வருங்காலத்தில் கூட்டம் கூட்டுவதுபற்றி 14 நாள் அறிவிப்புக் கொடுக்கப்படும் என்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்பு முறையாக அனுப்பி வைக்கப்படும் என்றும் தலைவர் உறுப்பினர்களுக்கு உறுதி அளித்தார், உறுப்பினர்கள் தெரிவிக்கும் எல்லாப் பொருள்களும், அவற்றை ஒன்று சேர்க்கவோ அல்லது வாசகத்தை திருத்தவோ தலைவருக்கு உள்ள உரிமைக்கு உட்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும்,

அடுத்தக் கூட்டம், 1978ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளன்று சென்னையில் கூட்டப்படும் என்றும், அவசியமாயின் கூட்டம் 26-5-1978 அன்றும் தொடர்ந்து நடக்கும் என்றும் தலைவர் உறுப்பினர்களுக்கு தெரிவித்தார். புதிய பொருள்கள் எவையேனும் இருந்தால் அவற்றை 5—5—1978 ஆம் நாளன்றுக்கு முன்னர் தெரிவிக்கலாம் என்றும் அவர் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்,

நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

1979 ஏப்ரல் 25]

இனம் எண் 1 : ஊதிய வரம்பை ரூ. 400 லிருந்து உயர்த்து வதற்காக தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித் துறைகளுக்கு நிகராக தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 81, 82-வது விதிகளைத் திருத்துதல்,

ரூபாய் 1,000 வரையிலான உச்ச வரம்புக்கு வகை செய்து தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளைச் சேர்ந்த 81, 82-வது விதிகள் திருத்தப்பட்டுள்ளன என்றும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கக் தேவையில்லை என்றும் உறுப்பினர்களுக்குத் தெரியப் படுத்தப்பட்டது.

இனம் எண் 2 : தொழில் நிறுவனங்களில் சம்பள பிடித்த சேமிப்புத் திட்டத்தை (Pay Rolls Savings Scheme) தீவிரமாகச் செயல்படுத்துதல்.

விவாதத்திற்குப் பின்னர், சம்பந்தப்பட்ட துறையின் மூல மாக தொழிலாளர்களிடையே இத்திட்டத்தைப் பிரபலப்படுத்து வதற்காக, அரசு அதிகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இத்திட்டத்திற்கு முழு ஆதரவு தர வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இனம் எண் 3 : மலைத் தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளிலிருந்து களப்பணிக்கு மாற்றப்படும்பொழுது அவர்களுக்குப்பதவி ஊதிய வித்தியாசத் தொகை (Job differentials) வழங்குதல், தலைவர் தெரிவித்த யோசனையின் பேரில், தமிழ் நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர், திரு. எம். தங்கவேலு அவர்கள் இயன்ற வரையில் பதவியிலிருந்து ஓய்வு பெறும் நிலையில் உள்ள தொழிலாளர்கள் எவரும் களப் பணிக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என உறுதியளித்தார். வேறுபாடு ஏதேனும் இருந்தால், அது குறித்து தொழிலாளரின் பிரதிநிதிகளுடன் விவாதித்து தீர்வு காணப்படும் என்றும் அவர் கூறினார்.

திரு. கே. கோபாலும், திரு. எம். எஸ். இராமச்சந்திரனும், தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலிருந்து களப்பணிகளுக்கு மாற்றப்படும்பொழுது அவர்களது ஊதியம் குறைக்கப்படக் கூடாது எனக் கருதினர். இச் சலுகையை பதவி ஓய்வு பெறு பவர்களோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது என்று அவர்கள் முதலில் கோரினர். தொழிலதிபர்களின் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக மேலும் விவாதித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கலாம் என்று தலைவர் உறுப்பினர்களுக்கு யோசனை தெரிவித்தார்.

[1979 ஏப்ரல் 25

இனம் எண் 4 : தொழிற்சாலை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்காக உடற்பயிற்சி, அக விளையாட்டுகள், நூலகங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் தொழிற்சாலைச் சட்டத்தில் தொழிலாளர் நலன் தொடர்பாக உள்ள விதித் துறைகளைத் திருத்துதல்.

விவாதத்திற்குப் பிறகு, இதனை தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்தித் தீர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

இனம் எண் 5 : கட்டிடக் கட்டுமானப் பணிகள் முதலியவற்றில் அமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர்களுக்குள்ள சில குறைகள். தமிழ்நாடு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல்-நீக்குதல்) விதிகளைச் சேர்ந்த 76, 77ஆம் விதிகளின் விதித் துறைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்கத் தேவையில்லை எனக் கருதப்பட்டது.

இனம் எண் 6 : தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தின் 41-வது பிரிவின் விதித் துறைகளிலிருந்து மருத்துவ மனைகளுக்கு விலக்கு அளித்தல்.

தொழில் தகராறுகள் சட்டத்தின் 2 (j) பிரிவின் கீழ் வரும் ‘தொழில்’ என்னும் சொல்லின் பொருள் வரம்பை விரிவுபடுத்தி உச்ச நீதி மன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பின் காரணமாக, மருத்துவ மனைத் தொழிலாளர்கள், தொழில் தகராறுகள் சட்டத்தின் 2-ஏ பிரிவின் விதித் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தலைவர் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். எனவே, மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதப்பட்டது.

இனம் எண் 7 : தொழில் நிறுவனங்களில் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்க சட்டம் இயற்றுதல்.

தலைவர், இது சம்பந்தமான வரைவுச் சட்ட முன் வடிவு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை அவர்களின் நாட்டத்திற்குக் கொண்டு வந்து, அது குறித்து கருத்துக்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். அரசு அச்சட்ட முன் வடிவை சட்ட மன்றத்தில் பரிசீலனைக்கு வைக்கும்போது அக்கருத்துக்களை பரிசீலனை செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இனம் எண் 8 : மக்கள் தொகைக் கல்வி, குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றில் தொழிலாளர் நிர்வாகத்தின் பங்கு.

1979 ஏப்ரல் 25]

இந்த இனம் குறித்து விவாதிக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதப்பட்டு கைவிடப்பட்டது.

இனம் எண் 9 : இணக்கப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்காக தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்குச் சிறப்பு அனுமதி வழங்கல்.

இணக்கப் பேச்சு வார்த்தையில் கோரிக்கைகள் எழுப்பிய எல்லா பதிவு பெற்ற தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் இணக்க பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக அவர்களுக்கு உச்ச வரம்பு எதுவுமின்றி சிறப்பு தற்செயல் விடுப்புக் கொடுக்கப் பட வேண்டுமென தொழிலாளர் பிரதிநிதிகள் விரும்பினர். தொழிலாளர் நீதி மன்றங்கள், நடுவர் மன்றங்களில் உள்ள வழக்குகளுக்கும் தொழிலாளர்கள் சென்றுவர அத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

சிறப்புத் தற்செயல் விடுப்பு பெறுவதற்கான தங்களது பிரதி நிதிகளைத் தொழிற் சங்கங்கள் தான் நியமனம் செய்ய வேண்டுமே யொழிய தொழிலதிபர்கள், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை என்று தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக மற்ற தொழிலதிபர்களது பிரதிநிதிகளையும் கலந்தாலோசிக்கத் தனக்கு அவகாசம் தேவை யென்றும் இதனை அடுத்த கூட்டத்தில் பரிசீலிக்கலாம் என்றும் தலைவர் கூறினார்.

தொழிலாளர் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்ட தொழி லதிபர்கள் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்கள் என்னவென்பதை முடிவு செய்துகொண்டு அடுத்த கூட்டத்திற்குத் தயாராக வர வேண்டும் என்று தலைவர் கருத்துத் தெரிவித்தார். எனவே இது அடுத்தக் கூட்டத்திற்கு ஒத்திப் போடப்பட்டது.

இனம் எண் 10 : வேலை நிறுத்தம், கதவடைப்புக் காலங் களில் தேசிய பண்டிகை விடுமுறை நாட்களுக்குப் பணியாளர் களுக்கு ஊதியங்கள் வழங்கப் படுவதை முறைப்படுத்துவதற்காக தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டத் தைத் திருத்துதல்.

மற்றும்

இனம் எண் 11: தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்களை கதவடைப்பு செய்வதாக அறிவிக்கும் முன் தொழிலதிபர் அரசின் அனுமதி பெற வேண்டியதைக் கட்டாய மாக்குவது தொடர்பான அரசின் செயற் குறிப்புக்களைக் கைவிடுதல்.

தென் இந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கப் பிரதிநிதி வராத காரணத்தால், இவை தொடர்பான விவாதம் அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி போடப்பட்டது.

[1979 ஏப்ரல் 25

இனம் எண் 12 : சின்கோனா மலைத் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்குத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிகராக, ஊதியமும், படிகளும் வழங்குதல்.

விவாதத்திற்குப் பின்னர், தொழிலாளர் நல தனி துணை ஆணையாளர் சி.ஐ.டி.யு. பிரதிநிதியுடன் மேற்கொண்டும் இது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்தி அரசுக்குத் துணை அறிக்கை ஒன்றை பரிசீலனைக்காக அனுப்பி வைக்க வேண்டும் எனத் தலைவர் கூறினார்.

நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பிற பொருள்கள் தொடர்பான விவாதம் அடுத்தக் கூட்டத்திற்கு ஒத்திப் போடப்பட்டது.

இணைப்பு II.

[..........353....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 822-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும், மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனமும் சேர்ந்து நிதியுதவி அளித்த கீழே கொடுக்கப்பட்டுள்ள பதினான்கு நிறுவனங்கள் நலிந்து போனதாக அறிவிக்குமாறு சிறு தொழில்கள் சீரமைப்புக் குழுவினை கேட்டுக் கொண்டுள்ளது:-

1. திருவாளர்கள் ஷீட் மெட்டல் பிரஸ்ஸிங் அண்டு என்ஜினியரிங் என்டர்பிரைஸஸ், எழும்பூர்.
2. திருவாளர்கள் சவுத் இந்தியா ஸ்டீல் ரோலிங், சென்னை.
3. திருவாளர்கள் பிளாஸ்ட்ரோ இன்டஸ்ட்ரீஸ், சென்னை.
4. திருவாளர்கள் நேஷனல் எக்ஸ்ட்ரேக்ஷன் இன்டஸ்ட்ரீஸ், சேலூர், ஆரணி தாலுக்கா. வட ஆற்காடு மாவட்டம்.
5. திருவாளர்கள் புவனேஸ்வரி இன்டஸ்ட்ரீஸ், சென்னை
6. திருவாளர்கள் இந்துஸ்தான் டொமஸ்டிக் பிராடக்ட்ஸ் அண்டு அப்ளயன்சஸ், சென்னை.
7. திருவாளர்கள் அத்ரேயா இன்கார்பரேஷன்ஸ், சேலம்
8. திருவாளர்கள் ஸ்ரீஅம்பிகா இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர்.
9. திருவாளர்கள் மணி இன்டஸ்ட்ரீஸ், சென்னை.
10. திருவாளர்கள் வி. குமார் ஹொஸைரி, திருப்பூர்.
11. திருவாளர்கள் கிளவுட்ஸ் மைக்ரோபோன்ஸ், வேலூர்.
12. திருவாளர்கள் காமக் பிளாஸ்டிக்ஸ் லிமிடெட், கிண்டி.
13. திருவாளர்கள் சுமதி இன்டஸ்ட்ரீஸ், சென்னை.
14. திருவாளர்கள் சதர்ன் அக்ரோ கெமிக்கல்ஸ் (பி) லிமிடெட், சென்னை.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC 1979
MADRAS

IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Ameeji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS